Vol.01 Issue .01 2017

# Translator

## மொழிபெயர்ப்புக் கலைக்கான இதழ்



Translation Studies, university of Jaffna

200/

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.Majoorathy



# Translator

மொழிபெயர்ப்புக் கலைக்கான இதழ்

| வழிகாட்டல் | Guidance |
| --- | --- |
| திரு.கண்ணதாஸ் | Dr.Kannathas |
| இணைப்பாளர், மொழிபெயர்ப்புக் கற்கைகள், யாழ் பல்கலைக்கழகம் | Coordinator,Translation studies, University of Jaffna. |
| **தலைமை ஆசிரியர்கள்** | **Editors** |
| கௌதமி.யோ | Gowthamy.Yo |
| பெ.வினோத்சன் | P.Vinothsan |
| **உதவி ஆசிரியர்கள்** | **Sub-Editors** |
| சு.ரிசிகா | S.Tishika |
| சு.மதிவதனி | S.Mathivathani |
| சி.செலீனா | S.Sheliyna |
| M.H. பர்வின் ஹனா | M.H.Farwin Hanaa |
| வெளியீடு: | **Published by:** |
| மொழிபெயர்ப்புக் கற்கைகள் அலகு, யாழ் பல்கலைக்கழகம், 2017. | Translation studies Unit, University of Jaffna, 2017. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Vice Chancellor

It is great pleasure for me to give this message to 'Translator, The Art of Translation' magazine. It is noted that all the articles of this magazine are created and translated by the students of translation studies. This issue covers the language issues in contemporary society, literature pieces and variety of transltion works.

I wish the editorial board and the students of the translation studies to continue to publish this magazine annually.

Prof.R.Vigneswaran
Vice Chancellor,
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Dean

I am glad to know that students who are following Translation Studies are bringing out their first volume on "The Art of Translation". This magazine is a forum which could aptly use for popular as well as creative writing. I am sure that this magazine will be informative and resourceful to the students of translation studies.

Translation Studies is one of the recently introduced disciplines in the Faculty of Arts, University of Jaffna. Students are selected through separate window of UGC under competitive manner. I observe continually the extra curricular activities of the students of the Translation Studies for the last couple of months. They are actively participating in different activities outside of the classroom which definitely enhance their intra and inter personal skills.

Publishing a magazine by the students promotes numerous skills and healthy interaction between academic community and students, it also gives an intellectual and academic platform to the students to express their knowledge and experiences.

I convey my good wishes to the students of Translation Studies and the Coordinator in their endeavors.

Dr.K.Suthakar,
Dean,
Faculty of Arts
University of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Co-ordinator

We, the members of the Translation Studies Society in the Faculty of Arts, University of Jaffna are excited in the tumult of the birth of our magazine. The idea for this magazine emerged in weekly Forums of our society.

When we set out to create this magazine, one thing we agreed on right away was to steer it a product-driven magazine with a collection of inspired and instructive articles written by our students and scholars who work hard in our field. We are honored to share the work of so many competent contributors.

This magazine, as it is a maiden one, will be getting more interesting as it matures. Publishing a magazine is a tremendous task as it is involved with a series of actions like collecting articles, reviewing, correcting, printing and finding financial assistance. Today, happily, this magazine is a great success of our staff and its unique editorial mission a lot,

I, the Co-coordinator for Translation Studies Unit, am so glad in bringing our dream true.I congratulate the editorial board for their endeavour.

Dr.S.K. Kannathas
Co-ordinator,
Translation studied Unit,
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Editor's Note

## "Every Act of Communication is a Miracle of Translation."

Welcome to 'Translator' (The Art of Translation), Magazine. This is the maiden issue of our translation studies unit, University of Jaffna. It is great pleasure to write this lead-off editorial in 'Translator', a publication for those who are interested in translation, language and literature. Our vision is to introduce the concept of translation in various fields. We think, there are many translation issues running across the world including our country – now we intend to cover them.

The art of translation is the theme for this issue. The articles describe different needs of translation throughout the private and public sectors and also they have a thirst for combining the people through the art of translation and express the language issues which are happening in our society.

This first issue of the magazine examines the concept of introducing the Art of translation. In covering controversial topics, the magazine will make every effort to provide balanced coverage and a representative mix of opinions, although its starting point will be a respect for the translation studies unit and its values.

All articles are created or translated by the students of translation studies. This issue covers the language issues in the contemporary society, literature pieces and variety of translation works. Effectively, translation is one of the most important things we can contribute to future generations.

I hope you enjoy our first attempt with a great acceptance. We faced great challenges when we have involved in this issue, and I am looking forward to a stimulating discussion in the forum that this magazine hopes to provide. We welcome your feedback and you will see the next volume with a new editorial team.

Gowthamy.Yo

**Editor of Translator.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contents

***Essays**

- மொழிபெயர்ப்புக் கற்கைகள் அறிமுகமும் அவசியமும்
- மொழிபெயர்ப்பு ஒரு வரலாற்றுத் தொடர்
- இன நல்லிணக்கமும் மொழிபெயர்ப்பும்
- மலருமா மொழிச் சமநிலை?
- விளம்பர மாயையும் மொழிபெயர்ப்பு இடர்பாடுகளும்
- Trilingual Sri Lanka
- Tourism in translation
- Overview about a sworn translator
- Why translation of poetry is so difficult?!
- Challenges faced by Interpreters

***Poetry**

- I'm
- Stage monster

***Translation of Poetry**

- Five poetry translation from English to Tamil
- She is in my sense
- Four poetry translation from tamil to English
- Two kind of Rain

***Short story**

- சோனகத் தெரு
- தெருக்கூட்டி

***Translation of Short Fiction**

- கோடைகாலத்து மழை

***Flash story**

- கனவிலே கொல்லலாம்

***Interviews**

- 'அகராதியில் அர்த்தங்கள் தனித்து குடியிருப்பதில்லை'
மொழிபெயர்ப்பாளர் லக்ஸ்மி ஹோல்ம்ஸ்ரோமுடனான நேர்காணல் மொழிபெயர்ப்பு

- 'அறியப்படாத வாயிலின் அருகே'
சட்ட மற்றும் ஆவண மொழிபெயர்ப்பாளர் அஜ்மல்கானுடனான நேர்காணல்

***Translation of article**

- சன்னங்கள் தாண்டிய சன்னதம்
- சுதந்திரத்தின் பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்புக் கற்கைகள் அறிமுகமும் அவசியமும்

## By: T.Jeroojan

இன்று அதிகளவில் பேசப்பட்டு வரும் எண்ணக்கருக்களில் மிகவும் முக்கியமான ஒன்று மொழிபெயர்ப்பு ஆகும். ஆயினும் இதன் முக்கியத்துவம் பிரக்ஞை பூர்வமாக இன்னும் உணரப்படவில்லை. எனினும் வாழ்க்கையின் இன்றியமையாத துறைகளில் இதுவும் ஒன்று. மனிதர்கள் பலமொழிகளைப் பேசுகிறார்கள் ஒவ்வொரு மொழிக்கும் ஒருகலாச்சாரப் பாரம்பரியம் இருக்கிறது. ஒருகுழுவினர் சிந்திப்பதுபோல இன்னொரு குழுவினர் சிந்திப்பதில்லை, உணர்வதில்லை. கலாச்சாரங்கள் வேறுபடுகின்றன. பல்வேறு மொழிக் குழுக்கள் தங்களுக்குள் உறவுகொள்ள மொழிபெயர்ப்பு ஒரு வரப்பிரசாதமாகும். ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்ளும் ஒருவர் சிரமமின்றி ஒரு இனத்தின் வாழ்வியல் அம்சங்களை இதன் மூலம் அறிந்துகொள்ளமுடியும். இவ்வகையில் மொழிபெயர்ப்பு நமது படிப்பிற்கும் ஆராய்ச்சிக்கும் உரிய துறையாகின்றது.

மொழிபெயர்ப்பு என்பது ஒருமொழியில் இருக்கும் கருத்து எவ்வித சிதைவும் இன்றி இன்னொரு மொழிக்கு கொண்டுசெல்லப்படுதல் ஆகும். அதாவது ஒருமொழியில் சொல்லப்பட்டதை அல்லது எழுதப்பட்டதை பொருளும் தொனியும் மாறாமல் மற்றொருமொழியில் வெளிப்படுத்துவதே மொழிபெயர்ப்பு ஆகும்.

ஒருமொழியில் காணப்படுகின்ற தத்துவங்கள், அறிவியல் உண்மைகள், சமயபோதனைகள், சீர்திருத்த கருத்துக்கள் அம் மொழியிலேயே இருந்துவிட்டால் அம் மொழி பேசாத மக்களை அவை எட்டாது. இதனால் அம் மக்களுக்கும் இழப்பு ஏற்படுவதோடு அக் கருத்துக்களின் தளமும் சுருங்கிவிடும். ஒரு மொழிபெயர்ப்பாளன் என்றைக்கோ செய்த உதவியினால்தான் நாம் இன்று கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களை அறியமுடிந்தது. கார்ல் மாக்ஸ், காந்தி, ஓஸோ போன்ற உலகசிந்தனையாளர்களையும் அறியமுடிந்தது. இவ்வளவு ஏன் இன்றைய செய்தி ஊடகங்கள் கூட அந்தந்த மொழிகளுக்கு மொழிபெயர்த்துத்தான் செய்திகளைத் தருகின்றன. நமது அறிவைச் சோதித்துப்பார்த்தால் அதில் ஏறக்குறைய முக்கால்வாசி மொழிபெயர்ப்புக்கள் வாயிலாகத்தான் எட்டியுள்ளன. மொழிகளின் வளர்ச்சிக்கும் அதன் வாயிலாக சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் மொழிபெயர்ப்புபெரும் தொண்டாற்றுகின்றது என்பது தெளிவு. மொழிபெயர்ப்பின் மூலம் இலக்குமொழி மட்டுமல்ல மூலமொழியும் கூட வளர்ச்சியடைகின்றது என்பது முரண் உண்மை. எத்தனையோ கலாச்சாரங்களுக்கிடையிலான உடன்பாட்டு அம்சங்களையும் எளிதாகச் சுட்டிக்காட்டி ஒருமைப்பாடு கொள்ளவைக்கிறது. பலமொழிகளைக் கற்றுக்கொள்ள ஒருபயிற்சியாகவும் கலாசாரப் படைப்புகளுக்கான அடிப்படையாகவும் அமைகிறது.

இப்படிப்பட்ட பாரிய தொண்டினை ஒரு மொழிபெயர்ப்பாளன் சமூகத்திற்கு ஆற்றுகிறான். "ஒருநாட்டின் அல்லது பிரதேசத்தினை சான்று பகரும் ஆய்வறிவாளரைப் போல எழுத்தாளருக்கும் ஒரு சிறப்பான குறியீட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கான பாத்திரம் உண்டு இவ்வாறு சாட்சிபகர்வதன் மூலம் இந்த அனுபவத்திற்கு ஒரு பொதுவான அடையாளம் இடப்படுவதுடன் பூகோளரீதியாக மேற்கொள்ளப்படும் சொல்லாடலில் அது என்றென்றும் பொறிக்கப்படும்" என்கிறார் எட்வேட் ஸ்டீல். அந்தவகையில் பன்மொழி சூழலில் ஒரு மொழிசார்ந்த மக்களின் வாழ்வியல் அனுபவங்களை, அம் மொழிசார்ந்த சமூகக்குடும்பத்தின் கலாசார கூறுகளை மற்றொருமொழியில் தரும் மொழிபெயர்ப்பாளருக்கும் அத்தகைய குறியீட்டுப்பாங்கான பாத்திரம் உண்டு என்பதை நாம் துணிந்து கூறலாம். மொழி என்பது வெறுமனே ஒரு தொடர்பாடல் ஊடகம் என்பதற்கு அப்பால் தான் சார்ந்த சமூகத்தின் கலாச்சாரம், பண்பு, வரலாறு முதலான அனைத்து கூறுகளையும் தன்னுள் கொண்டுள்ள ஒரு களஞ்சியம் ஆகும். எனவேதான் ஒருமொழியில் இருந்து மற்றொரு மொழிக்கு ஒருவிடயத்தைக் கொண்டு செல்லும் மொழிபெயர்ப்பாளர் முக்கியத்துவம் பெற்றவர் ஆகின்றார். தன்னுடைய பணிமூலம் அவர் பின்வரும் அடைவுகளை எய்துகிறார்.

1. தன்னுடைய மொழியை வளப்படுத்துகிறார்.
2. அறிவியல், தொழில்நுட்பம் முதலான பல்துறை வளர்ச்சிக்கு உதவுகிறார்.
3. இரு சமூகங்களுக்கிடையில் ஒரு பாலமாக இருந்து பரஸ்பரபுரிதலுக்கு வழி சமைக்கிறார்.
4. தேசிய ஒருமைப்பாட்டையும் இன ஐக்கியத்தையும் வலுப்படுத்துகிறார்.

உண்மையில் மொழிபெயர்ப்பின் குறிக்கோளானது சமூகத்தில் காணப்படுகின்ற மொழிரீதியான தடைகளை நீக்கிச் சமூகத்தில் கருத்துறவை ஏற்படுத்துவதாகும். இலங்கை போன்ற பல்லின பல கலாச்சார பன் மொழிச்சூழலில் மொழிபெயர்ப்பின் தேவைமிகவும் காத்திரமானதாகும். தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் என நான்கு இன மக்கள் வாழ்கின்ற இலங்கையில் அடிப்படையில் இலங்கையர்களாக இருந்தாலும் மொழி அவர்களுக்கிடையிலான தொடர்பாடல் மற்றும் இடைத் தொடர்புகளில் பெரும் தடையாக இருந்துவந்துள்ளது. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் முறையான புரிந்துணர்வும் பரஸ்பர உரையாடலும் அற்ற நிலையே இலங்கையில் இனப் பிரச்சனைக்கு வித்திட்டது. யுத்தம் முடிந்த பின்னரும் கூட இவ் இரு சமூகத்திற்கும் இடையில் முறையான நல்லிணக்கம் ஏற்படவில்லை. தமிழ் மக்கள் மீதான இன அழிப்புக்கள் கட்டவிழ்ந்துவிடப்பட்டிருந்தவேளை சிங்களமக்கள் அனைவரும் அதை ஆதரித்தார்களா என்ற எண்ணம் தமிழ் மக்கள் மனங்களிலும் இன்னமும் தமிழ் மக்கள் மனங்களில காழ்ப்புணர்ச்சி உள்ளதா என்ற எண்ணம் சிங்களமக்கள் மனங்களிலும் காணப்பட்டது. இவ்வாறான ஒருநிலைமையை ஓரளவேனும் சீர் செய்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மொழிபெயர்ப்பின் செயற்பாடு காத்திரமானதாகும்.

ஈழத்தின் புகழ்பூத்த இலக்கியவாதியும் இலக்கிய மொழிபெயர்ப்பாளருமாகிய சோ.பத்மநாதன்[சோ.ப] எழுதிய "தென் இலங்கை கவிதை மொழிபெயர்ப்புக்கள்" என்ற நூலில் சிங்கள மக்கள் பலரும் தமிழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான இன அழிப்புக்கள் நிகழ்ந்த வேளை தமிழ் மக்கள் மீது ஒரு நியாயமான கருத்தினையே கொண்டிருந்தார்கள் என்பதனை அறியமுடியும்.

தவிர, இலங்கையில் கல்வித்துறை, நீதித்துறை போன்றவற்றிலும் மொழிபெயர்ப்பின் தேவை மிக இன்றியமையாதது. ஆரம்பத்திலேயே தமிழ் மாணவர்களுக்கான பாடநூல்கள் தமிழில் எழுதப்படுவதில்லை முதலில் ஆங்கிலத்தில் அல்லது சிங்கள மொழியில் எழுதப்பட்ட பின்னரே தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது. அனேகமான துறை சார்ந்த நூல்கள் கூட ஆங்கிலமொழியிலேயே காணப்படுகின்றன. அவற்றைத் தமிழ் அல்லது சிங்கள மாணவர்கள் கற்க வேண்டுமாயின் அங்கு மொழிபெயர்ப்பே உசாவிநிற்கிறது. தமிழ் பிரதேசங்களில் உள்ளநீதவான் நீதிமன்றங்களில் வழக்குகள் தமிழிலேயே நடைபெறுகின்றன. அவ் வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்கின்ற போது அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டிய தேவை உள்ளது. இலங்கைப் பாராளுமன்றங்களில் இலங்கை மொழிபெயர்ப்பாளர்கள் சேவை மிகமுக்கியமான இடத்தைப் பெறுகின்றது. மும்மொழியிலான உரைபெயர்ப்புக்கள் பாரபளுமன்ற உரைபெயர்ப்பாளர்களால் [Interpreters] ஆற்றப்படுகின்றன. இலங்கையில் நடைபெறுகின்ற எல்லா மாநாடுகளிலும் மொழிபெயர்ப்புச் சேவை தவிர்க்க முடியாதது. இவ்வாறு இலங்கையில் எல்லாத் துறைகளிலும் மொழிபெயர்ப்பினதும் மொழிபெயர்ப்பாளர்களினதும் தேவை அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் எந்தவொரு அரசசார் நிறுவனங்களினதும் பெயர்ப்பலகைகளை வைக்கும் போதும் அவை மும்மொழிகளிலும் அமைதல் வேண்டும். அனேகமான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கான தமிழ் மொழி பெயர்ப்புக்கள் சரியாக வழங்கப்படுவதில்லை என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டவேண்டும். உதாரணமாக அரச பேருந்து ஒன்றில் “Reserved for pregnant ladies” என்பதற்கான தமிழ் மொழிபெயர்ப்பாக “கர்ப்பினி நாய்மார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது [Reserved for pregnant dogs] என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ் மொழியில் காணப்படுகின்ற அறிவுப் பற்றாக்குறை காரணமாகவே இவை தவறாக எழுதப்படுகின்றன என்ற அரசின் காரணத்தை ஏற்றுக்கொண்டாலும் அந்தந்த துறைசார் நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளில் ஒருவருக்குக்கூடவா தமிழ்மொழி சார்ந்த புலமை இருக்கவில்லை அல்லது ஏன் அத்தகைய நிறுவனங்களால் ஒரு மொழிபெயர்ப்பாளரை அணுக முடியவில்லை என்பதனையும் சற்றுச் சிந்திக்கவேண்டும். இவ்வாறான மொழி உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்று அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசகரும மொழிகள் திணைக்களம் 1956 என்ற தொலைபேசி இலக்கத்தை ஏற்புடுத்தி அதன் முலமாக கணிசமான அளவு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் சமகால இலங்கையில் மொழிபெயர்ப்பளருக்கான தேவையை உணர்ந்த பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு [UGC] பல்கலைக்கழக மட்டத்தில் மொழிபெயர்ப்பினை தனியொரு கற்கைநெறியாக அறிமுகப்படுத்தியது. 2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் களனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையின் கீழ் ஒரு பிரிவாக ஆரம்பிக்கப்பட்டது பின்னர் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டிலிருந்து சுய உளச்சார்பு பரீட்சை மூலமாக நாடுமுழுவதுமாக 75 மாணவர்கள் இக் கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுகிறார்கள். அவர்களுள் 25 மாணவர்கள் ஆங்கிலம்-தமிழ் ஐ பிரதானமாகக் கொண்ட யாழ்பல்கலைக்கழகத்திற்கும் மிகுதி 50 மாணவர்களும் தலா 25 வீதம் சிங்களம்-ஆங்கிலத்தைப் பிரதானமாகக் கொண்ட களனி மற்றும் சப்பிரகமுவ பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

மொழிபெயர்ப்பு தனியானதொரு கற்கைநெறியாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளராக வரவேண்டுமாயின் இலங்கை மொழிபெயர்ப்பாளர் சேவைகள் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் வரமுடியும். இதற்கு அவர் யாதேனும் ஒரு துறையில் இளங்கலைமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் போதுமானதாகும். மேற்குறிப்பிட்ட மூன்று பல்கலைக்கழகங்களிலிருந்து B.A[Translation studies] என்ற பட்டத்துடன் வெளியேறும் மாணவர்களும் இலங்கை மொழிபெயர்ப்பாளர் சேவைகள் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் Sworn Translators ஆக வரமுடியும்.

எனவே யாழ்பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் மொழிபெயர்ப்புக் கற்கைகள் என்னும் கற்கை நெறி பெயரளவில் இயங்காமல் அதனுடைய தார்மீக பொறுப்புக்களையும் கருத்திற்கொண்டு இயங்க வேண்டியது மொழி இடர்பாடுகளைப் பெருமளவில் எதிர்கொண்டுள்ள இக் காலத்தின் அதியுயர் அவசியமாகும். அதேநேரம் 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்னும் பாரதியின் வரிகளையும் மனதிற்கொண்டு ஆக்கபூர்வமான மொழிசார்ந்த விடயங்க்களை இயற்றலும், பெயர்த்தலும், தொகுத்தலும் அறிவுப் பெருக்கத்திற்கு வழிவகுக்கும் என்னும் விடயத்தை நாம் அனைவரும் கவனத்திற்கொண்டு இலைமறை காயாக இருந்துவரும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் மேலும் சிறப்பாக இயங்குவதற்கான ஆயத்தங்களை இன்றே அடியெடுத்துவைத்தல் சிறந்த மொழியாள் தொடர்பாடலுக்கு வழிவகுக்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பு ஒரு வரலாற்றுத் தொடர்

**By:Fathima Zakiya Lahardeen**




மொழிபெயர்ப்பு என்பது ஒரு அபூர்வமான கலையாகும். பின்நவீனத்துவக் கோட்பாடுகளின் பின் பெரிதும் செழுமையடைந்த துறையாக இத் துறை விளங்குகின்றது. இக்கலையினை அனைவராலும் மேற்கொள்ள முடியாது. அதாவது போதுமான அனுபவம், மூல மற்றும் இலக்குமொழிகளின் தேர்ச்சி, கிரகித்தல், ஆக்கபூர்வமான சிந்தனை மற்றும் புரிந்து கொள்ளல் போன்ற இன்றியமையாதவிடயங்கள் அவசியமாகின்றது. மொழி என்பது தொடர்பாடலுக்கு இன்றியமையாததொரு ஊடகமாகும். மேலும் இவ்வுலகில் சுமார் 6500 மொழிகள் பேசப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இவ்வுலகில் உள்ள அனைவராலும் அனைத்து மொழிகளிலும் தங்களது தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாது. அதாவது அனைவருக்கும் அனைத்து மொழிகளும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதாகும். இச்சந்தர்ப்பத்தில் தான் மொழிபெயர்ப்பு அவசியமாகின்றது. எழுத்தாளரின் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகள் ஆகியன மொழிபெயர்ப்பின் மூலமாகவே விரிவுபடுத்தப்படுகின்றது.

மொழிபெயர்ப்புக்கள் அனைத்தும் ஒரே விதமாக அமைவதில்லை. காரணம் மூல மொழியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயத்தை பொறுத்தே அது எவ்வாறான முறையில் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்பதானது தீர்மானிக்கப்படுகிறது, சொல்லுக்குசொல் மொழிபெயர்ப்பு, வசனத்திற்குவசன மொழிபெயர்ப்பு, பந்திக்குபந்தி மொழிபெயர்ப்பு போன்ற மொழிபெயப்பு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன, மொழிபெயர்ப்பு என்பது தற்போது பல்வேறு துறைகளில் மிகவும் தேவைப்பாடுள்ள ஒருவிடயமாக அவதானிக்கப்படுகின்றது. இணையப் புரட்சியில் மொழிபெயர்ப்பின் பங்கு அளப்பரியதொன்றாகும். மொழிபெயர்ப்பானது குறிப்பாகஅன்றி பொதுவாக அனைத்துத் துறைகளிலும் வியாபித்துக் காணப்படுகின்றது. உதாரணமாகசட்டத்துறை, வைத்தியத்துறை, தொழிநுட்பத்துறை, அரசியல் துறை, மனிதவளதுறை போன்ற அனைத்துத் துறைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

இவ்வளவு முக்கியத்துவமும் சிறப்பும் வாய்ந்த இத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களைப் பற்றி நாம் அவசியம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாகவுள்ளோம். மொழிபெயர்ப்பு, இத்தொழில் மிகவும் பொறுப்புவாய்ந்த தொழிலாகவே கருதப்படுகின்றது. மொழிபெயர்ப்பாளர் என்பவர் நிச்சயமாகத் தேடலை மேற்கொள்பவராகவே இருக்கவேண்டும். அதுவே அவரை சிறந்த மொழிபெயர்ப்பாளராக சமூகத்திற்கு அடையாளம் காட்டும். பல்வேறு துறைகள் பற்றிய அறிவு மற்றும் தெளிவுத்தன்மையானது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பாளரை ஏனைய சாதாரண மக்களிடமிருந்து வேறுபிரிக்கின்றது. வினைத்திறனான ஒரு மொழிபெயர்ப்பினை இச்சமூகத்திற்கு வழங்க வேண்டுமாயின் அதிலே மொழிபெயர்ப்பாளரின் பங்கு பாரியதொரு இடத்தை வகிக்கின்றது.

மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் அதற்கான கேள்வி, மொழிபெயப்பாளர் என்றெல்லாம் பார்த்த நாம் தற்போது அதன் வரலாற்றிற்குள் நுழைந்து பார்ப்போம். இக்கலையானது பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. இந்நூற்றாண்டு முடிவினிலே பலமொழிகளிலுள்ள படைப்புக்கள் ஆங்கிலமொழிக்குமொழிபெயர்க்கப்பட்டன. 1791 ம் ஆண்டு அலெக்சாண்டர் ஃபிரேசர்டெய்லர் எழுதிய "மொழிபெயர்ப்புகொள்கைகள்" எனும் நூல் இத்துறையில் குறிப்பிடத்தக்க நூலாகும். இப்புத்தகத்தில் அவர் மொழிபெயர்ப்பின் பிரதான மூன்று கொள்கைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய உலகிலேயே இணையற்ற மொழிபெயர்ப்பாளராக தாமஸ் கார்லைல் விளங்கினார். அதுபோலவே இந்நூற்றாண்டில் பல கவிஞர்களும் இத்துறையில் பணியாற்றினார்கள். ஊதாரணமாக ஷெல்லி, பைரன், லாஜ்பேலோ போன்றோரைக் குறிப்பிடலாம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இத்துறையானது துரித வளர்ச்சிகண்டது. பலநாடுகள் இலக்கியமொழிபெயர்ப்புக்கென ஆண்டுதோறும் பரிசில்கள் வழங்கிவருகின்றன, விஞ்ஞான, தொழில்நுட்பமொழிபெயர்ப்புக்கள் இக்காலகட்டத்தில் மேலோங்கியே காணப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டினிலேயே மொழிபெயர்ப்புத்துறை தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துக் கொண்டது. ஒருமொழியின் வளம் என்று சொல்லும்போது பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள இலக்கியங்களையும், அதேசமயம் அம்மொழியிலிருந்து பிறமொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள இலக்கியங்களையும் பொறுத்தே அமைகின்றது. அதேவகையில் தமிழ் மொழியிலான மொழிபெயர்ப்பானது மிகவும் சிறந்ததொரு வரலாற்றைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டு இஸ்லாமிய புலவர்கள் பலர் பாரசீகமொழியிலுள்ள கதைகள், உரையாடல்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றை சிறப்பாக தமிழில் மொழிபெயர்த்தனர். அரேபியமொழி நூலான திருக்குர்ஆனை இதுவரையில் ஏழு அறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். "அலாவுதீனும் அற்புதவிளக்கும்" மற்றும் "தாவீதுகோலியாத் கதைகள்" போன்ற அரேபிய கதைகளும் தமிழில் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன, "இக்பால் கவி அமுதம்" மற்றும் "அக்பாலின் ஞானோதயம்" என்னும் பெயர்களில் இக்பால் கதைகள் கவிதைகள் தமிழில் தோற்றமெடுத்தன. அராபிய மருத்துவச் செய்திகள், குறிப்பாக கண் மருத்துவம் பற்றிய செய்திகள் தமிழுக்கு கிடைத்த வரப்பிரசாதங்களாகும்.

பல்லாயிரக்கணக்கான ஆங்கில நூல்களும் தமிழாக்கம் செய்யப்பட்டன. சார்லஸ் டிக்கன்சின் "A tale of two cities" எனும் புதினத்தை "இரு நகரக் கதைகள்" என்ற பெயரில் கே.வேலனும் மொழிபெயர்த்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனமொழியிலிருந்து பல கவிதைத்தொகுப்புக்கள், சிறுகதைகள் போன்றன தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஹிவாங். கு.பிட்ச் எனப்படும் கன்பூசியசின் "இளவேனிலும் இலையுதிர்காலமும்" என்ற கவிதைத்தொகுப்பிலுள்ள சில பாடல்களை கா.அப்பாத்துரையார் மொழிபெயர்த்தார். சீனத்து மகளிர் பற்றிய கதைகளை "பனிப்படலத்துப் பாவை" எனும் சிறுகதைத் தொகுப்பாக்கினார். ந.பிச்சமூர்த்தி, குன்ஹ்போதங் என்னும் சீனர் எழுதிய நாவலைத் தழுவி "கிழக்கோடும் நதி" என்னும் பெயரில் த.நா.குமாரன் மொழிபெயர்த்துள்ளார். சி.யூ.சென் என்னும் சீனப்பெண் எழுத்தாலரின் சில படைப்புக்களைப் பாரதியார் "பெண் விடுதலை" என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

இதுபோலவே ஜப்பானியச் சிறுகதைகள் "மணியிசை" எனும் தலைப்பில் புதுமைப்பித்தனால் தமிழுக்குமொழிபெயர்க்கப்பட்டது. யாமதாகாஷின்ற ஜப்பானிய நாவலாசிரியரின் உலகப்புகழ்பெற்ற கதைநாடகங்கள் பல "துன்பக்கேணி, பகற்கனவு, முத்துமாலை" என்ற பெயர்களில் தமிழில் வந்துள்ளது. அதுமட்டுமின்றி வடமொழியிலுள்ள ராமாயணம், மகாபாரதம் ஆகியவையும் தமிழ் வடிவேற்றப்பட்டுள்ளன. இவ்வாறுதமிழ் மொழியில் மாத்திரமின்றி ஏனைய மொழிகளிலும் அத்துறை தாக்கம் செலுத்திக்கொண்டுதான் இருக்கின்றது. இத்துறையின் வளர்ச்சியானது உலகம் முடிவடையும்வரை வியாபித்துக்கொண்டே இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நாளுக்குநாள் வளர்ச்சியடைகின்ற இத்துறையினை பற்றிய அறிவு நம் அனைவருக்கும் அவசியமாகும். இவ்வாக்கத்தின் மூலம் எம்மால் மொழிபெயர்ப்பு பற்றி அறிந்துகொள்ள முடியுமானது ஒரு சிறுதுளியாகும். மொழிபெயர்ப்பு என்பது சமுத்திரம் போன்றதாகும். ஆகவே தேடுவோம் இன்றிலிருந்து எம் தேடலை ஆரம்பிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trilingual Sri Lanka

**By:** Priyanadhi Ramanadhan




Trilingual Sri Lanka where Sinhala and Tamil speaking people relate to each other's and English will be a life skill for occupation and employment and instrument of communication to access knowledge from the extended world.

Sinhala and Tamil will be further developed to serve as the country's languages of discourse, discussion and intellectual debate on all aspects of modern knowledge and technology as is the function of the national languages in almost all other countries that participate in national discourse and thereby help grow a vibrant practicing democracy in the country.

Converting Sri Lanka into a trilingual country is very important to make reconciliation work better and to implement all important decisions. All sectors in Sri Lanka have to play vital roles because Sri Lanka is a trilingual country. The education system too has a great responsibility in this effort of Sri Lanka.

Until 1948, the education policy of Sri Lanka was such that it was a one way system promoting only English. The British role came into full force in 1815. The language policy was used to convert people to Christianity and also to include British values and cultures. They did not want to promote the educational institutions that existed in the country.

Even Fredrick North, the first British Governor, acknowledged that there were flourishing pirivenas (Buddhist educational institutions) when the British occupied the island. British did not promote vernacular schools, all the elite schools were Christian schools. For the administrative purposes, they wanted to create a small class of learned



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

people with British values and morals and the missionary schools were intended to serve this purpose. Every effort was made to propagate the Christian faith and values through the school curriculum. The number of the English schools in the country increased rapidly. So the language policy because a one way system.

Renowned scholars came from foreign countries to study Buddhism as well as languages such as Sinhala and Tamil languages were not prescribed to be used in schools.

It should be noted however that the **"English only"** language policy and religious discrimination created a lot of frustration. American theosophist arrived and a number of Buddhist schools were established.

At the same time, with the support from Hindu organizations, several Hindu schools were founded. The Ceylon Social Reform League also played an active role in demanding that Sinhala and Tamil be recognized as compulsory subjects in the school curriculum.

In 1939, J.R.jayawardene proposed to legalize the usage of Tamil and Sinhala in the administration and the motion was passed with majority. In other words, there was a general recognition of the need to adopt a bilingual policy. The Sinhala community constituted nearly 74 percentage of the population in this country and therefore, during the 1950 election the promises were given to make Sinhala the official language within 24 hours. **"The Sinhala only"** policy was in the history of Sri Lanka

Tamils have been living with Sinhalese for many centuries. But the Tamil language was not given its due place. The second mistake was that we allowed the slandered of English language to deteriorate in our educational system. I think that is where we went wrong.

English is an international medium of communication and everyone has the right to learn English. Every child should have the opportunity to learn English well. English is also a life skill.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trilingual policy is an important one. It is not an isolated policy but an internal part of overall strategy to transform Sri Lanka into a morally, economically and globally successful country. Therefore language skills constitute an important aspect of transforming this country into a knowledge hub in the Asian region.

If we know each other's languages it is easier to understand each other and to appreciate commonalities and to respect differences. Then we become attached to each other. It is through a language that we can communicate and exchange ideas. A good quality of human being is to learn the language of the neighbor.

The government has directed to establish **"language centers of excellence"** in all major cities. The purpose is to exchange students between Sinhala and Tamil schools. Tamil and Muslim students will get an opportunity to go to Sinhala schools and to learn Sinhala whereas the Sinhala students will have access to Tamil schools to study Tamil. The language policy means a lot in finding a long lasting solution to the ethnic problem in the country.

All citizens should have at least a working knowledge of the three main languages used in this country; Sinhala, Tamil and English. A trilingual Sri Lanka would be the ideal which would be striven towards by the state and among the right thinking this indeed is the right way to go.

All relevant languages in this country should be taught in an unbiased manner and all citizens should be encouraged to learn all these languages, for in the world of today, interaction among peoples and countries in a multiplicity of spheres would not be possible if languages such as English are not learnt and used effectively. Thus multilingualism becomes the hallmark of a country on the march to progress and it is a matter for rejoicing that Sri Lanka has decided to figure prominently among these positively – oriented countries.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Four poems from Tamil to English

## Translation of Poetry

**By: Gowthamy.Yo**

Written by: Karunakaran

### Nothing more than Rain



There is nothing
morethan rain
in this mountain

it created
the plants and jungle
flowing river and
river's way
as well as
it created
scene of mountain forest
cold and shadow
Flowers which are blooming in mountain forest
Bee in flowers ,
honey nest and
Mountaineers
and their songs and joys
Rivalry and Conflict!


Also the rain rewarding
the hot period
to mountain
for moreover
adding the beauty of mountain

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Death's Factory**
Written by: Yathrigan



They have stolen our Nakedness
for producing the dead body
in a death factory

The dream of Far Night
had perished

They were done our deaths
by empty hungry
and Metals spitting

Those who are producing the deaths
walking in the Outside of graveyard
with a smiling of grudge.
deaths are continuously producing
with the blood of a cruel beast
in every premature

death is alive and rambling
like a following
Inanimate shadow

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I will speak

Written by: Theepachelvan



Anything might speak
for anything that happening
Then
Anything may happen
They might tell that
as black is white colour
They might tell
that
spring is showering in the
sorrow season
They might tell
that
as someone is leader
as someone is Guard
They might tell that
as Occupiers is the guardian
might tell
as Cruel Hell is the heaven

They might say in every moment
that
we treat as independently
someone say the words
which taught
and
might say
Comply to time

what do you feel
when they telling
the period of absconding of poet
that
as we alive in a great period ?

how about your ears?
when listening the everything of
saying
in the period of unwritten poetry

I saw
they bought a poet for 10 rupees
people said that
those who are bending the words
is not a poet

Our people lost the words
But
I will speak as
how we are living
because we can't lost our faces.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோனகத்தெரு

**By: Kapilthev**

அப்பா மன்னாரிலிருக்கும் சோனகத்தெருவில் வீடு வாங்கியிருந்தார். அதுவரையில் எனக்கும் சோனகருக்கும் பழக்கமிருந்ததில்லை. நான் சிறுவனாயிருந்த போது ஒருமுறை பஸ்ஸில் மன்னாருக்கு வந்திருக்கிறேன். வீதியில் நடந்துபோய்க்கொண்டிருந்த ஒரு சோனகச்சிறுவனின் உடுப்பைப் பார்த்துவிட்டு அதுபோலவே எனக்கும் வேண்டுமென அப்பாவிடம் சொன்னேன். கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அது போலவே ஒரு உடுப்பை அப்பா எனக்காக வாங்கி வந்தார். தொப்பியைத் தவிர எல்லாம் சரியாக இருந்தது. தொப்பி வேண்டுமென அழுது அடம்பிடித்து., அம்மாவிடமிருந்து தலையில் ஒரு குட்டு வாங்கி கடைசியில் வேண்டாவெறுப்பாக அந்த உடுப்பைப் போட்டுக்கொண்டு தேவாலய திருப்பலிக்குப் போனேன். இத்தோடு எனக்கும் சோனகருக்குமான உறவு முடிந்து போகிறது.

அப்பா இளந்தாரியாய் ஊரில் அலைந்து கொண்டிருந்த காலத்தில் சோனகர்களோடு கால்பந்து விளையாடப் போவாராம். அப்போதெல்லாம் எங்கள் ஊரில் சோனகர்களும் வாழ்ந்தார்கள் என்ற அரிய தகவலை அப்பா தனது கால்பந்து அனுபங்கள் பற்றி என்னிடம் பேசும்போது ஓரிருமுறை சொல்லியிருக்கிறார். எனது நான்காவது வயதுவரை நான் எனது ஊரில்தான் வாழ்ந்தேன். இருந்தும் அங்கே நான் எந்தவொரு சோனகரையும் கண்டதில்லை. கொஞ்சம் ஆழமாக யோசித்துப் பார்க்கும் போது 'அலிகார்' என்ற பெயரில் ஒரு பாடசாலைக் கட்டடமும் ஒரு பள்ளிவாசலும் கவனிப்பாரற்று பெரும்பாலும் ஆட்டுப்பட்டியாகப் பயன்பட்டதை ஞாபகப்படுத்திக் கொள்ளமுடிகிறது. ஒருகாலத்தில் எனது ஊரில் வாழ்ந்த இனம் திடீரென எப்படி மறைந்து போனது என்ற சந்தேகம் அடிக்கடி எனக்குவரும். இது பற்றி ஒருநாள் நான் அப்பாவிடம் கேட்ட போது நீ பிறப்பதற்கு முன்பே இயக்கம் அவர்களை போகச் சொல்லிவிட்டது என்றார். ஏன் போகச்சொன்னார்கள் எனக்கேட்டால் வாயை மூடிக்கொண்டு 'கப்சிப்' என இருப்பது நல்லது என்று பதிலுரைப்பார். ஊரில் உள்ள பெரியவர்கள் சோனகர்கள் பற்றிப் பேசுகையில் 'தொப்பிபிரட்டி' என்ற பதத்தை உபயோகிப்பதைக் கேட்டிருக்கிறேன். அந்தப் பதத்துக்கான அர்த்தத்தைப் புரிந்து கொண்ட பின்னர் எனது கேள்விக்கான விடைகளை என்னால் தயாரிக்க ஏதுவாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா வாங்கிய வீட்டைப்பற்றி சொல்ல ஆரம்பித்தேன் என நினைக்கிறேன். உண்மையில் அந்தவீடு அப்பாவாங்கியதல்ல. வெளிநாட்டிலிருக்கும் எங்களது அத்தை வாங்கியது. இடப்பெயர்வின்பின் எங்களுக்கென்று காணியோ நிலமோ இருந்ததில்லை. முகாமில் கூடார வாழ்க்கையையும் குடிசை வாழ்க்கையையும் கடந்துவந்ததையடுத்து ஊர்ச்சனத்தோடு சேர்ந்து நாங்களும் 'தோட்டவெளி' எனும் கிராமத்தில் குடியேற்றப்பட்டோம். சாபவிமோசனமடைந்து புத்துயிர்ப்புப்பெற அந்தக்கிராமம் வழிவகுத்தபோதும் பிள்ளைகளை மன்னாரிலிருக்கும் நல்ல பாடசாலையொன்றில் சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் அப்பாவுக்கு இருந்தது. கோடை விடுமுறையைக் கழிக்க இலங்கை வந்த அத்தை சோனகத்தெருவில் ஒருவீட்டை வாங்கிவிட்டு தான் திரும்பி வரும் வரையில் அதைப் பராமரிக்கச்சொல்லி அப்பாவிடம் கேட்ட போது அப்பா உடனே சம்மதம் தெரிவித்துவிட்டார். கூடவே "கத்தி எடுத்தவனுக்கு கத்தியால் தான் சாவு என்பதைப் போல வெளிநாடு போனவனுக்கு வெளிநாட்டில் தான் சாவு" என்ற உண்மையையும் பகிடி பகிடியாகச் சொல்லி வைத்தார்.

நான்கு அறைகள், ஈடுதாடான விறாந்தை, குசினி, பாத்ரூம் என பிரம்மாண்டமாயிருந்தது வீடு. பழைய மதுவரிநிலையமாய் இருந்ததாம். யாராவது அட்ரஸ் கேட்டால் மதுவரி நிலையம் எனச் சொல்வதே போதுமானதாகப்பட்டது. உபரியாக வீட்டுக்கு ஒரு மொட்டைமாடியும் உண்டு. ஆனால் ஏறிச்செல்ல ஏணியோ படிக்கட்டோ இல்லை. வீட்டின் மூலையில் ஓரமாக கிளைபரப்பி நிற்கும் கொய்யாமரத்தில் ஏறினால் மட்டுமே மொட்டைமாடிக்குப் போகலாம். மரத்தின் கிளை ஒன்று நீண்டு வளர்ந்து போய் மொட்டை மாடியைத் தொடுகிறது. பள்ளிக்கூடம் முடிந்து வந்தால் வெள்ளைச் சட்டையைக் கூட கழற்றாமல் மரத்தில் ஏறிவிடுவேன். செங்காய்ப்பருவமான கொய்யாக்களைப் பறித்துவந்து மொட்டை மாடியில் கிடந்து சாப்பிடுவேன்.

மொட்டைமாடியிலிருந்து அயல்அட்டங்களிலுள்ள வீடுகளை ஒரு பறவையின் கோணத்தில் பார்க்கமுடியும். எனக்கு அதுவொரு நல்ல பொழுதுபோக்காயிருந்தது. அம்மா கீழேயிருந்து சாப்பிடக் கூப்பிடுவதையும் பொருட்படுத்தாமல் பக்கத்து வீட்டை வேடிக்கை பார்த்தபடியிருப்பேன். அந்த வீட்டில் சரமாரியாக தூசணம் கதைக்கக்கூடிய சிறுவனொருவன் இருந்தான். அவனால் அந்தவீடே கூச்சலும் குழப்பமுமாக காணப்படும். அந்தச் சிறுவனின் அக்காவை நகை திருடிய குற்றத்திற்காக பொலிஸ் அரஸ்ட் பண்ணியதாம் என அம்மா ஒருதடவை அப்பாவுக்குச் சொல்லும் போது கேட்டிருக்கிறேன். அவர்கள் எங்களைப் போலவே கிறிஸ்தவக் குடும்பமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதிலும் அவர்களுக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை இருந்ததில்லை. அந்தக்குடும்பம் வெளியேறிய பிறகு பூட்டிய சூன்யமாகக் கிடந்த வீட்டுக்கு திறப்பு விழாச் செய்தவர்தான் நிஜார்காக்கா. ஒருநாள் மொட்டைமாடியில் படுத்துக் கிடந்திருந்த நேரத்தில் அந்தவீட்டின் தகரக் 'கேற்' படபடக்கும் சத்தம்கேட்டது. தலையைத் தூக்கி நோட்டம் விட்டேன். மயிரை ஒட்ட வெட்டிய கருப்பான மனிதர் ஒருவர் முற்றத்தில் வளர்ந்திருந்த புல்பூண்டுகளை செருக்கிக்கொண்டிருந்தார். அடுத்தநாளும் அவர் வந்தார். வீட்டினுள்ளே படிந்திருந்த தூசுகளைத் தட்டி சிலந்திப்பூச்சிகளை விரட்டிவிட்டார். அதற்கு அடுத்த நாள் நான் மொட்டைமாடியில் இல்லாத சமயம் அந்தவீடு கலகலத்துக் கேட்டது.

நிஜார் காக்காவிற்கு முன்பற்கள் இரண்டும் இல்லாத நான்கு வயது மகன் இருக்கிறான். அவனது பெயர்சிஹாப். வாப்பாவைப் போல் அல்லாமல் எங்களது ஏரியா சோனகர்களைப் போலவே வெள்ளை நிறமானவன். அவன் வாயைத்திறந்து கதைத்தால் பற்கள் இல்லாத இடைவெளியால் காற்று வருமாதலால் அவன் பேசுவதில் பாதி விளங்காது. எனது அம்மாவுக்கு அவன் பேசுவதைக் கேட்க விருப்பம் உண்டு. அவன் அடிக்கடி எங்கள் வீட்டைக் கடந்து போகும் போதும் வரும்போதும் அம்மா அவனை வேண்டுமென்றே சீண்டுவார். "இந்தா பாருங்க சோனவன் போறான்" என என்னைப் பார்த்தோ அப்பாவைப் பார்த்தோ அவனது காதில் விழும்படியாகச் சொல்லுவார். அவனோ தலையிலிருக்கும் வெள்ளை அப்பம் போன்ற தொப்பியை கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு வாயால் காற்றடிக்கத் தொடங்குவான். நானும் அம்மாவும் அப்பாவும் வாசலில் நின்றபடியே பலத்துச்சிரிப்போம். அவன் வெட்கத்தில் ஓடிவிடுவான்.

என்னதான் ஒளிந்து மறைந்து திரிந்தாலும் சிஹாப்பால் எல்லாநேரமும் எனது அம்மாவின் தாக்குதல்களிலிருந்து தப்பமுடிவதில்லை. அவனது வாப்பாவின் பலசரக்குக்கடை எங்கள் வீட்டின் இடதுபுறமூலையில் தான் இருந்தது. அவன் கடைக்குப் போக வேண்டுமானால் எங்கள் வீட்டுவாசலைக் கடந்தாகவும் வேண்டும். அந்தக்கடையானது பலபேரின் கைமாறி கடைசியாக நிஜார்காக்காவிடம் வந்திருந்தது. எங்கள் ஏரியாவுக்கென்றே அந்த ஒருகடை தான் இருந்தபோதிலும் வியாபாரம் ஒருநாளும் மெச்சத்தக்கதாக இருந்ததில்லை. கடையின் பழைய ஓனர்கள் வாங்கிப்போட்ட 'சன்லைற்' சவுக்காரக்கட்டிகள் கூட லேபிளின் நிறம் மங்கி விற்கப்படாமல் கிடந்தன. இதற்கெல்லாம் கடையின் அமைப்புத்தான் முக்கிய காரணம் எனலாம். அதனைக்கடை என்று சொல்வதைவிட ஒருவீட்டின் அறை எனச் சொல்லலாம். உண்மையிலேயே அதுவொரு வீட்டின் அறைதான். அந்த அறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு ரோட்டோரமாக இருந்தது. கதவைத் திறந்தால் கடையாகிவிடும். பூட்டினால், ஒருவீடு பூட்டப்பட்டிருப்பதாய் தோன்றும். புதிதாக அந்தவழியால் வரும் நீங்கள் அண்ணார்ந்து கடையின் போர்ட்டை பார்த்தால் ஒழிய அது கடைதான் என்பதை இனங்கண்டு கொள்ளமாட்டீர்கள். நிஜார்காக்காவுக்கு இதுவெல்லாம் ஒருபொருட்டேயல்ல. பெயருக்கு ஒரு தொழில் இருந்தால் போதும் என்பதைப்போல கடையில் தூங்கிவழிந்துகொண்டிருப்பார். வீட்டுக்கு அருகிலேயே இப்படியொருகடையிருப்பது அம்மாவுக்கு வசதியாய்ப்போனது. சமையல் நேரத்தில் உப்பு, புளி தீர்ந்தது பற்றி ஞாபகம் வந்தால் உடனே என்னை காக்காவின் கடைக்குப் போகச் சொல்லி அடுப்புப் புகைக்குள் இருமியபடியே குரல்கொடுப்பார். இந்த நேரங்களில் அம்மாவிடம் சில்லறைக்காசு இருக்காது. சாமான்களைக் கடனாகத்தான் வாங்கவேண்டியிருக்கும். மீறி,காகாவிடம் தாள்காசை நீட்டினால் சில்லறை இல்லயே தம்பி என மயிரில்லாத மண்டயைச் சொறிவார்.

புதுவீட்டுக்கு வந்ததிலிருந்து அப்பாவுக்கு பொழுதைப்போக்குவது கடினமாயிருந்தது. காலையில் நேரத்தோடு எழுந்து தொழிலுக்குப் போவார். மத்தியானம் போல வீடுதிரும்பி கிணற்றடியில் உப்புத்தண்ணீரும் அலுப்பும் கழையஒரு குளியல் போடுவார். பின்பு சாப்பாடு முடிய நித்திரை. நித்திரையிலிருந்து எழும்பும் பின்னேரங்களில் அவருக்கு செய்வதற்கு ஒன்றுமிருக்காது. ஊரிலிருந்த நாட்களில் சகாக்களோடு கடதாசி விளையாடி பொழுதைக் கழித்தார். அல்லது வெறுமனே எதையாவது பேசிக்கொண்டிருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக இந்த மாலை நேரங்கள் அப்பாவின் நடையை காக்காவின் கடைப்பக்கமாக திருப்பியது. நிஜார்காக்காவும் அப்பாவும் கடையின் எதிரேயிருந்த கொங்கிறீட் கல்லில் குந்தியிருந்து உலகநடப்பையெல்லாம் பேச ஆரம்பித்தார்கள். காலப்போக்கில் நான் இரவில் கடைப்பக்கமாக போகும் போது கொங்கிறீட்கல்லின் மேல் இரண்டு நெருப்புத் துண்டங்கள் புகைவதையும் அவதானித்திருக்கிறேன்.

அப்பாவுக்கும் நிஜார் காக்காவுக்குமான இந்த உறவு இன்னொரு கட்டத்துக்கும் நகர்ந்தது. எனக்கு இரண்டாம் தவனை பரீட்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இரவு ஒன்பது மணியைக் கடந்து போயிருந்தது நேரம். நான் ஒரு கொப்பியை நெஞ்சோடு அணைத்தபடி ஏதொவொரு குறிப்பை பாடமாக்கிக்கொண்டு வீடுமுழுக்க அலைந்துகொண்டிருந்தேன். வீட்டின் உட்பக்க சுவர் அருகோடு வந்த அப்பா நிஜார் காக்காவின் பெயரை மெதுவாக உச்சரித்தார். வீட்டின் வெளிப்பக்கமாக வந்த நிஜார் காக்கா அப்பாவிடமிருந்து இரண்டு போத்தல்களை வாங்கிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார். இரவின் அமைதியின் நடுவே அந்தப் போத்தல்கள் ஒன்றோடு ஒன்று மோதிய போது கண்ணாடி போன்ற சப்தத்தை எழுப்பின.

அடுத்த நாள் பின்னேரம் நானும் அம்மாவும் வாசலருகில் நின்று உரையாடிக்கொண்டிருந்தோம். அன்று எனக்கு தமிழ் பரீட்சை நடந்ததால் அம்மாவுடன் கலக்கமில்லாமல் பேசமுடிந்தது. சிஹாப் உம்மா வாப்பா சகிதமாக எங்களை நோக்கிவந்தான். அவனைக் கண்டதும் அம்மா என்னைப்பார்த்துச் சொன்னார். "சோனவன்போறான்சோனவன்போறான்". சிஹாப் தனது வாயால் காற்றடிக்க வெளிக்கிட்டான். எல்லோரும் சிரித்தோம். சிஹாப்பின் உம்மா மட்டும் "சிஹாப் சும்மா இரி சும்மா இரி" என அவனை அதட்டிக்கொண்டிருந்தார். சகலதாய்மாருக்கும் தங்களது பிள்ளைகளின் குழப்படிகளைப் பற்றிப் பெருமையாகப் பேச ஆசையிருப்பது போன்று சிஹாப்பின் உம்மாவுக்கும் ஆசையிருந்தது. அவன் வீட்டில் செய்யும் குழப்படிகள் நேசறியில் செய்யும் குழப்படிகள் என வகைவகையாக உருவி எடுத்துவைத்தார். சிறிது நேரத்தில் நிஜார் காக்காவின் குழப்படி மூட்டைகள் அவிழ்க்கப்பட்டன. "இவர் எங்க பள்ளிக்குப் போறார்? இவர் எங்க குடும்பத்த பாத்துக்கொள்ளுறார்? அப்பன பாத்துதானே புள்ள பழவும். இன்னைக்கு காலேல போய் கதவ தொறக்குறன் ரெண்ணு பியர் போத்தல் உருண்டு வருது. இது தான் இவர் யாவாரம் பாக்குற லச்சணம்" எல்லாவற்றையும் மறுப்பில்லாமல் கேட்டபடி நிஜார் காக்கா கள்ளமில்லாக் குழந்தையைப் போல் சிரித்துக் கொண்டிருந்தார்.

புதிதாக ஒரு டிவி வாங்கியிருந்தோம். அப்பாவுக்கு பொழுதைப் போக்க ஒருவழி கிடைத்தது. மதியச்சாப்பாடு முடிய டிவி பார்க்கதொடங்கினார் நித்திரை கொள்ளும் பழக்கத்தையும் அவர் விடுவதாய் இல்லை. டிவிக்கு முன்னாலிருந்து தூங்கி தூங்கி வழிந்தார் நாளாவட்டத்தில் அதுவே ஒரு பழக்கமாக மாறி டிவி பார்த்தால் தான் அவருக்கு நித்திரை வந்தது. அப்படி ஒருநாள் அவர் தூங்கி வழிந்து கொண்டிருக்கும் போது அவரது பெயரைச் சொல்லி யாரோ உரப்பினார்கள். திடுக்கிட்டு முழித்தவர் எழுந்து வெளியே போனார். அவர் திரும்பிவந்ததும் அம்மா கேட்டார்.

"ஆரு?"

"நிஜார் காக்கா"

"என்னவாம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்தாயிரம் கடன் வேணுமாம் குடுக்கிறியா?"

அம்மா வேடிக்கையாகச் சிரித்துவிட்டு கடந்துபோனார். அப்பா நித்திரையை வரவழைக்க மீண்டும் டிவி பார்க்க தொடங்கினார்.

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்களாக அப்பா கடலுக்கு போய் வந்ததும் கொண்டு வந்த மீனில் சிறிதளவு எடுத்து தனியாக ஒரு 'சொப்பின்பாக்கில்' போடுவார். அந்தச் 'சொப்பின் பாக்' நேராக நிஜார் காக்கா வீட்டுக்குப் போகும். ஒருமுறை அந்தச் 'சொப்பின் பாக்கை' நிஜார்காக்காவின் வீட்டுக்கு கொண்டு செல்லும் முறை எனக்கு வந்த போது நான் மிகவும் கூச்சப்பட்டேன் நான் இயல்பிலேயே கூச்ச சுபாவி. உறவினர்களின் வீட்டுக்கும் தனியாகப் போகத் துணியமாட்டேன். அம்மா அப்பாவுடன் போனால் தான் உண்டு நிலமை இப்படியிருக்க அன்று நான் நிஜார்காக்காவின் வீட்டின் வெளியே நின்று பசியில் கத்தும் பூனை போல மெதுவாகக் குரல் கொடுத்தேன். உள்ளேயிருந்து ஒரு பெண் வந்து என்னிடமிருந்து மீனை வாங்கிச் சென்றாள். இந்தக்காட்சி என் நினைவிலிருந்து அழியாமல் இருப்பதற்கு காரணம் அந்தப் பெண் முக்காடு அணியவில்லை என்பது தான். நான் முதன்முதலாகப் பார்த்த முக்காடு அணியாத இஸ்லாமியப் பெண் அவள் தான். அவளைப் பற்றிய சரியான விபரங்களை என்னால் உங்களுக்குத் தரமுடியாது போகிறது. அவள் நிஜார் காக்காவின் மகளா? அல்லது வேறுயாருமா? என்ற சந்தேகம் கூட எனக்கு இப்போது வரையில் தீரவில்லை. ஆதலால் அவளைப் பற்றி எழுதுவதை நிறுத்த முன்பு, மீனை வாங்கும்போது என்னை உற்றுநோக்கிய அவளது கண்களையும் சுருண்ட கேசத்தையும் ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

ஒரு சுடரை அணையாமல் பாதுகாக்கும் கவனத்தோடு சிஹாப் தனது பிஞ்சுக் கைகளில் நோன்புக் கஞ்சி நிரம்பிய ஜக்கை ஏந்தி வந்தால் நோன்புகாலம் தொடங்கிவிட்டது எனஅர்த்தம். நான் விளையாடிமுடித்து வீடு திரும்பவும் பள்ளியில் 'வாங்கு' ஓதி நோன்பைத் துறக்கவும் நேரம் சரியாக இருக்கும். வந்த களைப்புடன் ஜக்கில் முட்டமுட்ட நிரம்பியிருக்கும் கஞ்சியைப் பருகுவேன். அது எனது வறண்ட தொண்டைக்குள் சூடாக வழுக்கிச் செல்லும். சில சமயங்களில் கஞ்சிக்குள் கோழி இறைச்சித் துண்டுகளும் வாய்த்துவிடுவதுண்டு. எனவே நான் ஜக்கைக் கைப்பற்றியதும் முதல் வேலையாக கரண்டியால் ஒரு துழாவு துழாவுவேன். அப்படித் துழாவும்போது இறைச்சி சிக்கவில்லையெனில் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கும். ஒன்று, அன்று கஞ்சிக்குள் கோழி இறைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடவில்லை என்பது. இரண்டு, எனக்கு முன்னால் யாரோ கஞ்சியைத் துழாவி விட்டார்கள்.

சோனகத்தெரு முஸ்லிம்களின் வாழ்க்கையில் நோன்பு காலப் பகல்களும் இரவுகளும் வித்தியாசமானவை. பகல்களில் வீதி வெறிச்சோடிப் போய்க்கிடக்கும், பெயருக்கு ஆங்காங்கே மின்சாரக்கம்பிகளில் குந்தியிருக்கும் காகங்களின் சப்தங்களைத் தவிர வேறு குறிப்பிடத் தகுந்த ஒலிகள் எதுவுமிருக்காது. மாலை 'வாங்கு' ஓதி நோன்பு திறக்கப்பட்டதும் தான் ஏரியாவே ஒரு பெருங்கொண்டாட்டத்துக்கு தயாராகும்.ஆண்கள் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருப்பார்கள். பக்கத்து வீடுகளிலிருந்து உள்ளியும் இறம்பை இலையும் சட்டியில் வதங்கும் வாசனை மேலெழத் தொடங்கும், சிறுவர்கள் தாறுமாறாக சந்துபொந்துகளில் ஓடித்திரிவார்கள். உன்னிப்பாக கவனித்தால் அவர்கள் எதோவொரு வி ளையாட்டில் மூழ்கியிருப்பது புலப்படும். முக்காடிட்ட பெண்கள் பெரும்பாலும் கைகளில் நோன்புக் கஞ்சி நிரம்பிய பாத்திரங்களுடன் அல்லது எதேனுமொரு உணவுப் பண்டத்துடன் தெரிந்தவர்களின் வீடுகளை நோக்கிச் செல்வார்கள். இளைஞர்களுக்கு இந்தக் கொண்டாட்டம் சாமம் சாமமாக நீளும். நான் அரைத் தூக்கதிலிருக்கும்போது அவர்களது செருப்புகள் வீதியில் உராய்வதால் எழும் ஓசைகளைக் கேட்டதுண்டு. சிலர் சைக்கிளை எடுத்துக்கொண்டு டவுனை ஒரு சுற்று சுற்றிவருவார்கள்.

அந்தச்சம்பவம் நடந்தேறியதும் இப்படியொரு நோன்பு காலத்தில்தான்.நல்லவேளையாக நான் விளையாடி முடித்து வீடு திரும்பியிருந்தேன்.இரவு ஏழு மணியிருக்கும். திடீரென தெருவில் ஹோவென்ற இரைச்சல் கிளம்பியது. ஆரம்பத்தில் அதை நாங்கள் சாதாரணமாக இளைஞர்கள் தெருவில் செய்யும் கேலிக்கூத்தாகவே எடுத்துக்கொண்டோம். ஆட்கள் அலறியடித்துக்கொண்டு ஓடும் சப்தங்கள் பெருகியபோதுதான் எதோ விபரீதமாக நடக்கிறது என்று உணர்ந்தோம். அப்பா வெளியே போய் ஒரு எட்டுப் பார்த்துவிட்டு வந்து கதவு யன்னல்களை மூடச் சொன்னார். வீதியில் சரமாரியாகக் கற்களும் தூசணங்களும் வீசப்படுவதைக் கேட்கக் கூடியதாகவிருந்தது. ஆனால் வெளியே நடப்பது என்னவென்று துல்லியமாகக் கணிக்க இயலவில்லை.பாய்ந்து வந்த கல்லொன்று எங்கள் வீட்டுக்கண்ணாடி யன்னலை உடைத்தது. அதுவரையில் யன்னல்களின் இடுக்குகள் வழியாக வெளியில் நடப்பவற்றை அறிய முயற்சித்துக் கொண்டிருந்த நாங்கள் விறாந்தையின் நடுப்பகுதியில் வந்து குந்தினோம். டிவி நிறுத்தப்பட்டதும் நிலவிய அமைதியில் ஒராள் முகத்தை ஒராள் பார்க்கத் திராணியின்றி பயத்தில் உறைந்து போயிருந்தோம். ஒரு வழியாகத் தெருவும் அமைதிக்கு திரும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரவு முழுவதும் கலகக்காரர்கள் அடிக்கடி உபயோகப்படுத்திய ஒரு சொல் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

'தொப்பிபிரட்டி'

காலையில் கிணற்றடியில் பல்லுத் தீட்டிக் கொண்டிருக்கையில் அம்மா கெட்டுப்போயிருந்த நோன்புக் கஞ்சியை குப்பை பாக்கில் கொட்டுவதைப் பார்த்தேன். நேற்றைய அசம்பாவிதத்தில் நான் நோன்புக் கஞ்சியை மறந்து போயிருந்தேன். பள்ளிக்கூடம் செல்லும் வழிநெடுகிலும் பெரும்பெரும் கருங்கற்கள் இறைந்துகிடந்தன. வீடுகளின் 'கேற்'கள் நெருக்கிச் சிதைக்கப்பட்டிருந்தன. வகுப்பறையில்தான் நிலமையை ஓரளவு ஊகிக்க முடிந்தது. விஞ்ஞான ரீச்சர் என்னைத் தனியாகப் பிடித்து வைத்துக் கேட்டார் நீ அந்த ஏரியாக்காரன்தானே உனக்கு ஒன்றும் தெரியாதா என்று. உண்மையில் அந்தக் ஏரியாக்காரனான என்னைவிட வெளி ஏரியாக்காரர்களுக்கு கொஞ்சம் விபரம் தெரிந்திருந்தது.

பிரச்சினை இரவு நேரத்தில் சைக்கிளில் ஊர் சுற்றும் முஸ்லிம் இளைஞர்களிடமிருந்து ஆரம்பிக்கிறது. அவர்கள் ஊர் சுற்றும்போது பெரிய சத்தமாக பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் போவதுவழமை. சைக்கிளில் போகும்போதே கம்புதடிகளால் வீட்டு 'கேற்'களை தட்டுவது, சிறிய கற்களை கூரைகளின் மேல் வீசுவது போன்ற சிறியளவான சேட்டைகளிலும் ஈடுபடுவார்கள். அவர்கள் பாரபட்சம் பாராது தாம் விரும்பியஇடங்களில், தெருக்களில் எல்லாம் இதனைச் செய்து வந்தார்கள். இவ்வாறு அவர்கள் சேட்டை செய்யும் இடங்களில் ஒன்றாக பக்கத்திலிருந்த கிறிஸ்தவ கிராமமும் அடங்கியிருந்தது. இவர்களின் பயணவழியையும் நேரத்தையும் அவதானித்து வைத்திருந்த அக்கிராமத்து இளைஞர் குழுவொன்று ஒருநாள் இரவு ஒழுங்கைகளுக்குள் பதுங்கியிருந்து அவர்கள் வரும் மட்டும் காத்திருந்தது. முஸ்லிம் இளைஞர் குழு சற்றும் எதிர்பாராத வகையில் அவர்கள்மேல் தாக்குதலை நடத்தியது. இப்பிரச்சினை இத்தோடு முடிந்துபோய் விடவில்லை. அடுத்தநாள் காலை டவுனுக்கு எதோ அலுவலாகச் சென்ற முஸ்லிம் இளைஞர்களை தாக்கியதில் முக்கிய சூத்திரதாதியாக கருதப்பட்ட ஒருவன் 'பப்ளிக் டொய்லட்'டின் ஓரமாக வைத்துத் தாக்கப்பட்டிருக்கிறான். அதற்குப் பதிலடியாகத்தான் அன்றையநாள் இரவுஎங்கள் ஏரியா அந்தக் கிறிஸ்தவக் கிராமத்தவர்களால் கூறுபோடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்திலிருந்து வந்த நான் அன்று மாலை விளையாடப் போகவில்லை. அம்மாவோ அப்பாவோ போகவேண்டாம் எனத் தடுக்காதபோதும் நானாகவே அந்த முடிவை எடுத்திருந்தேன். நானும் அப்பாவும் டிவி பார்த்துக்கொண்டிருந்தோம். அம்மா நோன்புக் கஞ்சி வந்த ஜக்கை வெளியே எடுத்துச் செல்வதும் பின்னர் உள்ளே கொண்டு வருவதுமாக இருந்தார். அவருக்கு அடுத்தவர்களின் பொருளை வீட்டிலே வைத்திருப்பது பிடிக்காது. அப்பா எழுந்து கடைப்பக்கம் போனால் ஜக்கை கொடுத்து அனுப்பலாம் எனவும் எதிர்பார்த்தார். அப்பாவோ டிவியே கதியாகக் கிடந்தார். அவர் எழுந்து கடைப்பக்கம் போயிருந்தாலும் பேச்சுத் துணைக்கு நிஜார் காக்கா இருந்திருக்கமாட்டார். பள்ளிக்கூடம் முடிந்து வரும்போது பார்த்தேன். கடை அடித்துச் சாத்தப்பட்டிருந்தது. ஏழு மணியளவில் வீதியில் சலசலப்புக் கேட்டது. நான் ஓடிச்சென்று யன்னல் கம்பிகளில் காலை வைத்து ஏறிநின்று பார்த்தேன். தெருவில் சில முஸ்லிம் இளைஞர்கள் கத்திகளோடு நின்றார்கள். அந்தவழியாகச் சென்ற இனந்தெரியாத இளைஞன் ஒருவன் அவர்கள் மத்தியில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தான். அவர்கள் அவனை கேள்விகள் கேட்டு விசாரித்து அவன் எந்தக் கிராமத்தை சேர்ந்தவன் என்ற உண்மையை அறிந்த பின்னரே போக வழிவிட்டார்கள். அப்பா நேற்றையைப் போலவே அன்றும் யன்னல்களை அடைக்கச் சொன்னார். நான் படுத்திருந்து வெளியே ஏதும் சத்தம் கேட்கிறதாவென காதைத் தீட்டிக்கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் அசம்பாவிதம் ஏதாவது நடக்கவேண்டுமெனவும் குரூரமாக எதிர்பார்க்கத் தொடங்கினேன். நான் வீட்டினுள் பாதுகாப்பாகத்தானே இருக்கிறேன் என்ற தைரியத்தில் எனக்கு அந்தச் சிந்தனை வந்திருக்கலாம்.அந்த இரவில் அதற்கு மேல் பெரிதாகஒன்றும் நடக்கவில்லை.

விடிந்ததும் நான் வழமைபோல பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். எனக்குமுன்னரே அப்பா எழுந்து கடலுக்குப் போயிருந்தார். பின்னேரம் நான் விளையாடப்போனேன். நான் விளையாடச் செல்லும் வழியில் முஸ்லிம் இளைஞர்கள் விளையாடும் ஒரு வொலிபோல் கிரவுண்ட் இருக்கிறது. அன்று யாருமே அங்கு வொலிபோல் விளையாடவில்லை. தனியாகக் குழுமிநின்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் விளையாடிவிட்டு திரும்பி வரும்போது பொழுது சாய்ந்திருந்தது. அப்போதும் அந்த இளைஞர் கூட்டம் அங்கிருந்து நகரவில்லை. நான் ஒருவித மிரட்சியோடு அவர்களைக் கடந்துவந்தேன்.அத்தையும் மாமாவும் வீட்டிலிருந்தார்கள்.அவர்கள் மன்னாரில் 'பெரியகமம்' என்ற பிரதேசத்தில் வசிக்கிறார்கள். நான் வீட்டினுள் நுழைந்த சமயம் அம்மா அவர்களுக்கு கண்ணாடி உடைந்த கதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணித்துக்கொண்டிருந்தார்.அத்தை என்னைக் கண்டதும் நான் இவ்வளவு நேரம் பிந்தி வந்ததைக் குறித்துப் பேசினார்.கொஞ்சநாட்களுக்கு விளையாடப் போகவேண்டாமென்று சொன்னார். நான் முகங் கைகால் கழுவி முடித்து குசினிக்குள் போனேன். அம்மா டவுனிலிருந்து மொத்தமாக சமையல் பொருட்கள் வாங்கிவைத்திருந்ததைப் பார்த்ததும் காக்காவின் கடை அன்றும் திறக்கவில்லை என்பது நினைவுக்கு வந்தது.நோன்புக்கஞ்சி வந்த ஜக் வெறுமையாக கவிழ்க்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்த நாட்களில் ஏரியா மிகுந்த அமைதியோடு காணப்பட்டது. பள்ளியில் 'வாங்கு' ஓதும்போது அது உயிர்பெற்று விடுவதாகத் தோன்றும்.'வாங்கு' ஓதி முடிந்ததும் பழையபடி சோபையிழந்துவிடும்.சமையற்கட்டுகளில் இருந்துவரும் தாளிக்கும் வாசனைகளே அங்கே மக்கள் வசிக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாயிருந்தது. பெரும்பாலும் ஆண்களே வீதிகளில் தென்பட்டனர். இரவு நேரங்கள் எந்தவித சலசலப்புமில்லாமல் கடந்துபோயின.நோன்புகாலம் முடிவடையநாட்கள் நெருங்கிய வண்ணமிருந்தபோது மாற்றங்கள் படிப்படியாக நிகழத் தொடங்கின.அதுவரையில் ஏழு எட்டு மணியோடு வீட்டோடு அடங்கிப்போன ஆண்கள் நீண்டநேரம் வீதியில் நின்று பேசினர். முதலில் சிறுவர்களும் தொடர்ந்து பெண்களும் என வீதியில் இறங்கினார்கள். வெள்ளைத்தொப்பிகளும் கறுப்புப்படுதாக்களும் தெருவெங்கும் நிறைந்து பெருகின.ஏரியா அமைதியைக் கலைந்து கொண்டாட்டத்தைப் பூசிக்கொண்டது.

ஒரு கிழமை கழித்து நான் விளையாடப் போகத் தயாரானேன். அம்மாவும் அப்பாவும் வாசலில் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். மழைக்கால ஈசல்கள் போல நிஜார்காக்கா குடும்பம் வீதியில் திடீரென வெளிப்பட்டது. சிஹாப் உம்மாவின் பின்னால் ஒளிந்து ஒளிந்து வந்தான். முதலில் யார் பேசுவது என்ற பதற்றம் எல்லோர் மேலும் தொற்றியிருந்ததை அறியமுடிந்தது. அம்மா சிஹாப்பைப் பார்த்து அந்த வார்த்தையைச் சொல்லிச் சீண்டலாமா வேண்டாமாவென யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்தார். அதற்குள்ளாக உம்மாவின் பின்னால் பதுங்கி வந்த சிஹாப் ஓட்டைப்பற்கள் வழியே காற்று வெளியேறச் சொன்னான். "சோனவன் ஒளிஞ்சு போறான் கண்டுபுடிங்க பாப்பம்". எல்லோரும் சிரித்தோம். நிஜார் காக்கா குடும்பம் எங்கள் அருகே வந்து நின்றது. மீண்டும் அமைதி ஏற்படமுன் அப்பா கண்ணாடி உடைந்த சம்பவத்தைச் சொல்ல ஆரம்பித்தார். நிஜார் காக்காவின் மனைவி சொன்னார். "அங்கன ஒரு ஊட்ல கிறிஸ்டியன் ஆக்கள்தான் இருக்காங்க. ஆனா அவங்க இருக்கிறது வாடகஊடு. ஒரு முஸ்லிம்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுதான் அது. அந்தஊட்டு கேட்ல பிறையும் நட்சத்திரமும் இருக்கும். இவனுக யார் எவர் ஊட்ல இருக்காங்க எண்டு பாக்காம அந்த ஊட்டு கேட்டையும் நெருக்கிடாங்க. அதே கததான் ஒங்களுக்கும் நடந்திருக்கு". நாங்கள் இறுக்கமான மனநிலையிலிருந்து விலகி இருதரப்பினரும் செய்த அடாவடித்தனங்களை நக்கலடிக்க வெளிக்கிட்டோம். காக்காவின் குடும்பம் சிறிதுநேரம் எங்களுடன் கதைத்துவிட்டு கடையை நோக்கிச் சென்றது. அம்மா அவர்களை நிறக்ச் சொல்லிவிட்டு உள்ளே சென்று நோன்புக்கஞ்சி ஜக்கை எடுத்து வந்து காக்காவின் மனைவியிடம் ஒப்படைத்தார். நான் விளையாடி முடித்து திரும்பும் போது கடை திறந்திருந்தது. குசினிக்குள் சென்று பார்த்தேன். நோன்புக்கஞ்சி ஜக் முட்டமுட்ட நிரம்பியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பெறுமதி

## By: S.Mathivathani



சுதந்திரம் என்பது அனைவராலும் அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு சொல் ஆகும். சிறுவர்கள் தங்களுடைய பெற்றோர் தம்மீது குறைகண்டுகொண்டே உள்ளனர். தங்களுக்கு வீட்டில் எந்தசுதந்திரமும் இல்லை என்று குறை காண்கின்றனர். மனைவிமார் தங்களுக்கு சுதந்திரம் இல்லை எனவும் ஓர் அடிமையைப்போல் நடத்தப்படுவதாகவும் கூறுகின்றனர். தொழிலாளர்கள் வேலைத் தளத்தில் எந்தசுதந்திரமும் இல்லை என்று கூறுகின்றனர். ஏழைகள் அவர்களை பசிக்கொடுமையிலிருந்து விடுவிக்க அரசாங்கம் ஒரு வழியைக் கண்டுபிடிக்கவில்லை எனப் பழித்துரைக்கின்றனர், வேண்டுகின்றனர். ஊடகவியலாளர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சுதந்திரம் இல்லை என சத்தமிடுகின்றனர். பத்திரிகைகள் சமயச் சுதந்திரத்தின் சட்டமீறல்களை குற்றம் சாட்டுகின்றனர். ஒவ்வொருவரும் சொந்தமதத்தைப் பின்பற்றும் உரிமை அடிப்படை உரிமையாகும். எதிர்கட்சிகள், அழுத்தம் கொடுக்கும் அடித்தட்டு இனங்களின் பிரதிநிதிகள் போன்றோர் பொதுமேடைகளில் உரத்து ஓலமிடுகின்றனர்.

படைவீரர்கள், தங்களுக்கு இருக்கின்ற சுதந்திரத்தை அனைவரும் தாக்குகின்றனர். எல்லைமீறி யாருடைய தேசத்தை ஆக்கிரமிக்கவும் முயல்கின்றனர். அனைவரையும் மோசமாகக் கொன்றுகுவிக்கின்றனர் என வருந்துகின்றனர். ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் இந்த அரசாங்கம் அதிகாரத்தில் உள்ளது என வசதியாக பொய் சொல்வதாக வாய்ச்சண்டையாடுகின்றனர். நடைமுறைப்படுத்தும் நிர்வாகத்தில் இருப்போர் தங்களுக்கு வேலையாட்களை எதுவும் செய்யும் சுதந்திரம் இருக்கிறது என நினைக்கின்றனர்.


எங்களில் அநேகமானவர்கள் சுதந்திரத்தை எடுத்துக் கொள்ள அனுமதிக்க மற்றும் மூதாதையர்கள் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காகச் செய்த தியாகங்களையும் அதற்கு நடந்த கொடுமைகளையும் கவனிக்க மறந்துவிட்டனர். எங்களில் பலர் சுதந்திரம் என்பதற்கான உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்ளாததுடன் சுதந்திரத்தின் பெறுமதியையும் நினைவில் கொள்ளத் தவறிவிட்டனர்.

ஆகவே சுதந்திரம் என்றால் என்ன? இது ஒரு தீர்க்கமான உரிமையா? அதன் உட்பொருள் எதை உணர்த்துகின்றது? தத்துவவியலாளர்கள், தலைவர்கள், ஊடகவியலாளர்கள், வாக்களிப்போர் மற்றும் மக்கள் கூட இந்தச் சொல்லை வரையறை செய்ய முயன்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரோங்கிளின் ரூஸ்வெல்ட் நான்கு சுதந்திரங்களை ஆதரித்துள்ளார்.முதலாவது உலகில் பேச்சுச் சுதந்திரம் மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம் இரண்டாவது உலகெங்கும் ஒவ்வருவரும் தம்முடைய கடவுளை வணங்கும் சுதந்திரம், மூன்றாவது உலகின் தேவைகளிலிருந்து சுதந்திரம், நான்காவது உலகின் அச்சுறுத்தல்களில் இருந்து சுதந்திரம்.




இங்கு ஒரு பிரபலமான மேற்கோள் உண்டு. அது வருமாறு,

"மனிதன் என்பவன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்

ஆனால் எங்கும் அவன் ஒருசங்கிலியால் பிணைக்கப்படுகின்றான்."

ஜேம்ஸ் பாலட்வின்னுடைய கருத்து என்னவெனில் சுதந்திரம் என்பது ஏதோ ஒன்றல்ல. அது அனைவராலும் பெற்றுக் கொள்ளக்கூடியது. சுதந்திரம் என்பது மக்கள் தாங்கள் விரும்பியபடி தடையின்றி இருப்பது மற்றும் விரும்பியவற்றை எடுத்துக் கொள்வது ஆகும். இது ஒரு அப்பட்டமான உண்மை ஆகும்.

சுதந்திரம் என்பது தெளிவாக பல்வேறுபட்ட அம்சங்கள், வேறுபட்ட கலாச்சாரங்களிலிருந்து பல்வேறுபட்ட மக்களால் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. சுதந்திரமானது ஒரு கலாச்சாரத்திலிருந்து இன்னொரு கலாச்சாரத்தில் வேறுபாடு அடைகின்றது. சுதந்திரத்தை ஒரு இயற்கை உரிமையாக வரையறுக்க முடியும். முனித வாழ்க்கை சுதந்திரத்துடனேயே பிறக்கின்றது. ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து தடையின்றி, சுதந்திரத்துடன் இருக்கவேண்டுமென விரும்புகின்றனர். எங்கு வாழவேண்டும், என்ன உண்ணவேண்டும், என்ன படிக்கவேண்டும் மற்றும் எந்த மதத்தை நம்பவேண்டும் என்பதுடன் மற்றவர்களுடைய உரிமைகளுக்கு தீங்கின்றி மற்றும் அலட்சியப்படுத்தாமல் வாழ்வதே சுதந்திரம் ஆகும்.

சுதந்திரம் என்பது முற்று முழுதானதல்ல. சுதந்திரமானது மட்டுப்படுத்தப்பட வேண்டி இருக்கின்றது. "நான் சுதந்திரமனிதன்" என்றுசொல்வதைப் போல் உங்களால் நடந்துகொள்ளமுடியாது.

சிலர் சொல்வர்,

"உங்கள் விரல் நுனியின் சுதந்திரம் என் மூக்கு நுனிவரையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான் யாருடைய சுதந்திரத்தின் தொடக்கத்தில் முடிவடைகிறது.

எப்படி எங்களால் சுதந்திரமாக வாழமுடியும்? தடையின்றி வாழ்வதற்கு மற்றவர்களுடைய உரிமைகளை மதித்து வாழ்ந்தாலே எம்மால் சுதந்திரமாக வாழமுடியும். நாம் வாழும் சமூகத்தில் உள்ள மக்களின் உரிமைகளை நாம் அலட்சியப்படுத்த முடியாது. நாம் மற்றவர்களுடைய உரிமைகளையும் கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மற்றவர்களுக்கு சுதந்திரத்தை நிராகரிப்பவர்கள் தாங்கள் அதற்கு தகுதியானவர்களா என எண்ணவேண்டும்.

தாராண்மைவாதக் கருத்தில் சுதந்திரம் என்பது பொறுப்புக்களிலிருந்து வருவதால் அடக்குமுறையிலிருந்து வருவது எனக் கருதப்படுகின்றது.

அத்தோடு நிச்சயமாக சுதந்திரத்திற்கான முயற்சிகள் ஒருபோதும் தேசியபாதுகாப்பின் அச்சுறுத்தலுக்கு வழிவகுக்காது.

பெற்றோர் கட்டாயமாக தங்களுடைய இளையவர்களுக்கு சுதந்திரமாக இருப்பதற்கு கற்பிக்கவேண்டும். அவர்கள் அவர்களது காதலை சுதந்திரத்திரத்திற்காக காட்டவேண்டும். ஆனால் அவர்களது சுதந்திரம் கண்டிப்பாக கண்காணிக்கப்படும். அது வரையறைகள் இன்றி அமைந்து இருக்காது. அவர்களுக்கு எந்த வரையறையுமின்றி சுதந்திரத்தை அள்ளி வழங்கினால் அவர்கள் அதீதத்திற்கு கீழ் சென்றுவிடுவதுடன் இழப்பையும் சந்திக்கலாம். எனவே நாம் அவர்களுடைய நடத்தையை கண்காணிக்கவேண்டும். அவர்களுக்கு சரி எது பிழை எது, எதை தவிர்க்க வேண்டும் என்பதையும் நாம்தான் கற்பிக்கவேண்டும்.

தொகுத்து நோக்கினால் சுதந்திரம் என்பது இயல்பான உரிமை.

▼▼▼




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னங்கள் தாண்டிய சன்னதம்

## Speech By: Malala

## Translated By: M.Gowsika



மேன்மைதகு ஐ.நா செயலாளர் திரு பான்கிமூன், பொதுக்கூட்டத்தின் மதிப்பிற்குரிய தலைவர் அக் கெரிமிக், மதிப்பிற்குரிய ஐநாவின் உலக கல்வி தூதர் திரு. கோர்டன் பிரவுண், பெருமதிப்பிற்குரிய பெரியவர்களே மற்றும் என் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே அனைவருக்கும் அஸ்ஸலாமு அழைக்கும் (வணக்கம்)

நீண்ட நாட்களுக்கு பின்னர் மீண்டும் இன்று நான் பேச இருப்பது மிகவும் மகிழ்வாக உள்ளது. எனது வாழ்க்கையில் பல மரியாதைக்குரிய மனிதர்களுடன் இங்கு இருப்பதுதென்பது பெறுமதி மிக்க தருணமாகவும் உள்ளது. அதாவது நான் இன்று காலம்தாழ்ந்த பெனசீர் பூட்டோ அவர்களின் சால்வையை அணிந்திருக்கிறேன். எனது உரையை எங்கு ஆரம்பிப்பது என்று எனக்கு தெரியவில்லை. மக்கள் நான் என்ன சொல்லப்போகின்றேன் என எதிர்பார்க்கிறார்கள் என எனக்குத் தெரியவில்லை. ஆனால் எல்லாவற்றுக்கும் முதலாக நான் இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன். எங்கள் அனைவரையும் சமமாக வைத்திருப்பதற்காகவும் மற்றும் எனது புதிய வாழ்விற்கும் நான் விரைவாக குணமடைய யார் இறைவனை வேண்டிக் கொண்டார்களோ அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மக்கள் என்மேல் இவ்வளவு அன்பினை காட்டியுள்ளார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. நான் ஆயிரக்கணக்கான வாழ்த்து மடல்கள் மற்றும் பரிசுப் பொருட்களை உலகம் பூராகவுமிருந்து பெற்றுள்ளேன். எனக்கு ஊக்கமளித்த சிறுவர்களின் மழலை மொழிகளுக்காகவும் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். பெரியவர்களிற்கும் பிரார்த்தனை என்னை பலப்படுதியமைக்காக அவர்களுக்கும் எனது நன்றிகள். பாகிஸ்தான் மற்றும் பிரித்தானியா, ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள தாதிகள், மருத்துவர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் யாரெல்லாம் எனது சக்தியை மீளப் பெறவும் நான் நலமாகவும் உதவி புரிந்தார்களோ அவர்களுக்கும் எனது நன்றிகளைக் கூற விரும்புகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான நண்பர்களே ஒன்பாதம் திகதி ஒக்ரோபர் மாதம் 2012 ஆம் ஆண்டு அன்று தலிபான் எனது இடது பக்க நெற்றியில் சுட்டார்கள். அவர்கள் எனது நண்பர்களையும் கூட சுட்டார்கள்.அவர்கள் நினைத்தார்கள் அவர்களது குண்டுகள் (நாங்கள்) எங்களை மௌனிகளாக்குமென. ஆனால் அவர்கள் தோற்றுவிட்டார்கள். அத்துடன் அந்த மௌனத்தை தாண்டி ஆயிரக்கணக்கான குரல்கள் வெளிவந்தன. பயங்கரவாதிகள் எனது எதிர்கால கனவை நொறுக்கி எனது இலக்கை மாற்றலாம் எனவும் எண்ணினார்கள். ஆனால் தோல்வி, பயம் நம்பிக்கையின்மையின் மரணம் என்பவற்றை தவிர எதனையும் என் வாழ்வில் அது மாற்றிவிடவில்லை. உறுதி, சக்தி, மற்றும் வீரம் ஆகியன பிறப்பெடுத்தன. நான் அதே மலாலா தான். எனது எதிர்கால நம்பிக்கைகளும் அவையே தான். அன்பான சகோதர சகோதரிகளே நான் எந்த நபருக்கும் எதிரானவள் அல்ல தலிபான் அல்லது வேறு எந்த பயங்கரவாதகுழுக்களுக்கும் எதிராக எனது தனிப்பட்ட பழிவாங்கும் வகையிலும் நான் இங்கு பேசிக் கொண்டிருக்கவில்லை. நான் இங்கே ஒவ்வொரு பிள்ளைக்குமான கல்வி உரிமை பற்றியே பேசுகிறேன். நான் தலிபான்கள் அனைத்து பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளுடைய மகன் மகள்களின் கல்வியையே வேண்டுகின்றேன்.தலிபான் யார் என்னை சுட்டிருப்பினும் நான் அவனைக் கூட வெறுக்கவில்லை. அங்கே என்னுடைய கையில் ஒரு துப்பாக்கி இருந்ததாலும் அவன் என் முன்னால் நின்றிருப்பினும் நான் அவனை சுட்டிருக்கமாட்டேன். ஏனென்றால் இந்த இரக்கத்தை நான் கருணையுடைய முகம்மது நபியிடமிருந்தும் இயேசு கிறிஸ்து மற்றும் புத்தரிடமிருந்தும் கற்றுள்ளேன். இந்த மரபின் மாற்றத்தை மாட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா மற்றும் முகம்மது அலி ஜின்னா அவர்களிடமிருந்து பரம்பரை சொத்தாக பெற்றுள்ளேன்.

ஐநா பொது செயலாளர் பான்கிமூன் அவர்களுடைய கல்விக்கான முதல் முயற்சிக்காகவும் மற்றும் அதன் வேலைத்திட்டத்திற்கான ஐநாவின் உலகளாவிய கல்விக்கான விசேட தூதுவர் கோர்டன் பிரவுண் மற்றும் ஐநா வின் பொதுச் சபையினுடைய மதிப்பிற்குரிய தலைவர் வுக் கேரிமிக் கிற்கும் நான் முழு ஆதரவாக இருக்கிறேன். அவர்களின் தலைமைத்துவத்தை அவர்கள் தருவதற்கு நான் நன்றி கூறிக்கொள்கின்றேன். அவர்கள் செயற்பாடுகள் தொடர்ந்தும் எங்களை ஊக்கப்படுத்தும். சகோதர சகோதரிகளே ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் மலாலாவின் தினம் எனது தினம் அல்ல. இன்றைய தினமானது யார் தங்களது உரிமைக்காக குரல் உயர்த்தியுள்ளனரோ அந்த ஒவ்வொரு பெண்கள் , சிறுவர் சிறுமியர்களின் தினமாகும்.

நூற்றுக்கணக்கான மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமூக தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக மட்டும் பேசவில்லை அவர்களுடைய இலக்கான சமாதானம் கல்வி மற்றும் சமத்துவத்தினை அடைந்து கொள்ளவும் அவர்கள் சுடப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் மற்றும் மில்லியன் கணக்கானோர் காயப்பட்டிருகிறார்கள். நானும் அவர்களில் ஒருத்தி தான். ஆகவே நான் பல போர்களுக்கிடையில் ஒரு பெண்ணாக இங்கு நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொண்டிருக்கிறேன். நான் இங்கு எனக்காக மட்டும் பேசவில்லை. ஆனால் அவ்வாறு அவர்கள் குரல் எழுப்பாமலே அறியக்கூடியதாக இருக்கிறது. அவர்கள் தங்களது உரிமைக்காக போராடியிருக்கிறார்கள். அவர்களது உரிமை சமாதானமாக வாழ்வதிலேயே இருக்கிறது. அவர்களது உரிமைகள் மரியாதைக்குரியதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் உரிமை சமத்துவத்திற்கு வாய்ப்பானதாகும். அவர்களது உரிமை கல்வியறிவு கொண்டிருத்தலாகும்.

நான் காந்தி, யச்சா கான் மற்றும் அன்னை தெரேசாவிடமிருந்து இந்த அகிம்சை தத்துவத்தை கற்றிருக்கின்றேன். மற்றும் மன்னிக்கும் தன்மையை நான் எனது தந்தை மற்றும் தாயிடமிருந்து கற்றுக் கொண்டேன். சாந்தமாக இரு, அனைவரிடமும் அன்பாயிரு என எனது ஆத்மா எனக்கு சொல்லிக் கொண்டிருக்கிறது. அன்பான சகோதர சகோதரியரே நாங்கள் இருட்டினை பார்க்கும் போது தான் வெளிச்சத்தின் தேவையை புரிந்து கொள்ள முடிகிறது. நாங்கள் அமைதியாக இருந்த போது தான் எங்கள் குரலின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்கிறோம். அதே வழியில் பாகிஸ்தானின் வடக்கு ஸுவாட் இல் இருந்த போது துப்பாக்கிகளை பார்த்தபோது தான் நாங்கள் பேனைகளினதும் புத்தகங்களினதும் முக்கியத்துவத்தை உணர்ந்தோம். அதே வாரியாக சொல்லுகையில் வாளினை விட பேனா வலிமை வாய்ந்தது. இது உண்மையானது. தீவிரவாதிகள் பேனைகளுக்கும் புத்தகங்களுக்கும் பயப்படுகிறார்கள். கல்வியினுடைய சக்தி அவர்களை அச்சமூட்டுகிறது. அவர்கள் பெண்களுக்கு பயப்படுகிறார்கள். பெண்களினுடைய குரலின் சக்தி அவர்களை அச்சமடைய வைக்கிறது. இதனால் தான் அண்மையில் அவர்கள் குவட்டாவில் 14 அப்பாவி மக்களை கொன்றுள்ளனர். அதனால் தான் அவர்கள் பெண் ஆசிரியர்களையும் கொல்கிறார்கள். அதனால் தான் ஒவ்வொருநாளும் பாடசாலைகளை வெடித்து சிதற வைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் மாற்றத்தைக் கண்டு பயப்படுவதோடு நாங்கள் சமத்துவத்தை எங்கள் சமுதாயத்திற்கு கொண்டு வந்து விடுவோமோ என பயப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். அத்துடன் நான் ஒன்றை ஞாபகப்படுத்துகின்றேன் எங்கள் பாடசாலையில் ஒரு பையனை ஊடகவியலாளர்கல் கேட்டார்கள் ஏன் தலிபான்கள் கல்விக்கு ஏதிராக உள்ளார்கள் என அவன் அதற்கு மிகவும் இலகுவாக புத்தகத்தை எடுத்துக் காட்டி கூறினான் " தலிபானுக்கு இந்த புத்தகத்தின் உள்ளே எழுதப்பட்டுள்ளது என்ன என்பது தெரியாது" என சிறிய பழமைவாதிகளாக இருக்கும் அவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்காக மக்களினுடைய தலைகளில் துப்பாக்கிகளை குறிவைக்கிறார்கள், அவர்கள் கடவுள் சிறிய ஒருவராக இருக்கிறார் என்று நினைக்கிறார்கள். இந்த பயங்கரவாதிகள் இஸ்லாத்தின் பெயரை தங்களது தனிப்பட்ட நன்மைக்காக தவறாக பயன்படுத்துகிறார்கள். பாகிஸ்தான் அமைதியை விரும்புகிற ஒரு ஜனநாயக நாடக உள்ளது. பாகிஸ்தானிய தங்களைத் மகன் மகள்களுக்கான கல்வியை விரும்புகிறார்கள். அமைதிக்கான மனிதநேயம் மற்றும் சகோதரத்துவமான சமயமாக இஸ்லாம் உள்ளது. அது கூறுகின்றது ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வியை பெற்றுக்கொடுப்பதையே அது கடமையாகவும் பொறுப்பாகவும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் கல்விக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது. உலகின் பல பகுதிகளில் குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் பயங்கரவாதம் போர் மற்றும் முரண்பாடுள் என்பவற்றை பிள்ளைகள் பாடசாலை சென்று கொண்டிருந்ததிலிருந்து நிறுத்த வேண்டும். உண்மையில் நாங்கள் போரினால் களைப்படைந்து விட்டோம். பெண்களும் பிள்ளைகளும் உலகின் பல பகுதிகளிலும் பல வழிகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.




இந்தியாவில் அப்பாவியான ஏழைபிள்ளைகள் சிறுவர் தொழிலாளிகளாக பாதிக்கப் படுகிறார்கள். நைஜீரியாவில் பல பாடசாலைகள் அழிவடைந்து வருகின்றன. ஆப்கானிஸ்தானில் மக்கள் பயங்கரவாதி களால் பாதிப்படைந்து வருகிறார்கள். இளம் பெண்கள் சிறுவர்கள் தொழிலாளர்களாக்கப் படவேண்டும் என ஆதிக்கம் செலுத்தப்படு வதோடு சிறு வயதிலேயே திருமணம் செய்ய வேண்டும் என்றும் வன்புறுத்தப்பட்டு வருகிறனர். ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பாலாரும் வறுமை, அறியாமை, அநீதி, இனவாதம் மற்றும் அடிப்படை உரிமைகளின் கையறு நிலை ஆகிய முக்கிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

நான் இன்று பெண்கள் உரிமைகள் மற்றும் பெண்களின் கல்வி தொடர்பில் கவனம்செலுத்துகின்றேன்.ஏனென்றால் அவர்கள் அதிகப்படியாக அவற்றினால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.அப்போது ஒரு காலம் பெண்களின் சமூக ஆர்வலர்கள் அவர்களது உரிமைகளுக்காக ஆண்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.ஆனால் இந்நேரம் நாங்களே எங்களுக்காக இதைச்செய்கிறோம். ஆண்கள் பெண்களின் உரிமையைப் பற்றிப் பேசுவதிலிருந்து விட்டு விலகியதாக நான் சொல்லவில்லை.நான் கவனம் செலுத்தவது பெண்கள் சுதந்திரமாக இருக்கவும் பேதங்களுக்காகப் போராடுவதிலும் தான்.ஆகவே அன்பான சகோதர சகோதரிகளே, இன்று பேசுவதற்கான தருணம். ஆகவே இன்று அவர்களுக்கு ஆதரவாக தமது மூலோபாயக் கொள்கைகளை மற்றும் அவர்கள் விரும்பும் அமைதியை செழிப்பிப்பதற்கான மாற்றத்திற்கான உலகத் தலைவர்கள் மாநாட்டிற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். ஒப்பந்தமானது பெண்கள் உரிமைகளுக்கு எதிராகச் செல்கிறது என்பது ஏற்கத்தக்கதல்ல. இலவச மற்றும் கட்டாயக் கல்வியை உலகிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் நாங்கள் உறுதி செய்வதற்காக அனைத்து அரசாங்கத்திற்கும் அழைப்பு விடுக்கிறோம். தீவிர வாதம் மற்றும் வன்முறைக்கு எதிராக போரிட அனைத்து அரசினையும் நாங்கள் அழைக்கின்றோம்.சித்திரவதை மற்றும் தீங்கு விளைவிப்பதிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்காகவும் அபிவிருத்தி அடைந்துவரும் உலகில் சிறுமிகளின் கல்வி வாய்ப்புக்கள் விஸ்திரப்படுத்துவதற்கு ஆதரவு செய்வதற்காக அபிவிருத்தி அடைந்த நாடுகளை நாங்கள் அழைக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் ,பிரிவும் நிறம், மதம் என்பவற்றின் அடிப்படை எதிர்ப்புணர்வை நிராகரிக்க சகிப்புத்தன்மையுடன் இருப்பதற்கும் அல்லது பெண்களுக்காக சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்யவும் அனைத்து சமூகங்களிற்கும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். ஆகவே அவர்களால் வழமை பெற முடியும். இது மீண்டும் நடைபெறும் போது நம்மில் அரைவாசிப்பேர் இதில் வெற்றி பெற முடியாது.உலகினை சுற்றியுள்ள அனைத்து எம் சகோதரியரும் வீரமாக இரு! அத்துடன் தாங்களாகவே விலிமை கொண்டும் இருப்பதற்காக அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

அன்பான சகோதர சகோதரியரே ஒவ்வொரு பிள்ளையினுடைய பிரகாசமான எதிர்காலத்திற்காக நாங்கள் பாடசாலைகளையும் கல்வியினையும் வேண்டுகின்றோம். நாங்கள் சமாதானத்தின் இலக்கிற்காகவும் கல்விக்காகவும் எங்களது பயணத்தை தொடருவோம். யாரும் எங்களை நிறுத்த முடியாது. நாங்கள் எங்கள் உரிமைக்காக குரல் கொடுப்போம். மற்றும் நாங்கள் எங்கள் குரலுக்கு மாற்றத்தை கொண்டு வருவோம். எங்களது சொற்களில் உறுதியும் சக்தியும் உள்ளதென்பதை நாம் நம்புகின்றோம். எங்கள் சொற்களில் இந்த முழு உலகையும் மாற்ற முடியும். ஏனென்றால் நாம் அனைவரும் கல்விக்காக ஒன்றுபட்டிருக்கிறோம். நாங்கள் எமது இலக்கை அடைய வேண்டும். எங்கள் அறிவினைக் கொண்டு எங்களுக்கு நாங்களே கவசமாக இருந்து ஒன்றுபட்டு இணைந்து செயற்பட முடியும்.

அன்பான சகோதர சகோதரிகளே இலட்சக்கணக்கான மக்கள் வறுமை மற்றும் அநீதி அறியாமையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை கட்டாயம் மறக்கக் கூடாது. மில்லியன் கணக்கான சிறார்கள் தங்கள் பள்ளிகளுக்கு வெளியே உள்ளனர் என்பதையும் நாங்கள் கட்டாயம் மறந்துவிடக் கூடாது. எங்கள் சகோதரிகள் அமைதியான எதிர்காலத்திற்கும் பிரகாசத்திற்கும் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கட்டாயம் மறந்து விடக்கூடாது. எனவே நாங்கள் கல்வியுரிமை, வறுமை, தீவிரவாதம் என்பவற்றிற்கு எதிரான போராட்டத்தை நடத்துவோம். எங்களுடைய புத்தகங்கள் மற்றும் எங்கள் பேனாக்களையும் அவர்களுக்கான சக்தி மிக்க ஆயுதமாக எடுத்துக் கொள்ள வழிவகுப்போம்.

ஒரு பிள்ளையால், ஒரு ஆசிரியரால், ஒரு புத்தகத்தால் மாற்றியமைக்க முடியும். கல்வியே ஒரே தீர்வு.

கல்வியே முதல்!

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அகராதியில் அர்த்தங்கள் தனித்துக் குடியிருப்பதில்லை'

**Interviewed by: Kaushalya Santhanam**

**Translated by: S.Jamila**



லக்ஸ்மி ஹோல்ம்ஸ்ரோமினுடைய மொழிபெயர்ப்புக்கள் தனித்துவமான தமிழ் எழுத்தாளர்களை ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளதுடன் படைப்பினுடைய எழுத்தின் சரியான தொனியை கண்டுகொள்வதைப்பற்றியும் எடுத்துரைக்கின்றன.

லக்ஸ்மி ஹோல்ம்ஸ்ரோம் பல தமிழ் இலக்கியப் படைப்புக்களை ஆங்கில மொழிபெயர்ப்பினூடாக உலகம் முழுதும் உள்ள வாசகர்களுக்கு வழங்குவதை திறம்படச் செய்தவர் என்னும் பாராட்டுக்குரிய படைப்பாளி ஆவார். அவருடைய எழுத்தைக் கையாளும் திறன், வார்ததைகளைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள நயம், புரிந்துகொள்ளும் பாங்கு ஆகியஅனைத்துமே அவருடைய மொழிபெயர்ப்புக்களை தனித்துவப்படுத்திக் காட்டுகின்றன. அவர் சிறுகதைகள், நாவல்கள் மற்றும் கவிதைகளை துல்லியமான நுட்பத்துடன் கையாண்டுள்ளார். சமகால எழுத்தாளர்களான அம்பை , சல்மா, பாமா, அசோகமித்திரன்,சுந்தர ராமசாமி, மௌனி, இமயம், நா.முத்துசாமி மற்றும் சேரன் ஆகியோர் அவருடைய முயற்சிகளின் காரணமாக அனைவரும் அறியத்தக்கவராகிவிட்டனர். இவர் தெற்காசிய புலம்பெயர் இலக்கியங்கள் மற்றும் கலைக் காப்பகத்தினுடைய நிறுவன அறங்காவலர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களை இந்த மொழிபெயர்ப்புப் பயணத்தில் ஈடுபட வைத்தது எது?**

இந்தியாவிலுள்ள பெரும்பாலானோரைப்போல நானும் ஒரு மொழியில் கூறப்பட்டுள்ள விடயங்கள் என்ன? அவற்றை எவ்வாறு வேறொரு மொழிக்குக் கொண்டு செல்வது? ஏவை கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன? எவை கொண்டு செல்லப்படவில்லை ஏன் அவை நிகழவில்லை என்பது து? என்பது பற்றி வியந்திருக்கின்றேன். புல வருடங்களுக்கு முன்பு நான் சிறு துணுக்களை தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தேன். பின்பு நான் என் பிரதான பாடமான ஆங்கில இலக்கியத்திலிருந்து ஆங்கிலம் மற்றும் இந்திய மொழிகளிலுள்ள இந்திய எழுத்துக்களை உடைய பாடத்திற்கு மாறினேன். பின்பு அதிலும் குறிப்பாக பெண்ணெழுத்தில் கவனம் செலுத்தினேன். பின்னர் நான் இந்தியப் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தொகுத்த போது அதில் அம்பையினுடைய மஞ்சள்மீன் கதையை மொழிபெயர்ததேன் அந்த மொழிபெயர்ப்பு நான் எதை எப்படி செய்ய விரும்பினேனோ அவ்வாறே அமைந்தது.

**இன்று நிலமை எவ்வளவு தூரம் மாறியுள்ளது?**

நான் நினைக்கின்றேன் இருபது முப்பது வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட தற்போது வெளியீட்டாளர்கள் மிகத் தீவிரமாக முன்னெக்கின்றனர். புல சிறந்த மொழிபெயர்ப்புக்கள் சீறப்பான முறையில் படைக்கப்பட்டிருப்பதுடன் அழகிய முன்னட்டைகளையும் கொண்டு வெளிவந்துள்ளன. குறைந்தபட்சம் சில வெளியீட்டாடைய மொழிபெயர்ப்பு பட்டியலில் கவனமெடுத்துக் கொள்வதுடன் அவற்றை மதிப்பாய்வுக்கும் உட்படுத்துகின்றனர். நுான் நினைக்கின்றேன் மொழிபெயர்ப்பிற்கென்று பரந்துபட்ட வாசகர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால் குறைந்தபட்சம் ஒரு வாசகனாவது இருப்பான் என்பதுதான் நிஜம்.

**செயன்முறைக்குட்படுத்தப்படுகின்ற படைப்பாற்றல் போதுமான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்கிறதா? அல்லது மொழிபெயர்ப்பாளர்கள் வாசகர்களுடைய முன் அனுமானக் கருத்துக்கள் மற்றும் மிகைப்படுத்தப்பட்ட எதிர்பார்ப்புக்களை பொறுத்துக்கொள்ளவேண்டுமா?**

நான் என்ன நினைக்கிறேன் என்றால் எழுத்தின் தனிச்சிறப்பைக் கண்டுரக்கூடிய மற்றும் கூர்மையான உணர்திறன்கொண்ட வாசகர்கள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான வாசகர்கள் மொழிபெயர்ப்பில் எது மிகச்சரியாக பங்கெடுத்துள்ளது என்பதை புரிந்துகொள்வதில்லை. மொழிகளானவை சொற்கள் மற்றும் வாக்கியக் கட்டமைப்பியல் ரீதியாக பெரும் வேறுபாடுகளைக்கொண்டுள்ளன என்ற கருத்தமைவை அவர்களால் பெரிதும் உள்வாங்கிக் கொள்ள முடியாது உள்ளது. அதாவது ஒரு மொழி இன்னொரு மொழிக்கு தானாகவே பெயர்ந்துவிடுவதில்லை. அன்றி நீங்கள் ஒரு கவிதை அல்லது மிக நீண்ட புனைகதை ஒன்றை மொழிபெயர்ப்பு செய்யும்போது அதன் முழுப்பகுதியின் ஒருமைப்பாடு பற்றி மனதில் நிறுத்திக்கொண்டிருக்கவேண்டும் என்பதை அவர்களால் உணரமுடியுமா? சொற்களும் வாக்கியங்களும் செங்கற்களும் சீமெந்துக்கலவைகளுமாக இருக்கலாம் ஆனால் அது நீங்கள் தொடர்ந்து முனைந்துகொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. ஆனால் நிச்சயமாக நான் மற்ற மொழிபெயர்ப்பாளர்களை படித்து உரைபெயர்த்து வித்தியாசமானமுறையில் மொழிபெயர்ப்பதில் விழிப்புடன் இருக்கின்றேன்.

**வெவ்வேறு மொழிக் கலாச்சாரங்கள் மற்றும் ஒவ்வொரு எழுத்தாளரின் தனிப்பட்ட தரம் ஆகியவற்றை குறையாது தன்வசப்படுத்துவதற்கு உங்களுக்கு எவை வழிகாட்டிகளாக அமைந்தன?**

இதற்கான பதில் அவ்வளவு சுலபமானது அல்ல. நான் நம்புகிறேன் மொழிபெயர்ப்பின் மிகக் கடினமானபகுதி எதுவென்றால் மூலப் படைப்பினுடைய சரியான தொனி மற்றும் அதன் சரியான கருத்தியலைக் கண்டுபிடிப்பதே ஆகும். அதை நான் பிரதிவிம்பம் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் அது சாத்தியமற்ற ஒன்று. ஆனால் அங்கு ஏற்கனவே வரலாறு மற்றும் கலாச்சாரப் பின்னணிகளைக்கொண்டு தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்ட ஒருவருடைய கடின உழைப்பு இருக்கின்றது. ஒரு மொழிபெயர்ப்பாளர் ஒரு போதும் கேள்விகளை எழுப்புவதற்கு தயங்கக்கூடாது. அர்த்தங்கள் என்பவை அகராதியில் தனித்துக் குடியிருப்பதில்லை என்பதை நாம் அறிவோம்.

**உங்கள் ஆரம்பகாலத்துடன் ஒப்பிடுகின்றபோது தமிழ் பெண்ணிய இலக்கியங்களின் மாற்றப்பாடுகளை நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள்?**

அது ஒரு பெரிய விடயமாக இருக்கின்றது. பெண்ணிய எழுத்திற்குரிய பண்பியல்புகளாக எதை விளக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. பல பெண் எழுத்தாளர்கள் பெண்ணியவாதிகளாக இருக்கின்றனர். அவர்களுடைய பெண்ணியம் என்பது தெளிந்த கருத்துநிலையில் தெளிவாக உள்ளது. ஆனால் நான் நம்புகின்றேன் அவர்களின் எழுத்துக்களில் உள்ள உந்துசக்தி அல்லது அவர்களின் எழுத்துக்களில் வருகின்ற மிகச்சிறந்த உதாரணங்கள் என்பவை சிந்தனை ரீதியானதோ அல்லது பொதுமயமானதாகவோ அல்லாமல் அவர்களுடைய சொந்த அனுபவங்கள் மற்றும் தனிப்பட்டரீதியாகப் பட்டுணர்ந்த அனுபவங்களிலிருந்து வெளிவருகின்றன. பாமாவினுடைய தலித் அரசியல், சல்மாவினுடைய முஸ்லிம் பெண்ணுலக அடக்குமுறைகளின் உள்ளார்ந்த பார்வை, இலங்கையில் போரின்போதும் போரிற்குப் பின்பும் பெண்களுக்கு நடந்த வன்கொடுமைகள் மீதான கவிதைகள், இளைய தமிழ் பெண் கவிஞர்களினுடைய பாலியல் தொர்பான அரசியல் ஆகியன இவ்வாறானவையே.

**நீங்கள் எவ்வாறு மொழிபெயர்ப்புக்களைத் தெரிவுசெய்கிறீர்கள்? படைப்பாளியா? அல்லது படைப்பா உங்களை மொழிபெயர்ப்பிற்கு அழைப்புவிடுப்பது?**

நான் ஒப்பந்தமான வேலைகளில் மட்டுமே ஈடுபட்டுள்ளேன். அது கடினமானதாக இருந்தாலும்கூட. அந்தவகையில் உண்மைதான் பணிகளே என்னை அழைக்கும். எழுத்தாளர் அழைக்கா விட்டாலும்கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதையை மொழிபெயர்ப்பதென்பது உரைநடையை மொழிபெயர்பதைக் காட்டிலும் வேறுபாடும் கடினமும் மிக்கதா?**

நிச்சயமாக ஒவ்வொரு கலைவடிவத்திற்கும் வெவ்வேறுபட்ட அணுகுமுறை தேவைப்படுகின்றது. நான் முன்பு கூறியது போல் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மனதில்கொள்ளவேண்டிய மொத்தப் படைப்பினுடைய முழுமையே அதுவாகும். கவிதை மொழிபெயர்ப்பு விடயத்தில் மிகவும் முக்கியமானது அந்தக் கவிதையானது கவிதையாக மொழிபெயர்க்கப்படவேண்டும். இல்லையேல் அதை மொழிபெயர்க்காதிருப்பது நல்லது.

**தெற்காசிய புலம்பெயர் இலக்கியங்கள் மற்றும் கலைக் காப்பகத்தினுடைய நோக்கங்கள் எவை? அவற்றில் எவற்றை அது அடைந்திருக்கின்றது?**

SALIDAA என்பது தற்போது SADAA என்பதாகப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது இந்தியா, பாகிஸ்தான் பங்களாதேஷ் மற்றும் இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோரால் 1947 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு கலை மற்றும் இலக்கிய வெளியீடுகளைச் சேகரித்தல், பாதுகாத்தல் ஆகிய பணிகளை செய்துகொண்டிருக்கின்றது. ஆவணக் காப்பகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வகைமாதிரிகள் டிஜிட்டல் காப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணக் காப்பகமானது 12 வருடமாக இருந்துவருகின்றது. படிப்படியாக இது வளர்ச்சியடைந்து வருகின்றது. கடந்த சில வருடங்களில் நாம் 1980 மற்றும் 1990 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஆசியப் பெண் எழுத்துக்களின் தொகுப்புக்களை தொகுத்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Flash Fiction**

## கனவிலே கொல்லலாம்

ஹலோ
"......"
டொக்டர் சகீரா?
"......"
ம் நான் உங்க பேசண்ட். கடைசியா உங்கள உங்க கிளினிக்ல மீட் பண்ணினனே
"......"
பிரச்சனையா? ம் பிரச்சனைதான்
"......"
நேர்லையா? இல்லை இல்லை வேணாம் நான் விசயத்த சொல்லிர்ரன் நீங்க அதுக்கான தீர்வ மட்டும் சொல்லிடுங்க டொக்டர்.
"......"
தயவு செய்து வச்சுடாதிங்க இது பல உயிர் சம்பந்தப்பட்ட விஷயம்
"......"
ஓம் ஓம் நீங்க நம்பமாட்டீங்க எண்டு தெரியும் ஆனா நன் சொல்றதெல்லாம் உண்மை,
"......"
நிங்க நம்பித்தான் ஆகணும். ஆதாரங்கள உங்களுக்கு அனுப்பி வைக்கிறன்.
"......"
தாங்க்யு டொக்டர்... ஆர் யு தெயர்?
"......"
ஓகே ஓகே செக் பண்ணி பாத்தன்.
"......"
சொல்றன். கொஞ்ச நாளைக்கு முன்னாடி எனக்கு மீக்றேன் வலி கூடிட்டே போகுதுன்னு உங்ககிட்ட கென்சல்ட் பண்ண வெளிக்கிட்டுடு இருந்தான்.
"......"
ம் யா இட்ஸ் 2 மந்த்ஸ் எகோ
"......"
ம் யா யா அப்போ நோர்மலாத்தான் இருந்தான். வார வழியில ஒருத்தர பெடஷ்டியண்ட் குரோஷிங்க்ல பாத்தன். அந்த முகம் இன்னும் எனக்கு நல்லா நினைவிருக்கு.
"......"
சம்பந்தம் இருக்கு டொக்டர்.. அந்த ஆள அண்டைக்கு இரவு நீங்க சொன்னது போல மெடிடேசன் பண்ணிட்டு படுத்த பிறகு கண்டனான்
"......"
நேர்ல இல்ல கனவில.
"......"
கனவில கண்டதுல பிரச்சினை இல்லைதான் . பட் கண்ட கனவுதான் பிரச்சனையே..
"......"
குழப்பல. எனக்குத்தான் குழப்பமா இருக்கு டொக்டர்..
"......"
அந்த ஆள நான் என்ட பைக்கால மோதிக் கொல்றது போல கனவு கண்டன்.
"......"
கனவுதான் . அது வெறும் கனவுதான் எண்டு என்ன நானே சமாதானப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திட்டன். பட் அதுக்கு பிறகு நடந்த இன்சிடண்ட்தான் என்ன டெய்லி கொன்னுட்டு இருக்கு.

"......"

பிரம்மை இல்ல. உண்மை. அடுத்த நாள் நான் பேப்பர்ல அந்த ஆளோட அக்சிடண்ட் நியுஸ் படிச்சன்.கனவில அவன நான்தான் கொலை செய்தான். ஆனா நான் கொல்லல அவன.

"......"

இல்லை டாக்டர் நான் இத பற்றி விசாரிக்க அந்த அக்சிடண்ட் நடந்த இடத்துக்கு போனான்.

"......"

அவன இடிச்ச வாகனத்த கண்டுபிடிகேல்லையாம். நான் அப்பிடியே ஓடி வந்துட்டன் டொக்டர்..

"......"

ஓம் டொக்டர்.இது தற்செயலா நடந்திருக்கலாம். அப்பிடியெண்டு மறுபடியும் சமாதானமாகி கொஞ்சம் ஆறுதல் பட்டன்

"......"

அதுலயும் பிரச்சனைதான்

"......"

என்ன பிரச்சனையா? தலயே வெடிக்குது எனக்கு. இது நடந்து 2 நாள் கழிச்சு நான் வழக்கமா போற மெய்ன் ரோட்ல ஒரு நாயக் கண்டன். நல்ல ஞாபகம் இருக்கு அது கருப்பு நாய் கடி நாய் போல இருக்கும்.

"......"

அதுக்கு இப்ப என்னவா? அண்டைக்கு இரவே அந்த நாய நான் அதே பைக்கால அடிச்சு கொல்றதா கனவு கண்டன்.

"......"

கனவுதானே இப்படித்தான் டொக்டர். நானும் நினைச்சன் ஆனா அடுத்த நாளே நான் போற வழியில அந்த நாய் செத்து கிடந்திச்சு. அநேகமா அத ஒரு வாகனம்தான் இடிச்சிருக்கோணும். ஆனா நான் இடிக்கேல்ல டொக்டர்..

"......"

இதுல ஏதும் பிரச்னை இல்லையா?

"......"

பிரச்சனை எனக்கில்ல டொக்டர். உங்களுக்குத்தான்

"......"

ஓமோம் உங்களுக்குத்தான்

"......"

குழப்பெல்ல. நான் நேற்றும் ஒரு கனவு கண்டன்.

"......"

அதுக்கு என்னவா ? நேற்று நான் கொலை செய்தது உங்களைத்தான் டொக்டர்.


***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன நல்லிணக்கமும் மொழிபெயர்ப்பும்

## By: L.Majoorathi



மனங்களை புரிந்துகொள்ள மொழிகள் தேவை இல்லை என்பது அன்பு கொண்ட நெஞ்சங்களின் உணர்வுப் பெருக்கில் மட்டுமே சாத்தியம். அந்நியப்பட்டு நிற்கும் இனங்களின் மனங்களை இணைக்க மொழித்தடைகளைத் தாண்டிய மொழி பெயர்ப்புக்கள் தான் தேவை என்று இன்று உணரப்பட்டிருக்கிறது. அத்தகைய மொழிபெயர்ப்பு என்பது யாது?, இன நல்லிணக்கத்திற்கு அது எவ்வாறு பங்காற்றுகின்றது?, இலங்கையில் குறிப்பாக சிங்கள-தமிழ் இனங்களின் நல்லிணக் கத்திற்கான மொழிபெயர்ப்பின் பங்களிப்பு போன்ற விடயங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழி ஆக்கத்தில் உள்ள ஒரு கருத்தை இன்னொரு மொழிக்கு பெயர்ப்பு செய்தலாகும். உண்மையில் மொழிபெயர்ப்பு என்பது இன்னொரு மொழியினூடாக மூல மொழியின் அர்த்தங்களைத் தாங்கி வருதல் என்பது மேலை நாட்டு கருத்தாகும் என பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இனம் என்பது குறிப்பிட்ட ஒரு மதம் அல்லது மொழி அடிப்படையில் ஒன்று சேர்ந்திருக்கின்ற ஒரு குழுவைக் குறிக்கின்றது. மூன்று தசாப்தங்களாக போரைச் சந்தித்த இலங்கைத் திருநாட்டில் தமிழ். சிங்களம் மற்றும் முஸ்லிம் ஆகிய மூன்று இனங்கள் முக்கியமானவை. சிங்கள மக்களின் மொழி சிங்களமாக இருப்பதுடன் அவர்களில் அதிகமானோர் பௌத்த மதத்தினை பின்பற்றுகின்றனர். தமிழ் மக்களின் மொழி தமிழ் மொழியாக உள்ளதுடன் அதிகமானோர் இந்து சமயத்தை சார்ந்தும் அதற்கடுத்த எண்ணிகையில் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தோரும் காணப்படுகின்றனர். இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் மொழியினையும் அது தவிர்ந்த இலங்கையின் மற்றைய பகுதிகளில் வாழும் முஸ்லிம் இனத்தவர்கள் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை பின்பற்றுகின்றனர். ஆக தமிழ்,சிங்களம் என்ற இனங்களின் வகுப்பில் மதம் செல்வாக்கு செலுத்தி இருந்தாலும் மொழி அடிப்படையிலேயே அதிகமாக நோக்கப்படுவதை சுட்டிகாட்ட வேண்டும். இந்த இனங்கள் தமக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வுடன் சுமூகமான நல்லுறவைப் பேணுகின்ற செயற்பாடு இன நல்லிணக்கம் என கூறப்பட முடியும். எனினும் இலங்கையில் அத்தகைய இன நல்லிணக்க சூழல் தோற்றுவிக்கப்பட முடியாமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன.

தமிழ் பேசும் சமூகம் சார்ந்து எழுந்த விடுதலை போராட்ட குழுவிற்கும் சிங்கள மொழி பேசுகின்றவர்களை பெருந்தொகையாக கொண்ட ஆட்சியாளர்களின் அரசுக்கும் இடையில் முப்பதாண்டு காலம் நிகழ்ந்து வந்த சுமூகமற்ற நிலைமை உள்நாட்டில் குழப்பத்தை விளைவித்து பாரிய யுத்தத்திற்கு இட்டு சென்றிருந்ததுடன் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்டு உடைமைகளையும் சூறையாடியிருக்கிறது. இந்த பிரச்சினைக்கான அடிப்படை காரணங்களில் ஒன்று மொழி ரீதியான தொடர்புகளை இரு சமூகமும் பேணிக்கொள்ளாமை என்பது ஏற்றுக் கொள்ளபட்டிருகின்றது. யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கச்செயன்முறை நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் பௌதீகரீதியான மீள் கட்டியெழுப்புதல் மட்டுமே சாத்தியமாகியிருந்தது. உளரீதியான ஆசுவாசப்படுத்தல் பெரும்பாலும் நிகழவில்லை. மனங்களில் ஏற்றபட்ட ரணங்களின் வலிகள் இனரீதியான பிரிவினை ஒன்றை மக்கள் மனதில் ஆழமாக வேரூன்ற செய்திருக்கிறது. யுத்தம் முடிவடைந்து விட்டதாக கூறப்பட்ட பின்னரும் இனம் சார்ந்த மனப் பிசகுகள் அவ்வவ்போது தலைதூக்கத்தான் செய்கின்றன. இந்நிலையில் இத்தகைய மனங்களில் இணக்கங்களை ஏற்படுத்த வேண்டிய அதிதீவிரமான தேவை ஒன்று உள்ளதை எவராலும் மறுக்க இயலாது.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மொழிபெயர்ப்புக்கள் எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும் என்பது இங்கே எழுப்பபடக்கூடிய மிக முக்கியமான கேள்வியாகும். ஈழத்து புகழ்பூத்த கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமாகிய சோப எனப்படும் சோ.பத்மநாதன் அவர்கள் "தென்னிலைங்கை கவிதை" என்ற சிங்கள கவிதைகளின் மொழிபெயர்ப்பு நூலை 2003 இல் வெளியிட்டிருந்தார். தமிழ் மக்கள் தொடர்பாக சிங்கள மக்கள் குரல் கொடுக்கவில்லையா? என்ற தனது கேள்விக்கான பதிலாக அவை அமைந்திருப்பதாக எடுத்துக்காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூலிற்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர். கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் நமக்கருகேயுள்ள இன்னொரு வாழ்முறையின் அந்நியங்களை அறிவது நமக்கும் நல்லது அவர்களுக்கும் நல்லது என்று குறிப்பிடுள்ளார். ஒரு சமூகத்திற்கு தன்னை வெளி சமூகம் எவ்வாறு பார்க்கிறது என்பதும் தன்னுடைய உருவம் மற்றவனுடைய கண்ணாடியில் எப்படி பிரதிபலிக்கின்றது என்பதையும் புரிந்துகொள்ள மொழிபெயர்ப்பு அவசியம். இந்த அடிப்படையில் இந்த இரண்டு பேராசன்களினதும் சிந்தனைகளினூடகவே மொழிபெயர்ப்பு எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும் என்ற கேள்விக்கான பதிலை தர முடியும் என் நம்புகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன நல்லிணக்கததிற்கு குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இரண்டு வழிகளில் மொழிபெயர்ப்பு பங்களிப்பு செய்யமுடியும்.

1. மொழிபெயர்ப்புக்களின் ஊடாக இரு சமூகம் சார்ந்த வாழ்வியல் முறைகள் பற்றிய புரிதலுக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்

2. இனப் பிரச்சினை தொடர்பாகவும் ஒரு சமூகம் சார்பாக மற்றையது கொண்டுள்ள கரிசனை தொடர்பிலும் இரு பாலாரும் தெரிந்து கொள்வதற்கு இடமளித்தல்




அன்டனி பர்கஸ் (Anthony Burgess) அவர்கள் “Translation is not a matter of words only: it is a matter of making intelligible a whole culture." என்கிறார். அதாவது மொழிபெயர்ப்பு என்பது வெறுமனே சொற்களை பற்றியது அல்ல. முழு கலாசாரத்தையும் புரிந்துகொள்வது என்பது அவர் கருத்தாகும். மொழியும் கலாச்சாரமும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை. ஒவ்வொரு மொழிக்கும் தனித்துவமான கலாச்சாரம் உள்ளது. எனவே சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புக்கள் இடம்பெறுவதன் மூலம் அம்மக்களின் கலாசாரம் மற்றும் வாழ்வியல் முறைகள் தொடர்பான புரிதல் தமிழ் மக்களிடம் ஏற்படும். அதே போன்றதான சூழல் தமிழ் மக்களின் ஆக்கங்களின் பெயர்ப்புக்கள் நிகழ்கின்ற சந்தர்ப்பங்களிலும் நிகழும். மற்றைய சமூகம் சார்ந்த ஆழமான புரிதல் இன நல்லிணக்கதிற்கு அடிப்படையான சகிப்புத்தன்மையை தோற்றுவிக்க வழிசமைக்கும். சிங்களம் என்பதும் பௌத்தம் என்பதும் அந்நியமானவை என்ற கற்பிதங்களை தமிழ் மக்களிடம் இருந்தும் தமிழ் மக்கள் பயங்கரவாதிகள் அல்லது தீவிரவாதிகள் என்ற எண்ணங்களை சிங்கள மக்களிடம் இருந்தும் அப்புறப்படுத்த முனைவதுதான் நல்லிணக்கதிற்கான முதற்படியாக அமைய முடியும்.இது அவர்களின் வாழ்க்கை முறைகளினூடு பயணிக்கின்ற எவராலும் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட முடியும் என்ற அடிப்படையில் இரு சமூகம் சார்ந்தும் எழுந்திருகின்ற அம்மக்களின் இயல்பை சரியாக எடுத்துச் சொல்கின்றதான நூல்களின் மொழிபெயர்ப்புக்களின் மூலமாக இவை எய்தப்பட முடியும்.

இரண்டாவதாக நடந்து முடிந்த யுத்தம் தொடர்பாக இரு சாராரும் கொண்டுள்ள கருத்துகளைப் பற்றியதாகும். தாம் அனுபவித்த வலிகள் தொடர்பாக சிங்கள மக்கள் ஆதரவுக் குரல் கொடுக்கவில்லையா? அவர்களும் நாங்கள் கொல்லப்படுவதை ஆதரிக்கின்றார்களா என்ற தமிழ் சமூகத்தின் கேள்விக்கு சிங்கள சமூகம் சார்ந்து ஆத்மார்த்தமான பதில்கள் தமிழ் மக்களிடம் போய்ச்சேர வேண்டும். அதே போல தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களின் மீது காழ்ப்புணர்ச்சிகள் இல்லை அவர்கள் தாம் அனுபவித்த துக்கங்களில் இருந்து மீளவில்லை என்ற செய்தி சிங்கள சமூகத்திடமும் போய்ச்சேர வேண்டும். இதற்கான பாலமாக மொழிபெயர்ப்பு செயற்பட முடியும். மொழி பெயர்ப்பு தான் மொழியால் சென்றடைய முடியாத இடங்களுக்கு கூடச் சென்று உறவுகளை உருவாக்கவும் பலப்படுத்தவும் முடியும்

சோ.பத்மநாதனின் *தென்னிலங்கை கவிதை* என்ற 2003 இல் வெளிவந்துள்ள மொழி பெயர்ப்பு நூல், சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு கவிதைகளை உள்ளடக்கிய *இணைப்போம் கரங்கள்* தொகுப்பு நூல் (1995), அத்துடன் சாமிநாதன் விமல் மொழிபெயர்த்த அம்மா என்ற சிங்கள நாவலின் மொழி பெயர்ப்பும் அவரே தமிழில் இருந்து சிங்கள மொழியிற்கு மொழிபெயர்த்த தமிழினி ஜெயகுமாரனின் *தியுனு அஸிபதக செவன யட்ட* என்ற தமிழினியுடைய வாழ்க்கை சரித்திரத்தின் சிங்கள மொழி பெயர்ப்பு போன்ற பல்வேறுபட்ட எடுத்துக்காட்டுகளை கூறமுடியும். சிங்கள எழுத்தாளர்கள் பாடுபொருளாக்கிய யுத்தத்தின் வலிகளும் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கின்றன. மகேஷ் முனசிங்க அவர்களது சிங்கள கவிதைகளினை ஃபகீமாஜஹான் அவர்கள் மொழிபெயர்த்து,அவற்றை *சிதைந்த பொட்டு* மற்றும் *கண்ணீர் ஏரி* என்ற பெயர்களில் தமிழில் மறுபாதி என்ற சஞ்சிகையில் தந்துள்ளமையினை குறிப்பிடலாம்.

இன்றைய இளைஞர்கள் இனம், மதம், மொழி கடந்த நட்புறவினை விரும்புகிறார்கள். அண்மையில் உயிரிழந்தவர்களுக்கான நினைவு மாதத்தை கொண்டாடிய தமிழ் மக்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிங்கள மொழி மாணவன் ஒருவன் கருத்து தெரிவித்திருந்ததுடன் அடுத்தவருடம் என் நண்பனுடன் உங்கள் துயரத்தில் பங்கெடுப்பேன் என்றும் தெரிவித்திருந்தார். சிங்கள மொழியிலேயே அமைந்திருந்த இந்த குரல் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் மிகவும் நெகிழ்ச்சிக்குரிய விடயமாக தமிழ் சமூகத்தினர் பகிந்து கொண்ட சம்பவத்தை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். மேலும் கடந்த வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வரவேற்பு விழாவில் எழுந்த மோதலை பாரிய இன விரிசலாக ஏற்படுத்த சில சக்திகள் முனைந்த போதும் பல்கலைக்கழக மாணவர்களிடம் இது சம்பந்தமான தெளிவு மனப்பான்மை இருந்ததை காண முடிகின்றது. இரு சமூகம் சார்ந்தும் பல மாணவர்கள் இதனைப் பற்றி கவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்திருந்ததுடன் இதனை இன மோதலாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பரஸ்பரம் தெரிவித்துக் கொண்ட கருத்துகளை சக மாணவர்கள் மொழிபெயர்த்து மற்றவர்களிடம் செல்லும்படியாக செய்ததை பற்றியும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மேலும் பல ஆண்டுகளிற்கு முன்னர் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த, என்னை ஆழமாக பாதித்த சிங்கள சகோதரன் எழுதிய *'Brighter tomorrow'* என்ற ஆங்கில கவிதையின் சில வரிகளினையும் அதன் மொழிபெயர்ப்பினையும் பகிர்ந்து கொள்வது சாலச்சிறந்தது என எண்ணுகின்றேன்.

'….Your religion isn't mine

My language is far away from yours

Why do you regard us as inferior? A question

Yet I ask "why do you think us as dominating?"

It is a question for our ancestors

For you and me, it is there to conquer………'

T.H. Fernando (De Mazenod college,kandana)

நன்றி: சண்டே ஒப்சேவர் (25.09.2005)

உன்னுடைய மதம் இல்லை என்னுடையது

என்னுடைய மொழியோ உன்னிலிருந்து வெகுதொலைவில்..

ஒரு கேள்வி,

"ஏன் எங்களை தாழ்ந்தவர்களாக கருதுகிறீர்கள்?"

நான் கேட்கிறேன்,

"ஏன் எங்களை ஆதிக்கவாதிகளாக எண்ணுகிறீர்கள்?"

இது நம் மூதாதையர்களுக்கான எங்களின் கேள்வி

உனக்கும் எனக்கும் இதை வெற்றி கொள்ள வேண்டியிருக்கின்றது.

உண்மையில் இக்கவிதையானது நல்லிணக்கத்தை விரும்பும் சகோதரன் ஒருவனது ஆத்மார்த்தமான வரிகளால் நிறைந்திருக்கின்றது. சில வரிகள் மட்டுமே இங்கு பகிரப்பட்டுள்ளது. சகோதரன் கூறுவது போலவே பழைய கற்பிதங்களை நாங்கள் வெற்றிகொள்ள வேண்டியிருகின்றது. மனங்களை வெற்றி கொள்ள வேண்டியிருக்கின்றது. குறுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மைகளை வெற்றி கொள்ள வேண்டியிருக்கிறது. அத்தகைய சிந்தனைகள் எல்லோருடைய மனங்களிலும் எழுகின்றன. மற்றவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியது தான் மொழிபெயர்ப்பாளர்களாகிய எங்களுடைய கடமை.

இவ்வாறு ஒரு சமூகம் இன்னொரு சமூகம் தொடர்பாக கொண்டுள்ள கரிசனை மற்றும் புரிந்துணர்வு என்பன மற்றைய சமூகத்திடம் எடுத்து செல்லப்படுதல் மற்றும் ஒரு சமூகம் கொண்டிருக்கின்ற வாழ்வியல் முறைகள் அவர்களது பழக்கவழக்கம்,நடைமுறைகள் தொடர்பான புரிதலுக்கு இடம் வகுத்தல் என்பன மொழிபெயர்ப்பால் மேற்கொள்ளப்படக்கூடிய மிக உயர்ந்த பணிகள் ஆகும். தனியே மொழிபெயர்ப்பினால் இந்த இன நல்லிணக்கம் அடையப்பட முடியும் என்பது இதன் கருத்து ஆகாது. இன நல்லிணக்கத்தை அடைவதற்கான ஒரு கருவியாக ஒரு பாலமாக ஒரு வழியாக மொழிபெயர்ப்பு செயற்பட முடியும் என்பது இதன் மூலம் நிறுவப்படுகின்ற நம்பிக்கை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I Am

By: A.A.M.Askar



I am only my self
I can't become you
There is no point
In trying to make me you

I know my self fully
But you don't know
Even a tiny bit
About me
Your plan is wrong

You can't draw my portrait
Because
The pencil is in my hand
Only I can crave my self
My chisel does not like
You chipping me

Understand
Your path is different
From mine

All this is ahimsa
But if it doesn't work
Ahimsa will take over

Therefore
Leave me alone
I want to be my self

## මම

මමමයි හැමදාම
මම ඔබ විය නොහකිය
ඔබ මා
ඔබ ලෙස දැකීම නිෂ්ඵලය

මම ගැන මමයි
හරියට දන්නේ
බඳක්වත් නොදනියි ඔබ
වැරැදිය ඔබේ සැලසුම

සිතුවම කළ නොහැකමා
තෙලිතුඩ මා අතේ
මට පමණියි මා
මක මකා ආදිය හැක්කේ
මට පමණයි මම
මගෙනි පමණයි මම
ඒකම එක අංගුවක්වත්
අසු නොවෙයි
නුඹේ නියනට

වෙන එකකි නුඹේ පාර
වෙන එකකි මගේ පාර
දැනගෙන වෙසෙමු ලෝකයේ

මෙතුවක් අහිංසාවයි
තවදුරටත් පැමිණියෝත්
විශ්ව රූපයෙන් පැමිණියි
අහිංසාව ලෝකය
ඉවත්ව යන්න ඉරණමින්
මම හැමදාමත්
මම විතරයි



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Translation in Tourism

## Importance of Translation and interpretation in cultural heritage tourism of Jaffna Peninsula

**By: B.Santhiya**

Nowadays cultural heritage tourism has become a significant major industry all over the world. It plays an important role in the national income of the country. After globalization all the nations of the world have come closer and become as one family. People of all nations visit other countries to meet one another, see places and learn about other cultures. Tourism is one of the national characteristics of all developed nations. As a matter of fact, tourism is part and parcel of their life style. For them, tourism encompasses many aspects such as meeting people, learning their socio-cultural behaviors, mutual understanding of one another and enlightening themselves.

Cultural heritage tourism has a positive economic and social impact. It establishes and reinforces identity. It helps to preserve the cultural heritage with culture as an instrument and it facilitates harmony and understanding among people. The cultural heritage tourism is not only concerned of the heritage value but it must also be involved in understanding the impact of tourism on communities and regions, achieving economic and social benefits providing financial resources for protection as well as marketing and promotion.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tourism is one of the Industries that needtranslations and interpretation the most, due to the diversity of the people, language and cultures in contact with each other and also the ever-increasing demands for localization of contents in multiple languages. Essentially, translation and interpretation forms part of the effort to prepare each country for foreign tourists, (who don't necessarily, speak the local languages) so thatthese tourists can discover the country's culture and what it has to offer visitors. This need to translate content related to travel, culture and tourism cuts across various formats, in the various business areas in which the tourist industry moves. Translation can effectively help in solving one of the biggest tourist dilemmas that of being short-changed or fleeced by unfamiliar people in foreign destinations. At the same time, translated tourism materials not only help tourists feel welcome in an unknown country but also tourist friendly destination thereby leading to significant tourism – related revenues.

Interpretation can in some cases also be used to increase revenue inflows. Even if displays are well marked and explained, audio tours are popular options and can be rented for an additional fee for attractions. Selling guide books and maps to help visitors navigate their way through a museum or an archaeological area is a popular option, and some places charge a small fee for group tours. (Cultural heritage and tourism: Dallen j.Timothy:304)

Heritage interpretation is an educational activity which aims to reveal meanings and relationships through the use of the original objects, by first – hand experience, and by illustrative media, rather than simply to communicate factual information.

Heritage interpretation is the communication of information about, or the explanation of the nature, importance, and purpose of historical, natural, or



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cultural resources, objects, sites and phenomena using personal or non-personal methods. Heritage interpretation may be performed at dedicated interpretation centers or museums, historical sites, parks, art galleries, nature centers, zoos, aquaria, host of other heritage sites and so on. Its modalities can be extremely varied and may include guided walks, talks, drama, staffed stations, displays, signs, labels, artwork, brochures, interactive, audio-guides and video-visual media.

Those who practice this form of interpretation may include rangers, guides, naturalists, museum curators, natural and cultural interpretative specialists, interpretation officers, heritage communicators, educators, visitor devices staff, interpreters or a host of other titles. (Prem nath Dhar, Distrbutors: 141-146:2010)

While ancient travels has undertaken various forms of interpretation. The genesis of modern interpretation started with nature guiding in the western world in the early 20th century. With the spread of the nature preservation, governments in Northern America, Europe, Australia and New Zealand Principles of sound interpretation were developed and disseminated through the world. In the latter part of the 20th century, the same concepts and museum became the new venues for interpretative planning and management. (Prem nath Dhar, Distrbutors: 229)

Sri Lanka is a tri-lingual country. Namely Tamil and Sinhala are official languages and English is second language and it serve as a bridge between Tamils and Sinhalese. In this manner the need for translators and interpreters in Jaffna cultural heritage tourism is undisputable. The Jaffna peninsula has predominently Tamil speaking people. The translation process



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mediates between domestic and foreign cultures and plays meaningful role for the economic and sphere needing translation and interpretation most for foreign and domestic tourists, while promoting the Jaffna cultural heritage tourism as big economic industry. Most of the foreign and domestic tourists come to see the tangible and intangible traditional aspects of Jaffna. Because most of the Sinhala, English and other language people come Jaffna to discover the cultural heritage aspects, life style, foods, festivals and so on. In this manner the translation is a vitalrequirement for translating the catalogues, brochures, menus, sign boards and interpreting is needed for oral translation between the tourists and tour guides. Translation is to help the tourists in dilemma situation and translated materials not only help the tourists who come into the country but also boosts the countries' popularity as a tourist resort. Through translation, interests, enjoyment, satisfactions of tourists are stimulated.

Jaffna cultural heritage tourism is not only involved with languages, but also introduces the local cultural and heritage of Jaffna peninsula to the Southern tourists and foreign tourists. Meanwhile, tourism interpretation should take the culture of both sides into consideration to make the visitors get a better understanding of the translated version from the perspective of culture. The purpose of interpretation is not only to enhance the experience of tourists, but also to provide the local community with a means of more effectively managing tourists to prevent negative site impact.

Cultural Heritage interpreters are an integral part of the cultural heritage tourism of Jaffna peninsula. It is about communicating a site's heritage and cultural values to tourists by communicating the meaning of a heritage site. Interpreters facilitate understanding and appreciation of the sites by the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

general public. They also create public awareness about the interpreters of heritage and its protection.

The interpreters have most influence on the visitors' experience, understanding and enjoyment of heritage. This form of communication is the most direct and is one that allows for a relatively higher degree of interaction. Very often, it is the only form of interpretation that a visitor has access to when visiting a heritage site. In this manner the interpreters play a major role in Jaffna cultural heritage tourism.

Heritage interpretation is the process of conveying and translating heritage information in an understandable and meaningful manner to the audience. So that they could appreciate, remember and may possibly use the information in some way. Many tourists may not know the real value of heritage and need for it regarding protection and conservation. It is the duty of the interpreter to communicate effectively.

In Jaffna cultural heritage places' very little chance is available to the non native Tamil to get explanation about the sites. Namely, there are no proper sign boards, information centers, competent translators and interpreters available in tourist sites and so on. so in this situation translation and interpretation services are most needed to the tourists.

Cultural Heritage interpretation is an integral part of heritage tourism. It is about communicating a site's heritage values to others. By communicating the meaning of a heritage site, interpreters facilitate understanding and appreciation of sites by the general public. They also create public awareness about the importance of heritage and its protection. Among different forms of interpretation, tours by heritage guides have the most influence on the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

visitors' experience, understanding and enjoyment of heritage. This form of communication is the most direct and is one that allows for a relatively higher degree of interaction Very often, it is the only form of interpretation that a visitor has access to when visiting a cultural heritage site.

Translation and interpretation are very important tool in Jaffna cultural heritage tourism for the tourists who visit from the southern Sri Lanka and foreign countries. Through Translation and interpretation, non- Tamil people can understand about the Jaffna cultural heritage aspects and the Jaffna cultural heritage aspects are going to spread to another part of the world.

References


1. Dallen.J.Timothy, Cultural heritage and tourism an introduction, St Nicholas house, 31-34 high street, Bristol 2AW.UK
2. *Pushparatnam, P*, 2014. Tourism and monuments of Archaeological Heritage in Northern Sri Lanka, Department of History University of Jaffna.
3. Branislav rabotić, tourist guides as cultural heritage interpreters: belgrade experience with municipality-sponsored guided walks for local residents, college of tourism,belgrade – serbia
4. http://blog.shaktienterprise.com/the-importance-of-translation-in-the-tourism-business/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கோடைகாலத்து மழை’ (கிம்ஹான வர்சா)

**By: Mohamed Makeen Faizal Wazeer**



**Lahiru Rathnayake who was a student at Ananda College is a young talented writer who is looking forward to save his motherland with his own capabilities.At present he is doing his studies at the University of Colombo as a management & Finance student. His debut novel "Sudhasun Isawuwa" was a successful creation which was promulgated in year 2009. "Gimhana Warsha", the 2nd novel written by Lahiru Rathnayaka is based on a brand new concept and also creates a new step for the literary**

*ஆனந்தா கல்லூரி. கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவரான லஹிரு ரத்னாயக்க இன, மத, தேசிய நல்லுறவை வளர்ப்பதில் தனது எழுத்துக்கள் மூலம் நாட்டுக்கு பங்களித்து வரும் இளைய தலைமுறை எழுத்தாளராவார். இவரது கன்னி முயற்சியான “சுதசுன் இஸவ்வ”(2009) என்ற குறுநாவல் இன்றும் சமூகத்தில் பெரிதும் வரவேற்பைப் பெற்றதாகும். வாசகர்களின் ஆவலுக்கு கிடைத்த பிரதிபலனாக இவர் தனது பல்கலைக்கழக அனுபவங்களுடாக உயரிய தார்மீக எண்ணங்களை வெளிப்படுத்தும் ‘கிம்ஹான வர்சா’ எனப்படும் நாவலை 2010ல் வெளியிட்டுள்ளார்.*

*இது ‘கிம்ஹான வர்சா’ (கோடைகாலத்து மழை)யின் முதலிரண்டு அங்கங்களின் தமிழ் மொழிபெயர்பாகும். கிம்ஹான என்பது சிங்களத்தில் நெடுங்கோடை எனப் பொருள்படும். அதேவேளை ‘வர்சா’ எனப்படுவது மழையைக் குறிக்க பயன்படும் வார்தையாயினும் இக்கதையின் பிரதான பாத்திரமொன்றின் பெயருடன் ஒத்துப்போகிறது.*

சிங்கள மூலம் : லஹிரு ரத்னாயக்க
தமிழ் மொழிபெயர்ப்பு : முஹம்மது மகீன் பைஸல் வஸீர்
இரண்டாம் வருடம்,
மொழிபெயர்ப்பு துறை, கலைப்பீடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகமரபின்படி வழக்கமாக அழைக்கப்படும், பல்லாயிரக்கணக்கான "சிரேஸ்ட உத்தமர்கள்", "மிகச்சிறந்த உத்தமர்கள்", "மிகச்சிறந்த சிரேஸ்ட உத்தமர்"களுக்கு மத்தியில் நான் பல்கலைக்கழகத்தின் எமது பீடத்திற்குள் காலடி எடுத்து வைத்தேன். "ஊத்த ஜூனியர்" ஆகிய நான் எந்தக்கணப்பொழுதாக இருந்தாலும் இவ்வாறான ஒரு உத்தமரின் பார்வைக்குப் புலப்படுவேன் என்பதை அறிந்திருந்தேன். அதுவரை யாரையும் பார்க்காதபடி தரையைப்பார்த்த வண்ணம் அவர்களுக்கு மத்தியில் பயணம் செய்தேன்.

"அடேய்... கண்ணாடி விரியன்.... வா இங்க..."

அது ஒரு "உத்தமருடைய" அழைப்புத்தான் என்ற முடிவுக்கு வர எனக்கு மேலதிக காரணிகள் தேவைப்படவில்லை. கல்லாசனத்தில் இருந்து பேய்ப்பார்வை செலுத்திய உத்தமரிடம் நான் நடுநடுங்கிய இதயத்துடன் சென்றேன்.

"அடேய்.. நீ ஏன் சுணக்கம்? காலை 7மணிக்கு முதல்தானே உன்ன வரச்சொன்ன நான்,
பேயா! ஏன் பிந்தி வந்த நீ?"

உத்தமர் நரம்பு மிதக்கும் வண்ணம் உறுமினார்.

நாம் அறிந்தவிதத்தில் பலவீனமானதொன்று வலிமைமிக்கதொன்றிடம் காட்டில்தான் இரையாகும். பல்கலைக்கழக பகிடிவதைக்காலமானது 'காட்டு சட்டம்' ஆட்சி செய்யும் காலமாகும். புதுமுக மாணவர்கள் "சிரேஸ்ட உத்தமர்களது" சுவைமிக்க இரையாகும்.

"கதையன்டா பேயா!"

என்னுடைய ஊமை நிலைகண்டு அவர் கடும் கோபமடைந்தார். நான் தொடர்ந்தும் அமைதிகாத்தேன். எனக்கு உண்மையிலேயே கதைக்க வேண்டும் போல் இருந்தது. இருப்பினும் எண்ணங்கள் சொற்களாக மாறவில்லை. என்னைவிட பரிதாபநிலைக்கு தள்ளப்பட்டிருப்பது என்னுடைய "உத்தமரே". கட்டுப்படுத்த முடியாத கடும் கோபத்தினால் அவர் எனது மூக்குக்கண்ணாடியைப் பிடுங்கி எடுத்தார்.

"சொல்லு பாப்பம், நீ எதுக்கடா கண்ணாடி பாவிக்கிறாய்?..."

மூக்குக்கண்ணாடியைச் சுற்றும் "உத்தமரது" அடுத்த கேள்வி முன்வைக்கப்பட்டது.

"தூரப்பார்வை தெரியுதில்ல அண்ணா..."

அந்த சொற்கள் சொல்லப்பட்டதா என்று எனக்கே சந்தேகமாக இருக்கிறது. இவ்வாறானதொரு கோழையாக நான் எவ்வாறு மாறினேன் என்பது புரியாத புதிரே. உண்மையில் இது நான் துணிச்சலைக்காட்ட வேண்டிய ஒரு சந்தர்ப்பம் அல்ல. சொல்வதைக் கேட்டுக் கொண்டும், செய்யச் சொல்வதைச் செய்து கொண்டும் இருப்பதைவிட வேறு புத்திசாலித்தனம் ஒன்றும் புதுமுக மாணவர்களாகிய நம்மிடம் இல்லை என்பதை நான் மிக மிகத் தெளிவாக விளங்கியிருக்கிறேன்.

நான் இங்கு வருவதற்கு முன்பு பல்கலைக்கழகப் பகிடிவதை பற்றி அறிந்திருந்தாலும் இவ்வளவு தூரம் அது கடுமையானதாகவும், அடக்குமுறையைக் கொண்டதாகவும் இருக்கும் என கனவிலும் நினைக்கவில்லை. நேற்றைய நாள் அதாவது நாம் பல்கலைக்கழகத்திற்குக் காலடி எடுத்து வைத்த முதல் சந்தர்ப்பத்தில் நிலமை இதற்கு முற்றிலும் மாற்றமாக இருந்தது. பீடத்தில் பெயர்ப்பதிவு செய்ததன் பின்பு எமக்கு சிரேஸ்ட சகோதர சகோதரிகளால் தேனீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. அதற்குப்பிறகு அரங்கில் எமக்கு வரவேற்பு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அது ஆடல், பாடல்,இசைக்கச்சேரி என மிகவும் கோலாகலமான நிகழ்ச்சியாக இருந்தது. அவற்றைப் பார்க்கும் போது பல்கலைக்கழகம் கேளிக்கைகளுக்கு ஒரு சிறந்த இடம் என்பதை என்னைப் போன்ற புதுமுக மாணவர்கள் நினைத்திருப்பார்கள். இருந்தாலும் அந்த எண்ணங்கள் தலைகீழாக மாறத்தேவைப்பட்டது ஓரிரு நிமிடங்கள் மாத்திரமே. சிரேஸ்ட மாணவர்கள் அரங்கின் பின்புறமிருந்து தமது வேலையை ஆரம்பித்திருந்தார்கள். அரங்க மேடையில் பல நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டாலும் அதைவிட அதிக நிகழ்ச்சிகள் எங்களுக்குள் அரங்கேற்றப்பட்டன. "புதிய மாணவர்களின் கப்பல்" எனும் தொனிப்பொருளில் உத்தியபூர்வமற்ற பகிடிவதைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று முதல் உத்தியோகபூர்வமாக பகிடிவதை ஆரம்பமாகும் எனப் பிரகடனமும் செய்தார்கள்.

"சொல்லு பாப்போம், உனக்கு சூரியன் தெரியுதா?"

"ஆம் அண்ணா..."

"உனக்கு சந்திரன் தெரியுதா?"

"ஆம் அண்ணா..."

"ஓய் பேயா! உனக்கு சூரியனும் சந்திரனும் தெரியுதென்டா, அதவிட என்ன தூரம்டா இருக்கு பார்க்க"

"உத்தமருடைய" கதைக்குச் சுற்றியிருந்த "உத்தமர்கள்" வெடிப்பொலியுடன் சிரித்தார்கள். ஆனால் நான் தலைகுனிந்தேன்.

அதற்கு மத்தியில், வேறொரு "உத்தமரின்" பிடியில் சிக்கியிருந்த ஒரு பெண்பிள்ளை அந்த "உத்தமரின்" கட்டளையின்படி எம்மிடம் வந்தாள். அவள் ஒரு தமிழ் யுவதி. கடும்பச்சை நிறத்திலான அவளுடைய சல்வார் மற்றும் மஞ்சள்நிற நெற்றியிலே, வைக்கப்பட்டிருந்த திலகமும் அவள் தமிழ் யுவதி என்பதைத் தெளிவாகக் காட்டியது.

அவள் ஒரு யுவதியாக இருந்தாலும் அந்த "உத்தமரது" பரிதாபம் கிடைக்கும்மளவு பாக்கியசாலியாக இருக்கவில்லை.

"அடியேய்! நீ சொல்லுடீ, இங்கு எத்தனை விரல்கள் இருக்கு?"

இரண்டு விரல்களை மடித்துக் கொண்டும், மூன்று விரல்களை நிமிர்த்தியும் கையை மேலே உயர்த்தி "உத்தமர்" அவளிடம் கேட்டார்.

"மூ-ன்-று" மெதுவாகச் சொன்ன விடையிலிருந்து அவள் சிங்களம் பரிச்சயமற்றவள் என்பதை அறிந்தேன்.

"ஏன்டீ! இங்கே உனக்கு மூன்று விரலா தெரியுது? அப்போ இங்கு மடிச்சிட்டு இருக்கிற விரல் ரெண்டும் விரல் இல்லயா? இவளுக்குத்தானே கண் தெரியுதில்ல? அடேய் தம்பியா! உன்ட இந்தக் கண்ணாடிய இவளுக்குக் கொடு"

"உத்தமர்" மூக்குக் கண்ணாடியை என்பக்கம் நீட்டினார். நான் அதைக் கையில் எடுத்து அவளது பக்கம் திரும்பினேன். சிறிய கண்ணீர்த் துளிகளிரண்டு, அவளுடைய இருவிழிகளினதும் ஓரங்களில்தத்தளித்துக் கொண்டிருந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேன். கண்ணாடியை நான் அவளுக்கு அணிவிக்கும் போது அந்தக் கண்ணீர்த் துளிகளிரண்டும் என்முன்னே நிலத்தை முத்தமிட்டன.

என்ன செய்வது! அவளையும் என்னையும் போல் எமது புதுமுக மாணவர்கள் ஐநூறு பேரளவில் நாங்கள் அனைவரும் ஆதரவற்ற நிலையில் இருந்தோம். இனிமேல் எங்களுக்கு யாருமே இல்லை என்றவாறு ஆதரவற்று இருந்தோம். அது வாழ்வில் என்றும் ஏற்படாதவண்ணம் அமைந்திருந்தது.

விரிவுரைகள் ஆரம்பிக்க இன்னும் நீண்ட நேரம் இருந்தமையால் காற்சட்டையின் ஒரு காலை முழங்கால் வரை மடித்துக்கொண்டும், மேற்சட்டையில் ஒரு கையை மாத்திரம் முழங்கைவரை மடித்துக்கொண்டும், இடுப்புப்பட்டியை வயிற்றில் கட்டிக்கொண்டும், திறந்தவெளியில் இருந்த ஆசனத்தில் தனிக்காலில் நின்று கொண்டு கிழக்கு வானில் இரண்டு மணியளவு பயணித்ததன் பின் பிரகாசமாக உதித்திருந்த சூரியனை அதற்கு மேல் உயரச் செல்லவிடாது கிழக்கிலேயே மறையச்செய்யும் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கவும் எனக்கு நேரிட்டது. என்னருகில் இருந்த தமிழ் நண்பி மற்றும் ஏனைய புதுமுகமாணவர்களின் நிலையும் ஒன்றுக்கொண்று ஒப்பானதாகவே இருந்தது.

கல்லாசனத்தில் இருந்துகொண்டு "உத்தமர்கள்"எங்களைக் கவரச்செய்யும் கருத்துக்களைத்திணிக்க ஆரம்பித்தவுடன் எமது செயற்பாடுகள் நிறைவுற்றன. அதாவது நமது மூளையை சலவை செய்தல் எனும் 'ப்ரைன் வொ'' செய்வதற்கு ஆரம்பித்தவுடனேயாகும். இவ்வாறு முதல்நாள் சகோதரப் பண்புடன் கூடிய உற்சாகமான வரவேற்பைத் தொடர்ந்து, அடுத்தநாள் இரண்டாவது, மூன்றாவது மற்றும் இறுதி வருட மாணவர்களின் அதாவது "சிரேஸ்ட உத்தமர்கள்", "மிகச்சிறந்த உத்தமர்கள்" மற்றும் "மிகமிகச்சிறந்த உத்தமர்களது" மாபெரும் நிகழ்ச்சித்திட்டத்தில் நாம் கலந்துகொண்டிருந்தோம்.

எனது பல்கலைக்கழக வாழ்க்கை இரண்டு தினங்கள் முதிர்வடையும்போதே எனக்கு வெறுப்பை உண்டுபண்ணியது. மீண்டும் அந்த அருவருப்பான பூமியின் மண்ணை மிதிக்க மாட்டேன் எனும் தீர்மானத்துடன் அன்று நான் வீட்டைநோக்கிக் காலடி எடுத்து வைத்தேன். ஆனால் என்னைப்போன்று அவசரமாகத் திடீர்முடிவு எடுப்பவனோ,அல்லது எடுக்கும் தீர்மானத்தை அந்தக்கணமே மாற்றக்கூடியவனோ நானறிய வேறுயாரும் கிடையாது. நல்லதோ கெட்டதோ மூன்றாவது நாளும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என என்மனம் தூண்டியது.

பகிடிவதையின் கேந்திர மத்தியஸ்தானம் எமது பீடத்தின் சிற்றுண்டிச்சாலையாகும். நான் அங்கு செல்லும்போது புதுமுக மாணவர்கள் தங்களது பணிகளை ஆரம்பித்திருந்தனர். 'உத்தமரைச்' சுற்றி மாணவர்கள் இருந்த அதே வேளை நானும் 'உத்தமரின்' அனுமதி உத்தரவைப் பெற்றவுடன் அமர்ந்து கொள்ளும் வரம் எனக்கும் கிடைத்தது.

முன்னைய நாள் என்னுடன் பகிடிவதையை ஒன்றாகச் சுவைத்து அனுபவித்த அழகிய தமிழ் யுவதி என் முகம்பார்த்து மேசையின் எதிர்த்திசையில் உட்கார்ந்திருந்தாள். நான் அவளைப் பார்க்க, அவள் என்னைப்பார்த்ததும் அவளது முகத்தில் என்னை வரவேற்பதற்காக வெளிப்பட்ட மென்மையான புன்சிரிப்பு என் கண்ணைத் தொட்டது. அதனை நான் பெருமகிழ்வுடன் இரசித்தேன். அந்த சிரிப்பானது இன்னும் சொற்ப வேளையில் வரவேற்கத் தயாராகவிருந்த பகிடிவதையை பெறுவதற்கு முன்பதான தெய்வீகமான ஒத்தடமாக இருந்தது.

"அடேய் இப்ப வந்தவனே... உன்ட புராணத்தச்சொல்லு பார்க்க"

நேற்று எனக்கு சொல்லித்தரப்பட்ட முறையில் நான் எனது புராணத்தை விரித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது பெயர் பெரிய காட்டில் தவழ்ந்து திரியும் முதலியாரின் கண்ணாடி விரியன். செல்லப் பெயர் விரியன். மனேி பிரபோதன என்பதே என்னுடைய கார்ட். எனது குடும்பத்தில் மூன்று பேர் (அம்மா, அப்பா, தம்பி), நான் எனது குடும்பத்தில் இல்லை. ஊரார் வீட்டுப் பிள்ளையாவேன். மூன்று சாராய போத்தல்களே எனது உயர்தரப் பெறுபேறு."

நேற்றைய தினம் இந்தப்புராணத்தை "உத்தமர்களது" முன்பு நூறு தடவைகளுக்கு மேல் விரித்தேன். அதிலுள்ள பிரச்சினை என்னவென்றால் மற்றவர்களின் புராணத்தையும் அவர்கள் கூறும் போது மனனம் செய்வதேயாகும். அவ்வாறு செய்ய முடியாதவர்களுக்குக் கனநேரம் சாப்பிடக்கூடியதாகவும், திரும்பத்திரும்ப அசைபோட்டுச் சாப்பிடக்கூடியதுமான சுவையான சாப்பாடுகள் பெரிய அகப்பைகளால் பகிர்ந்து கொடுக்கப்படும்.

என்னைத் தொடர்ந்து மூன்று, நான்கு பேர் புராணத்தை விரித்ததன் பிற்பாடு தமிழ் சகோதரியின் தவணை வந்தது. அவள் பெருஞ் சங்கடத்திற்கு மத்தியில் இருப்பதைப் போன்று காட்சியளித்தாள். கண்டவுடன் மீண்டும் ஒருமுறை திரும்பிப்பார்க்கும் அழகை அவள் கொண்டிருந்தாள். அவளது உடையமைப்பு மற்றும் நெற்றியிலிருந்த திலகம் என்பன தமிழ்யுவதியின் அலங்கார முறையாக மட்டும் இல்லாதிருந்தால் அவள் தமிழ் யுவதி என எண்ணுவதற்கு எந்த அறிகுறியும் அவளிடம் இருக்கவில்லை. அவளது தோலின் நிறம் தமிழ் யுவதிக்கு பொருந்தாது என நான் எண்ணினேன். அவள் அவ்வளவு வெள்ளை நிறத்தவளாக இருந்தாள். அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டமையால் பயத்துடன்கூடிய அவளது இதயத்துடிப்பு, அவளுடைய முகத்தின் பொலிவுமேலும் இருமடங்கு, மும்மடங்காக மாறுவதற்கு காரணமாயிருந்தது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.




கடுமையான முயற்சியின் பிற்பாடும் அவளால் தனது பெயரை மாத்திரமே உச்சரிக்க முடிந்தது. அவளது பெயர் வர்சா சுப்ரமணியம் என்பதாகும். என்ன காரணமென்பதை உறுதியாகக் கூற முடியாதபோதும்,அவளது புராணத்தைக் கேட்ட என் உள்மனம் மகிழ்ச்சியைத் தராதபொழுது தான், அவளது புராணத்தை முழுமையாகக்கேட்க என் அடிமனம் ஆவலாகக் காத்திருந்ததென்பது எனக்கு விளங்கியது. எப்படியிருந்தாலும் கிடைத்ததை வைத்து நான் திருப்தியடைந்தேன்.

"வர்சா சுப்ரமணியம்... அது எவ்வளவு அழகானதொரு பெயர்..."

தமிழ் யுவதியொருத்தி சிங்கள மொழியில் பாண்டித்தியத்தைக் காட்டுவது கடினம் என்பதால் இந்தத்தடவை நம்மை வழிநடத்தும் "உத்தமரின்" பரிதாபத்தை பெறுவதில் அவள் வெற்றியீட்டினாள். அது என்னுடைய ஆறுதலுக்கும் காரணமாகியது.

இவ்வாறு வாரத்தில் ஐந்து நாளும் காலை ஏழு மணிக்கு முன்பு புதுமுக மாணவர்களாகிய நாம் அனைவரும் "உத்தமர்களின்" கட்டளைப்படி எமது பீடத்தின் கென்டீனுக்கு போகவேண்டி இருந்தது. விரிவுரை ஆரம்பிப்பது காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதுமணிக்கு என்பதால் அதுவரை "உத்தமர்களின்" மூலம் விரிவுரைகள் நடாத்தப்படும். பகிடிவதையின் முதற்கட்டத்தில் நாங்கள்பகிடிவதை பண்ணப்பட்ட அதே வேளை, இறுதிக்கட்டத்தில் எம்மைபகிடிவதை செய்வதனூடாக, சிரேஸ்ட மாணவர்கள் அவர்களே வதைக்கப்படுவது போல்உணர்ந்தார்கள். அதுபகிடிவதைக்கு நாம் இசைவானவர்களாக இருந்ததனாலேயாகும். கேட்பதை ஒரு காதால் கேட்டு மற்றைய காதால் விடவும், செய்யச் சொல்வதை தவறாமல் செய்யுமளவு பகிடிவதை செய்யப்படுவதில்துறை வல்லுனர்களாக மாறினோம். உண்மையில் அது உளத்துணிச்சலா அல்லது கோழைத்தனமா எனக்கூறுவது எனக்கு இன்னும் கடினமானதாகவே இருக்கிறது.

பல்கலைக்கழக நாட்களில் நான்காவது நாள் வர்சா சுப்ரமணியம் நான் "பகிடிவதை" பண்ணப்பட்ட அதே மேசைக்கே வந்தாள். சிற்றுண்டிச் சாலையெங்கும் வேறு மேசைகளில் இடமிருந்தபோதும் அவள் நான் இருந்த மேசைக்கே வந்தாள். அது அவள் வேண்டுமென்று செய்ததா அல்லது தற்செயலாக நடந்ததா என்பது எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் அவளது வருகை என்னுடைய உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சியை உண்டு பண்ணியது. ஆனால் என்னால் அதைக் கூறமுடியாத நிலையில் இருந்தேன். ஏனென்றால் நாம் "பகிடிவதை" பண்ணப்படுபவர்கள் என்பதே அதற்குக் காரணமாக இருக்கும்.

"அடேய்... உங்களுக்கெல்லாம் எதுவும் பிரச்சினையா?"

எமது மேசையிலிருந்து "சிரேஸ்ட உத்தமர்" எம்மிடம் கேட்டார். எமது மேசையில் வர்சாவுடன் பதா மற்றும் டோரா என்னும் பெயர்களையுடைய மேலும் இரண்டு நண்பர்களுமே இருந்தோம். எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதைக் கூற நாம் தலையை அசைத்தோம்.

"பிரச்சினையாக இருந்தாலும் ஒன்றும் செய்ய இயலாதடா பேயா!"

என்று கூறி "உத்தமர்" எம்மை இகழ்ச்சியானதொரு பார்வை பார்த்தார். பின்பு அவர் அவருடைய விரிவுரையை ஆரம்பம் செய்தார்.

"ஏய் பிசாசுகளே! நாங்க உங்கள ஆசையோட பகிடிவதை பண்றம் என்டு நீங்க நினைக்கிறீங்களா? எமக்கு அப்படி ஒரு ஆசயில்ல. இந்தக் காலத்தில நாங்க உங்களுக்கு பேய் போலதான் தெரிவம். அதப்போல உங்கள 'பகிடிவதை' பண்ணாத மனிசங்களெல்லாம் தெய்வம் போல விளங்குவினம். இன்னும் ஒரு மாசம் கழியும் வரை உமக்கு அப்படித்தான் தெரியும். உதுக்குப் பிறகு பாருங்கடா.. யாரு பேய், யாரு தெய்வம் என்டு உங்களுக்கு அடையாளங் காண ஏலும். 'நாங்க தான் தெய்வம், நீங்க எங்கள வணங்கிக் கொண்டிருக்க வேணும்' என்டு நாங்க சொல்லல்ல. எங்களுக்குஉமக்கிட்டஒரு சதத்துட வேலையுமில்ல. பேந்து அப்படி வேல இருந்தா இப்ப இப்படிப் பேய் போல வந்து உமக்கு பகிடிவதை செய்யமாட்டம் தானே. அப்படியே ஏதும் வேணுமென்டால் நல்லா பட்டர் பூசி நாங்களும் தெய்வம் போல இருந்திருக்கலாம். டேய் பேயா! இங்கு இருக்கிறதுக்கென்டு சில முறை இருக்கு. புதுசா இங்க வந்த உமக்கெல்லாம் உது தெரியாது.இங்கபகிடிவதை பண்ண வரும் அண்ணாமார் எல்லாரும் போன வருசம் ஒருநாள் கூட தவறாம வந்து பகிடிவதைபண்ணப்பட்டவங்கள். நாங்க பகிடிவதையிலிருந்து சில விசயங்களைக் படிச்சிருக்கம். அடேய் கண்ணுங்களா! உத உங்களுக்கு தரத்தான் முயற்சிக்கிறம். அப்படித் தந்துவிட்டு பிறகு நாங்க உங்களிடம் எதுவும் எதிர்பாக்க மாட்டம். 'பெட்ச்' என்ட ரீதியில நீங்க இந்த நாலு வருசமும் சிக்கலில்லாம நல்லா இருந்தா அது போதும். மத்தவங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறதப் போல இது வடிவான இடமில்லையடா. உள்ளத்த உறுதியா வெச்சிருந்தா எல்லாத்தையும் தாங்கிக் கொள்ளும்".

'உத்தமர்' விரிவுரையை முடித்து எம்மை நோக்கி மிகத் தெளிவான, ஆழமான ஒரு பார்வை பார்த்தார். அவரது கவனத்தில் சிக்கியது வர்'ஷாவாகும்.

"ஏய் தமிழ் பிள்ள! உனக்கு ஆள் இருக்கானா? சொல்லு பார்ப்பம்…"

அவர் அவளிடம் கேட்டார். ஆனால் அவள் பதில் கொடுக்கவில்லை.

"உனக்கு சிங்களம் விளங்குதா?… அதச் சொல்லு முதல்ல"

'உத்தமர்' கேட்கும் போது அவள் தனக்கு சிங்களம் விளங்குகின்றது என்று சொல்லுவதற்கு தலையை ஆட்டினாள்.

"அப்படியென்டா சொல்லு! உனக்கு ஆள் இருக்கானா?"

"இ-ல்ல-ண்-ணா"

"பேயே! இரபத்திரெண்டு வயசாகிப் போச்சு, இன்னும் அதக்கூட செய்ய வக்கில்லாமப் போயிட்டா? பொறு!… அதையும் நானே செய்து தாறன்…"

'உத்தமர்'எம் பக்கம் பார்த்தார்.

" உதுக்குள்ள வாட்டசாட்டமான ஒரு பெடியன் இருந்தாக் காட்டு!ஐ..ய்…யோ! எல்லாரும் தரித்திரம் புடிச்சவனுகள்… யேய்! உனக்கு விருப்பமான ஒருத்தன் இருக்கானா என்று நீயே சொல்லு பார்ப்பம்."

வர்சா எங்களை பார்த்து மீண்டும் தரையைப் பார்த்துக் கொண்டாள். அவள் சிவந்திருந்தாள்.

"அம்ம்…மாடியோவ் டோய்! இவள்ட வெக்கத்தப் பாரன்…"

"ம்ம்ம்… நீ நாலு வருசமும் அப்படியே இரு. பேந்து கரிச் சட்டியவிடக் கறுப்பா, காக்காவப்போல ஒரு ஆள வீட்டால தேடித்தருவினம். பேந்து அதையே முடிச்சிக்கோ. உமக்கெல்லாம் ஏதும் செய்து தர முன்வந்தா, அதுக்கும் யோக்கியமில்லையடா… ம்ம்ம்…உனக்கு விருப்பமான பெடியன் யாராவது இருக்கானா என்று சொல்லு பார்ப்பம்.."

அவர் மேசையிலிருந்து என்னையும் மற்ற ஆண்பிள்ளைகள் இருவரையும் பார்த்தார். நானும் அவர்கள் இருவரும் குனிந்து கொண்டோம்.

"பேயா! உதப் பாரன்டா… மூணு பேரும் பெட்டையள விட வெக்கப்படுறீங்களே.. ஓய்! முதல்ல உங்களுக்கு ஆள் இருக்கா என்டு சொல்லுங்கடா பார்ப்பம்."

இல்லை என்பதற்கு நாம் தலையை அசைத்தோம்.

"அப்படியென்டால் உனக்கு இந்தப் பிள்ளையபிடிச்சிருக்கா?"

அவர் டோராவின் பக்கம் திரும்பினார்.

"விருப்பமில்ல அண்ணா" டோராவின் பதிலாக இருந்தது.

"விருப்பமில்லயா?… நீங்களெல்லாம் ரொம்ப ரொம்ப நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதினமானபெடியன்களா இரிக்கிங்களே… ஆச்சரியமா இருக்கே…அப்போ ஏன் உனக்கு இவள பிடிக்கல்ல? அதுக்கு அஞ்சு காரணத்த சொல்லு பாப்பம். முதல்ல தனிச்சொல்லா பண்பைச் சொல்லி பிறகு அத விளக்கிச் சொல்லு. புரிஞ்சுதா?"

பதா விடையை யோசித்தான். பின்பு அதனை அவன் முன்வைத்தான்.

"அழகானவள் -- இவள் மிகமிஞ்சிய அழகானவள். அது ஒரு பிரச்சினையாகலாம்.

மிக வடிவு என்பதால் மற்றப் பெடியனுகள் இவளக் கூடுதலாக நோட்டமிடலாம். பேந்து எனக்கு எரிச்சல் கிளம்பும். அதனால எனக்கு விருப்பமில்லை.

கெட்டிக்காரி– இவள் கெட்டிக்காரி போல தெரியுது. என்னவிட என்ட ஆள் புத்திசாலியா இருந்தா அதுவும் பிரச்சினைதான். அதுவும் எனக்கு பிடிக்கவில்ல.

குறும்புக்காரி -- இவள் கொஞ்சம் குறும்பு கூடின ஆள்போல தெரியுது. குசும்பு செய்யும் பிள்ளைய செட்பண்ணிட்டா என்ட அம்மா என்னை வீட்டால துரத்துவா. அதனால அதுவும் ஒரு பிரச்சினைதான்.

விசர் -- இவள் தமிழ் பெட்டை என்டதால நான் சொல்றது சிலநேரம் உவளுக்கு விளங்காது. அவள் சொல்றது எனக்கும் விளங்காம போகலாம். அது ஒரு பெரிய விசர்க்கூத்து… அதனால அதுவும் ஒரு பிரச்சினை."

பதாவின் கதைக்கு உத்தமர் வாயை மூடிக்கொண்டு சிரித்தார். உத்தமருக்கு நம்முன்னே சிரிப்பதற்கு அனுமதியில்லை என்பதை நான் பிறகு அறிந்துகொண்டேன். அது அவர்களுடைய பேய்ப் பிம்பத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதனாலாகும். ஆனால் நமக்கு வாயை மூடிக்கொண்டு கூட சிரிப்பதற்கு வரம் கிடைக்கவில்லை.

"நாலு தானே சொன்னநீர் மிச்சத்தையும் அப்படியே சொல்லு"

ஆனால் பதா சிக்குண்டு இருந்தான். அவனுக்கு இன்னொரு காரணியைத் தேடிக்கொள்ள கடினமாக இருந்தது.

"சொல்ல்---லண்டா.. பேயா! உந்த வடிவான பிள்ளய வெறுப்பதற்கு நாலு காரணங்களா இருக்கு? மிச்சத்தையும் சொல்லு"

'உத்தமரின்' அழுத்தத்திற்கு மத்தியில் சிக்குண்ட பதா விடை தேடினான்.

"நீர்க்குமிழி போன்றவள்"

பதா சொன்னது எம்மனைவரையும் சிரிப்பூட்டியது.

"அடேய் பேயா! இவளப் பாத்தா நீர்குமிழி போலவா இருக்கு? உனக்கு இவள் அப்படியா தெரிகிறாள்? ஓய்! எதுக்குடா நீங்கெல்லாம் சிரிக்கிரீங்க? உங்க வலது கைவிரல்கள வாயில வையுங்கடா."

சிரித்த குற்றத்திற்காக விரலை வாயில் வைக்கும் நிலை எனக்கு நேரிட்டது.

"தம்பியா! நீ சொல்லு பார்ப்பம்… உனக்கு இந்தப் பிள்ளய பிடிச்சிருக்கா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உத்தமர்' டோராவின் பக்கம் திரும்பினார். "ஆம் அண்ணா" டோராவின் பதில் என்னுள் கோபத்தை ஏற்படுத்தியது. பதா அவளுக்கு விருப்பம் இல்லை என்று கூறி செமையாச் சிக்கியதால் அவன் தப்புவதற்காக விருப்பம் என்று கூறியிருக்கலாம். ஆனால் நான் அடுத்த சந்தர்ப்பம் எனக்கு வருமென எண்ணினேன்.
ம்ம்ம்... அது அவ்வாறே நடந்தால்..

> "அம்மோய்! இழிச்சவாயன்! ஒரு பிள்ளய காட்டி விருப்பமா என்டு கேட்ட உடனே துள்ளிப்பாய்ந்து 'ஓம்' எங்கிறாய். நீ இப்ப காரணம் சொல்லத் தேவல்ல. சொன்னா இவள் எடுப்புக் காட்டுவாள். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்டு நீங்கள்லாம் படிச்சி இருப்பிங்களே.. மனித தேவைகள் கூடக்க வளங்கள் பற்றாக்குறையாகத்தான் இருக்கும். கெம்பஸ் வந்தபடியால இப்பவே நல்லதொண்ட பார்த்துசெட் பண்ணிரு. இல்லையென்டா வேறொரு தெரிவும் இல்லாம எச்சசொச்சமாக கிடக்கிற ஒரு செல்வம்தான்உங்களுக்கும் கிடைக்கும்..."

ஒரு மாதம் முழுவதும் உயிர்வாழ்ந்த பகிடிவதையானது இறப்பெய்தியது. பகிடிவதையானது நல்ல விடயங்களைப் போன்று தீய விடயங்களாலும் நீடித்திருந்தது. பகிடிவதையின் நல்ல பக்கத்தை தமது வாழ்க்கையில் இணைத்துக் கொண்டோர் ஒரு சிலரேயாவர்.

சிலர் பகிடிவதையை வாய்விட்டுக் கேட்டு வாங்கிக்கட்டிக் கொண்டனர். இன்னும் சிலர் சொந்தக் காசில் சூனியம் செய்வது போல இழுத்துப் பையில போட்டு போட்டுக்கொண்டனர். நான் அது பற்றி மதிப்பாய்வில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால் ஒரு நாளும் நான் எதிர்காலத்தில் 'உத்தமர்களது' கூட்டத்தில் அகப்பட்டு, புதுமுக மாணவர்களை பகிடிவதை செய்யாமல் இருப்பதற்கு எண்ணினேன்.

பௌத்த மதத்ததைப் பாதுகாக்கும் நோக்கில் மனிதர்களைக் கொலை செய்வதை நான் விரும்புவதில்லை. அது அவ்வாறே நடக்க வேண்டுமென்றால் நான் முதலில் என்னுயிரையே மாய்த்துக்கொள்வேன். ஏனென்றால் பௌத்த மதத்தை பாதுகாக்க முயற்சிசெய்யும் என்னிலிருந்துதான் அது அழிவுறுகிறது.

கூட்டாக இருந்தவர்கள் பகிடிவதைக் காலத்தின் பின் குழுக்களாகப் பிரியத் தொடங்கினர். ஏனென்றால் ஒரே வகையைச்சார்ந்த பறவைகள் ஒரே கிளையில் தங்களை அடைத்துக் கொண்டதனால் ஆகும். வர்சா சுப்ரமணியமும் அவளுடைய தமிழ் நண்பர்களுக்கு மத்தியிலே காலத்தைக் கழித்தாள்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Overview about a Sworn Translator

**By:S.Kopika**

Globalization has resulted in increased interaction between people and cultures .These cross cultural interaction has increased the need for translators and interpreters. Different theorists state various definitions for translation .In that manner, Kelly (2005: 26-27) defines translation as the skill of understanding the source text and rendering it in the receptor language by using the register, the prior knowledge, and other language resources. Therefore, a translator acts as a bridge between two languages and cultures. So.....what is sworn translation? A sworn translation is an official translation carried out by a sworn translator. Sworn translations are needed for different international procedures. It consists of notarial acts, marriage certificates, court orders, reports, diplomas, academic accreditations and forth. Sworn translation plays major role due to international trade, migration and tourism. A sworn translation is sometimes called as an 'Official translation' or 'Certified translation' but the correct term is 'Sworn translation'

While we consider about the sworn translators of Sri Lanka, A 'Sworn Translator' is a Translator who is officially appointed as a translator under the Government of the Democratic Socialist Republic of Sri Lanka after he/ she passes the examination which is conducted by the Ministry of Justice, Sri Lanka. After that they take the oaths as Sworn Translators before a Magistrate. From that date, he /she may able to do sworn translations. The Ministry appoints Sworn Translators for different languages namely, Sinhala, Tamil, English, Arabic, Hindi, Japanese and so on. It depends on the needs. He/ She is the one who provides full legal validity for documents before the courts for the particular authority. While we consider about the qualifications for this post, Sworn Translators are selected on the basis of marks obtained in the written test conducted by the Ministry of Justice for the languages namely, Sinhala, Tamil, English and other language in the country.

A sworn translation should underscore the following essential attributes and a sworn translator must be conscious of them,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Precision/Accuracy
- Certainty/Sureness
- Integrity
- Uniformity/Consistency
- Lack of Vagueness
- Attention to manner & style

A document which is signed by a lawyer is not considered as a sworn translation .A sworn translation must be translated by a sworn translator(Certified person).Sworn translators mostly do the translations of legal documents, but not all the legal translators are sworn translators .There are significant difference between a sworn translator and an ordinary translator. The method used in sworn translation is different from general translation. General translation has a strong communicative function and the translator must make the text more accessible to the receptor. Sworn translation is done for legal purposes. Thus, Sworn translators assume that every word and every nuance has an intention and reproduce the content , each facts in the way they appeared in the original.

A sworn translator has to fullfill several responsibilities. The first and the foremost responsibility of a sworn translator is to translate the source text into the receptor language in the most accurate way, so as to provide the best output .Second one, The sworn translator is expected to protect the confidentiality of the documents. Sworn translators carry a heavy responsibility in their hand because their work can have life-changing consequences for the people involved. There are several documents that are always subjected to a sworn translation. Such as

1. Power of attorney
2. Public deeds
3. Criminal records
4. Birth certificate
5. Death certificate
6. Marriage certificate
7. Academic degrees
8. Articles of association
9. Successions and inheritances
10. Contracts
11. Wills



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. Orders of divorce
13. Patents
14. Affidavits
15. Forensic reports and so on.

A sworn translation usually consists of the following parts,

- The sworn translator`s signature
- The sworn translator`s stamp
- A declaration stating that the translation is a faithful and accurate representation of the original documents,

In Sri Lanka, sworn translators are working in many sectors such as Courts, Private sectors, Foreign embassy, District secretariat office and so on.

There is great demand for the sworn translators in this modern world. Because of globalization business world has now become more complex. The business related personalities need to submit their Official Documents to the immigration and emigration authorities in the countries where they travel for their business needs. In that time,the sworn translator helps them in translating their official documents from mother language to the required receptor language. And, he/she will make it more and more legitimate by placing his/her seal on it to authenticate the accuracy between the original and translation, whereas you may produce it in any country for your visa purposes and so many other requirements.

To sum up, in this modern world, we have several soft wares but they have limitations. Thus human translators are often needed to provide a better output. We expect more from translators and their work. In order to develop translation field, our government introduced Translation studies as a study program at University of Jaffna, University of Kelaniya and University of Sabragamuwa.. Students get the opportunity to graduate with the B.A. (special) degree in Translation Studies. It is a four year professional degree program. I hope these translations will help us to create a better Sri Lanka as well as better world for our future generation.

**"WITHOUT TRANSLATION, WE WOULD BE LIVING IN PROVINCES BORDERING ON SILENCE".**

**George Steiner**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

References:-

1. http://www.moj.gov.lk/
2. https://www.elawyers.lk/sworn-translation/
3. http://www.translateplus.com/blog/sworn-translation-important/
4. http://www.ibidem-translation.com
5. http://www.dbfcom.com
6. http://www.vertaalpraktijk.com
7. Mr. N. Selvakumaran , faculty of law, University of Colombo, legal translation module ,Introductory lecture.
8. https://www.ferristranslations.com/translation/2016/10/18/translation-modern-world/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அறியப்படாத வாயிலின் அருகே!

(சட்ட மற்றும் ஆவண மொழிபெயர்ப்பாளர் எஸ்.எல் அஜ்மல்கானுடனான நேர்காணல்)

**Interviewed By: K.Ishanthi**

**S.Salomi**

**M.Dhanusha**



உங்களது பார்வையில் மொழிபெயர்ப்பு என்பது பற்றிய கருத்து யாது?

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ள விடயத்தை அம் மொழியினை தெரியாத ஒருவருக்கு அவருடைய மொழிக்கு மாற்றி புரிதலை ஏற்படுத்திக் கொடுப்பதுவே ஆகும்.

இலங்கையைப் பொறுத்தவரை பன்மொழி பேசுகின்ற மக்கள் இருக்கின்றனர். சத்தியப்பிரமாண ஆவணங்கள் சிங்கள மொழியில் மாத்திரமே இருக்குமேயானால் தமிழ்மொழி பேசுகின்ற மக்களால் அவ் ஆவணத்தில் உள்ள விடயங்களை அறிந்துகொள்ள முடியாமல் போய்விடுகின்றது. இதே நிலைதான் சிங்களமொழி பேசுகின்ற மக்களிற்கும் ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் மொழிபெயர்ப்பே துணை நிற்கின்றது. மொத்தத்தில் அறிவினை பெருக்குவதற்கும் தெரியாத விடயங்களைத் தெரிந்துகொள்வதற்குமான பெரியதோர் ஊடகமாக மொழிபெயர்ப்பு காணப்படுகின்றது.

மொழிபெயர்ப்பாளராக உருவாகுவதற்கு கொண்டிருக்கவேண்டிய தகுதிகளாக எவற்றைக் கருதுகின்றிர்கள்?

மொழிபெயர்ப்பாளர் என்னுமிடத்து ஆகக்குறைந்தது இரண்டு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருப்பதுவே. ஒருவர் இரண்டு மொழிகளில் பாண்டித்தியம் பற்றிருந்தால் அவர் மொழிபெயர்ப்பதற்கான குறைந்தபட்ச தகுதியை பெற்றிருப்பார். ஆதன்பின் அவர் மொழிபெயர்ப்பு விதிகள் கொட்பாடுகள் என்பதனை கற்றறிந்து கொள்ளலாம். மொழிபெயர்ப்பாளர் ஆவதற்கென்று பொதுவான தகுதிப்பாடு என்று ஒன்று இல்லை. அவர் தனது அறிவனை வளர்த்துக் கொள்வதினூடாக மூலமொழி மற்றும் இலக்கு மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்றுவிட்டால் சிறந்த மொழிபெயர்ப்பாளராக ஆகமுடியும்.அதிலும் குறிப்பாக மொழிபெயர்ப்பில் ஈடுபாடு இருக்கவேண்டும். சிலர் சில ஆவணங்களைப் பணத்தினை ஈட்டிக்கொள்வதற்காகச் செய்கின்றனர். இன்னும் சிலர் கதைகள், கட்டுரைகள், நாவல்கள் என்பவற்றை மொழிபெயர்க்கின்றனர். இங்கு ஈடுபாடே பெருங்காரணமாக உள்ளது.

**இலக்கிய மொழிபெயர்ப்பு மற்றும் ஆவண மொழிபெயர்ப்பு இரண்டிலும் கடினமானது என்று எதனைக் கருதுகின்றீர்கள்?**

இலக்கியம் தொடர்பான விடயங்களை மொழிபெயர்க்க விரும்பினால் சிறந்த இலக்கியப் பரிச்சயம் அவசியம். ஆவணங்கள் தொடர்பான விடயங்களை மொழிபெயர்க்க விரும்பினால் நிர்வாகம் தொடர்பான பூரண அறிவு அவசியம். உதாரணம் சத்தியக் கடதாசி, உறுதிமொழி என்பனவற்றைக் குறிப்பிடலாம். இலக்கியத் துறையில் எனக்கு ஆர்வம் கிடையாது. ஆவண மற்றும் சட்ட மொழிபெயர்ப்பிலேயே எனக்கு ஆர்வம் உண்டு. பிறப்புச் சான்றிதழ் ஒரு ஆவணமாகும். சத்தியக்கடதாசி ஒரு ஆவணமாகும். நாங்கள் இவ்வாறான விடயங்களை மொழிபெயர்க்கும் செயன்முறையிலேயே எங்களை ஈடுபடுத்தியுள்ளோம்.. மாறாக இலக்கியத் துறையில் அல்ல.

**மொழிபெயர்ப்புக்கான கோட்பாடுகளை அனைத்து மொழிபெயர்ப்புச் செயன்முறைகளிலும் பிரயோகிக்க முடியுமா?**

இல்லை.

அது விசேட மொழிபெயர்ப்பு மற்றும் பொது மொழிபெயர்ப்பின் தன்மையைப் பொறுத்து வேறுபாடு அடைகின்றது. உதாரணமாக சிறுகதை ஒன்றினை மொழிபெயர்க்கும்போது அனைத்து சிறுகதைக் கேட்பாட்டு விடயங்களையும் உள்ளடக்கி மொழிபெயர்க்க முடியாது. அதே போல் சட்ட மொழிபெயர்ப்பில் ஈடுபடுகையில் துல்லியத் தன்மையினைப் பேணவேண்டும் என்பதால் அதிலும் கோட்பாடு சார் அனைத்து விடயங்களையும் பிரதியிட முடியாது. சட்ட மொழிபெயர்ப்பில் ஒரு சொல்லிற்குப் பல்வேறுபட்ட பொருள் உண்டு. ஒரு சொல்லை நாம் தவறாக மொழிபெயர்ப்போமேயானால் அந்தச் சொல் அனைத்து விடயங்களையும் பாதிப்பதாய் அமைந்து விடும்.

சிலவேளைகளில் நாம் பொதுவான அடிப்படையில் சிறுகதை நாவல் போன்ற இலக்கியப் பகுதிகளை மொழிபெயர்க்கின்றோம். ஏனென்றால் அங்கு அவற்றிற்கென பொதுவான எண்ணக் கரு, செய்தி , நிகரிகள் ஆகியன காணப்படுகின்றன. ஆனால் சட்ட மற்றும் ஆவண மொழிபெயர்ப்பிலோ பொருத்தமான நிகரன்களை இடுவது என்பது கடினமாகும். ஏனெனில் இங்கு துல்லியத் தன்மை பேணப்படவேண்டி உள்ளது. இது மொழிபெயர்ப்பாளரினுடைய தேர்ச்சியிலேயே தங்கியுள்ளது.

**சொந்தமாக எழுதுதல் மற்றும் மொழிபெயர்ப்புச் செய்தல் இரண்டிற்கும் இடையில் எவ்வாறான வேறுபாடுகள் இருக்க முடியும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புச் செய்யும் ஒருவருக்கு சொந்தமாக எழுதும் திறன் இருந்தால் அவர் இன்னும் விசேடமாகத் திகழ்வார். எடுத்துக்காட்டாக நான் ஒரு கவிஞராக இருந்தால் எனக்கு கவிதை தொடர்பில் மிகுந்த நாட்டம் காணப்படும். நான் கவிதை மொழிபெயர்ப்பில் ஈடுபடுகின்றபோது இன்னும் திறம்பட பெயர்க்கவும் முடியும். ஆல்லது கவிதை தொடர்பில் ஈடுபாடு காணப்பட்டால் அல்லது கவிதை வாசிப்பதில் ஆர்வம் இருந்தால் அப்போதும் அந்த மொழிபெயர்ப்புச் சிறந்து விளங்கும். அவ்வாறன்றிஅ து சாத்தியமற்ற விடயமாகும்.

என்னைப் பொறுத்தவரை நான் ஆவணமொழிபெயர்ப்பு, சட்ட மொழிபெயர்ப்பு மற்றும் பொது மொழிபெயர்ப்பில் ஈடுபடுகின்றேன். இருப்பினும் சில துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள் அத்துறை சார்ந்த மொழிபெயர்ப்புக்களை சிறப்பாகச் செய்வார்கள். உதாரணமாக சட்டமொழிபெயர்ப்புக்களை சட்டத்தரணிகள் திறம்படச் செய்வார்கள். கதைகள் நாவல்களை எழுத்தாளர்களே சிறந்த முறையில் மொழிபெயர்ப்பார்கள்.

**தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் அடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் எவ்வாறுள்ளன?**

இரண்டு மொழிகளுக்குமிடையில் ஒற்றுமைகள பல உள்ளன.ஆங்கிலத்திற்கும் தமிழிற்கும் இடையில் வாக்கியக் கட்டமைப்பில் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. ஆனால் தமிழ் மற்றும் சிங்கள மொழி வாக்கியக் கட்டமைப்பில் பல ஒற்றுமைகளே உண்டு. தமிழ்- சிங்கள மொழிபெயர்ப்பானது ஆங்கில-தமிழ் மொழிபெயர்பபை விட இலகுவானது. எனவே தமிழ்-சிங்கள மற்றும் சிங்கள-தமிழ் மொழிபெயர்ப்பு ஒப்பீட்டளவில் இலகுவான மொழிபெயர்ப்பாகும். இதில் எந்தவித ஐயமுமில்லை.

**ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் ஆவதற்கு 10 வருட பரீட்சயம் தேவையா?**

ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் ஆவதற்கு 10, 12 வருட கால அளவு தேவை இல்லை. மாறாக தன்னை முழுதாக அர்ப்பணித்துச் செயற்பட்டால் குறுகிய காலத்திற்குள் மொழிபெயர்ப்பாளராக ஆக முடியும். அதே நேரம் முயற்சி செய்யாதவிடத்து 30 அல்லது 40 வருடங்கள் ஆனாலும் ஒருவரால் மொழிபெயர்ப்பாளராக ஆக முடியாது.

**மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கான அங்கீகாரம் குறைவாக இருப்பதாக கருதுகின்றீர்களா?**

ஆம். இதற்கான காரணம் என்று கருதினால் மொழிபெயர்ப்பு என்பது ஒரு சிறிய பெரிதும் கவனம் பெறாத துறை ஆகும். இது பாரிய அளவில் பிரபல்யம் அடைந்த துறை அல்ல. இதுவும் அதற்கான காரணமாகும். இத் துறையே பிரபல்யமானதாக இல்லாதிருக்கையில் இத் துறையில் இருப்பவர்கள் மாத்திரம் எவ்வாற பிரபல்யமடைவார்கள்?

இரண்டாவது இது ஒரு வருமானத்தை ஈட்டிக்கொண்வதற்கான துறை இல்லை. இது ஒரு தேவையின் நிமித்தம் மேற்கொள்ளபடும் துறை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் துறையின் தேவையை நாடுபவர்களின் எண்ணிக்கையும் மிக் குறைவு. மருத்துவத் துறையைப் பொறுத்தவரை அனைவரும் அதன் தேவையை நாடுகின்றனர். குல்வித் துறையும் அவ்வாறே. ஆனால் அனைத்து மொழிகளும் அனைவருக்கும் புரிவதில்லை இருந்தும் மொழிபெயர்ப்புத் துறையை நாடுவதும் அரிது.

இது ஒரு பாரிய சவாலாகும்.

**இனிவரும் காலங்களில் மனித மொழிபெயர்ப்பு, இயந்திர மொழிபெயர்ப்பு இரண்டில் எதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும்?**

இயந்திர மொழிபெயர்ப்பு மற்றும் மனித உதவியுடன் மேற்கொள்ளப்படும் இயந்திர மொழிபெயர்ப்பு ஆகியன அதிகமாகக் காணப்படுகின்றன. மோழிபெயர்ப்பிற்குத் துணைபுரிகின்ற மென்பொருள்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இனிவரும் காலங்களில் தானியங்கி மொழிபெயர்ப்பு இடம்பெறலாம்.

**முடிவாக ஒரு கேள்வி, தொழில்நுட்ப வளர்ச்சி மொழிபெயர்ப்பாளரின் தேவையை இல்லாமல் செய்யுமா?**

ஒரு காலமும் இல்லை.

ஏனெனில் கலாச்சாரச் சொற்கள் மற்றும் சமனிகள் போன்ற மொழிபெயர்ப்பிற்கு ஒரு மொழிபெயர்ப்பாளன் இன்றியமையாதவனாகிறான். இதை தொழில்நுட்பத்தால் செய்ய முடியாது. ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு பல பொருளுக்கு ஒரு சொல் உண்டு. அவ்வேணையில் சந்தர்ப்பத்திற்க ஏற்றவாறு சரியான நிகரிகளை ஒரு மொழிபெயர்ப்பாளனாலேயே கொடுக்க முடியும்.

எனவே நான் உறுதியாகக் கூறுகிறேன் தொழில்நுட்ப வளர்ச்சி மொழிபெயர்ப்பாளரின் தேவையை இல்லாமல் செய்யாது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Why translation of poetry is so difficult?!

By:S.Sheliyna.

According to T.S.ELIOT "poetry is not a turning loose of emotion but an escape from emotion; it is not the expression of personality but an escape from personality". poetry deals with narration or lyrics. Narrative poem deals with story or action whereas lyric poems stress emotion and songs. Translation is not an easy task and can be define as

> "Translation is the communication of the meaning of source language text by means of an equivalent target language text". Translating literary work particularly translating poetry is ,perhaps, most difficult than other genres. That is why Robert frost once described poetry as "what gets lost in translation". Of course, it is very difficult or can be say as impossible to carry the special qualities like rhyme, syntax, connotation etc.

Further, Rabindranath Tagore also have the same thought on poetry translation(learning a language through translation is loving a girl through an agent). There are some reasons for why translation of poetry is so difficult. Now let's focus on those reasons.

Form of the poem is the very first thing which will draw the attention of the reader. It is necessary for the translators to move closer to the original. For example if the translator translates a haiku poem then the short meaningful condensed form should be preserved. The second reason for the difficulty in poetry translation is the shape of the poem. Every poem has its own shape but there are some poems which are in special shapes. For example mouse tail poem of Lewis carol is the best example. Other poems will appear with couplet, tercet, quatrain, quintain, sestets etc. so their target text should have the same shape of the poem. Third matter to focus attention is the nuances of the words meaning. Here the translator will face the problem in words denotative and connotative meanings, denotative meaning means dictionary meaning and connotative meaning means the associated meaning that have build up around the word. In addition, grammatical difference between the languages also cause problem in translation of poetry. Grammatical rules are very strictly followed in prose but they are not compulsory for poems. Therefore, this feature cause problem when the translator starts to translate a poem.

Finally, culture of both source and target language also cause problem in poetry translation. Each language has it own peculiar culture so the translator should act as a cultural ambassador .This intention should be preserved in every translation work whether it is poetry or prose or even any other type of genre. The fine example for poetry is as follows,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kavimani desigavinayagam pillai's transcreation on Edward Fitz Gerald'stranslation of Omar Khayyam poem.

"Here with a loaf of bread,beneath the bough

A flask of wine,a book of verse and though

Beside me singing in the wilderness

And wilderness is paradise".

" வெயிலுக்கேற்ற நிழலுண்டு,வீசும் தென்றல் காற்றுண்டு

கம்பன் கையில் கவியுண்டு,கலசம் நிறைய மதுவுண்டு

தெய்வ கீதம் பலவுண்டு,தெரிந்து பாட நீயுண்டு

வையம் தருமிவ் வளமின்றி வாழும் சொர்க்கம் வேறுண்டோ".

Here, it can be noted that when transcreated into Tamil kavimani followed the flavor of Tamil culture. Particularly in the second stanza when "a book of verse" was translated he transcreated it as "கம்பன் கையில் கவியுண்டு". Culture plays a major role in translation work so the translators should have the sound knowledge in both cultures, then only their translation will sounds better.

When going back to the theme-poetry is difficult to translate, the translator can achieve a translation only nearest to the original but not same as the original. Though there are poets who did translation and self-translation successfully (self translation is the translation of a source text into a target text by the writer of the source text) . For example Rabindrana Tagore did self- translation of Gitanjali from Bengali to English. Moreover, our mother tongue Tamil has a long history about poetry translation. Tholkapiyam -a great book of Tamil literary world give proof to that as follows

"பனிபடு சோலை வேங்கடத் தும்பர்

மொழிபெயர் தேயத்தர் ஆயினும் நல்குவர்"

(மொழிபெயர்ப்பு எனும் தொடர் மொழிபெயர்த்தேயம் எனும் அடியைக் கருத்திற்கொண்டு

அமைக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது).

and further the legendry poet kavichakravarthi kambar adapted Valmiki Ramayana into Tamil as kamba Ramayana.Villipuththur Aalvar adapted Mahabharata of Vedha Viyasar into Tamil .These are a few examples of everlasting translations of poetry in Tamil, In addition, it's very essential to maintainthe same sense or the emotions of the source poetry into target language. The following example is a translation of Sangam period poetry.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாயும் ஞாயும் யாராகியரோ

எந்தையும் நுந்தையுதம் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே"

-குறுந்தொகை –

The same poem is translated by M. Sahanmugam Pillai and

David E. Ludden as follows:

"Your mother and my mother,

How are they related?

Your father and my father,

What are they to one another?

You and I,

How do we know each other?

Like the rain and red earth,

Our loving hearts are mingled as one. "

This translation gives the same vivid picture of the source poem to the reader but such types of translations are rare.

Therefore, translation of poetry is one of the most difficult and challenging tasks for the translators. It is clear from Robert frost quotation that is poetry is what get lost in translation. This statement could be considered as a truthful one because there is no accurate equivalent when comparing two languages. Even though the translator has adequate knowledge in both languages they will not create a absolute translation of the

source poem.

References

1. The art of poetry and its translation-http/www.translationdirectory.com

2. மொழிபெயர்ப்பியல்-முனைவர் ச.ஈஸ்வரன் எம்.ஏ

3. தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலருமா மொழிச் சமநிலை?

**இலங்கையின் அரச நிறுவனங்களை அணுகும் போது பெரும்பான்மை சமூகத்தினருக்கு மத்தியில் வாழும் சிறுபான்மை இன மக்கள் எதிர்கொள்ளும் மொழியியல் சார் பிரச்சினைகள்.**

**By:R.Ruwaisa.**



மொழி நாகரீகத்தின் முதன்மைக் காரணியாகவும் மனித விருத்தியின் அச்சாணியாகவும் திகழ்கிறது. இம்மொழி கருத்துப் பரிமாற்றத்திற்குரியதாகவும் அதைப் பேசுகின்ற இனத்தின் அரசியல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்கவழக்கங்கள், ஒழுக்கநெறிகள் மற்றும் எண்ணங்கள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் வெளிப்படுத்தும் ஓர் சாதனமுமாகும். அதேநேரம் இம்மொழி சமூகத்துக்கு சமூகம் மாற்றமடையக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகின்றது.

இலங்கை பல்லின மக்களைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில் இங்கு மொழியாலும் மதத்ததாலும் இனத்தாலும் வேறுபட்ட ஏறத்தாள இரண்டு கோடியே இருபது லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 74 சதவீதமானவர்கள் தாய்மொழியாக சிங்களத்தையும் 18 வீதமானவர்கள் தாய்மொழியாக தமிழையும் எஞ்சிய வீதமானோர் ஆங்கிலம் உட்பட பிற மொழிகளையும் பேசுகின்றனர்.

அந்த வகையில் இன்றைய சமகால உலகில் அநேகமான பல்லின சமூகங்களில் ஒருவர் தனது சொந்தமொழியைப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதென்பது ஒரு முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. பல்லின சமூகங்களில் சில உள்நாட்டுப் பிணக்குகளுக்கு அடிப்படையாக அமைவது மக்களின் மொழி உரிமைகள் மறுக்கப்படுவதேயாகும். அச்சமூகங்களில் அநேகமாக மொழி உரிமை மிகக்குறைந்த அளவிலேயே பேணப்படுகின்றது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கான ஒன்றல்ல. மொழியானது உரையாடலுக்கும் அறிவைப் பெற்றுக்கொள்வதற்குமான ஒரு சாதனம் மட்டுமல்ல, அது ஒருவர் அல்லது ஒரு சமூகத்தின் இன அடையாளமுமாகும்.

இலங்கை 1505 இல் காலணித்துவ ஆட்சிக்கு உட்பட்டதிலிருந்து 1948 இல் சுதந்திரம் அடையும் வரையில் அரச தேவைகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் உரிய அரசகருமமொழியாக ஆங்கிலமே திகழ்ந்தது. இங்கு சிங்களம் மற்றும் தமிழ்மொழிகள் புறக்கணிக்கப்பட்டதோடு இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். காலப்போக்கில் தமிழ் சிங்களமொழி பேசும் மக்களைக் கருத்திற்கொண்டு அரசினால் சில ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்ட போதிலும் அவை எந்த அளவிற்கு மக்களுக்கு பிரயோசனமாக அமைந்தது என்பது கேள்விக்குறியே. இருப்பினும் மொழிக்கொள்கை பற்றிய ஆரம்பகால உரையாடல்களில் பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்களால் அரசகரும மொழியாக்கப்பட்டிருந்த ஆங்கில மொழிக்குப் பதிலாக சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிடையே சமத்துவ நிலையை ஏற்றுக்கொள்வதன் மூலம் அவை இரண்டையும் அரசகரும மொழியாக ஆக்குவது பற்றிய விடயமே செல்வாக்குப் பெற்ற காரணியாக அமைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்நியர் காலத்தில்தான் தமிழ் பேசும் மக்களுக்கு இந்நிலை என்றால் இலங்கை சுதந்திரமடைந்து சுமார் 65 வருடகாலத்தின் பின்பும் அதே நிலை தொடருதல் கவலைக்குரிய விடயமே. உண்மையில் குறித்த ஒரு நாட்டுப் பிரஜையாக வாழும் ஒருவருக்கு மொழியுரிமை என்பது அவரது உயிருக்கு நேர். அவர் சிறுபான்மையினராக இருக்கலாம் அல்லது பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவராக இருக்கலாம். சட்டத்தின் முன் இருவரும் சம உரிமையும் சம அந்தஸ்தையும் எதிர்பார்ப்பதிலோ அல்லது பயன்படுத்துவதிலோ தவறில்லை. அதற்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளையும் செயற்றிட்டங்களையும் மக்களின் சார்பில் நின்று முன்வைப்பதும் நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக 1956 யூனில் சிங்களமொழி அரசகரும மொழியாகச் சட்டமாக்கப்பட்டதிலிருந்து மொழியியல் ரீதியான பிரச்சினைகளும் இன ஐக்கியம், ஒருமைப்பாடு மற்றும் சீர்கேடுகளும் தலைதூக்கியுள்ளமையை நாம் அவதானிக்கலாம். சிங்கள மொழியை அரச கருமமொழியாக்கியமை மட்டுமல்ல பௌத்த மதத்தினை அரசமதமாக்க முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் பின்னர் அது 1972ம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியல் யாப்பின் கீழ் இலங்கையின் அரச நடவடிக்கைகள் மற்றும் அரசியல் அமைப்பு என்பவற்றில் தனித்துவமான இடம் ஒன்றைப் பெற்றுக்கொண்டமையும் ஏனைய சிறுபான்மை இன, மொழி, மதங்களிடையே ஒரு கசப்புணர்வை ஏற்படுத்தியது.(இலங்கை அரசியலில் மொழியும் மதமும் - சமாதிலிங்கம் சத்தியசீலன்-1994). ஏனெனில் அன்று ஆங்கிலேயர் ஆட்சிக்கும் ஆங்கிலமொழியின் ஆதிக்கத்திற்கும் எதிராக சிங்களத்தலைவர்களுடன் கரம் கோர்த்து இலங்கையின் வெற்றிக்காக போராடியவர்களில் சிறுபான்மையினரும் முக்கியமானவர்களே! இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் அது வெறுமனே பெரும்பான்மையினரின் வியர்வையால் கிட்டியது மட்டுமல்ல மாறாக சிறுபான்மை இனத்தவரின் இரத்தத்தினாலும் வென்றெடுக்கப்பட்டதாகும். எனவே எப்போதும் அதில் பாரபட்சம் காட்டுதல் என்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும்.

உண்மையில் அன்றே சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். இது அன்று நடைமுறைப்படுத்தப் படாமையின் பாதிப்புக்களை நாம் இன்றும் அனுபவித்துவருவது நிதர்சனமே. சிங்கள மொழி ஆதிக்கமும் சிங்கள மொழிக்கு கொடுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் கிடைத்தும் அது தமிழ்மொழிக்குச் செலுத்தும் ஆதிக்கமாக மாறியது. இன்று சட்டதிட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் இருந்தாலும் அவற்றை அமுல்படுத்துவதற்கு அவசியமான விருப்ப உணர்வு, கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் அவை மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை எங்ஙனம் நிறைவேற்ற முடியும்.

அந்தவகையில் இலங்கையின் அரசியல் யாப்பின் மூலம் பின்வரும் மொழியுரிமைகள் சிறுபான்மையினருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினை நாம் அவதானிக்க முடியும்.

இலங்கை அரசியலமைப்பின் IIIவது அத்தியாயத்தின் 10, 11, 12, 13 மற்றும் 14 வது உறுப்புரைகளுக்கு அமையவும் 14ம் அத்தியாயத்தின் மொழிதொடர்பான உறுப்புரை மூலம் அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்தவகையில் மொழிபற்றிய அடிப்படை உரிமைகள் 12(2) உறுப்புரையில் பின்வருமாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. "எந்தவொரு பிரஜையும் இனம், மதம், சாதி, ஆண்-பெண் வித்தியாசம் அரசியல் கருத்து அல்லது பிறப்பிடம் என்ற காரணிகளின் நிமித்தம் அல்லது இவற்றுள் எந்தவொரு காரணத்தின் நிமித்தமும் பாகுபாட்டிற்கு அல்லது விஷேட சலுகைக்கு உட்படக்கூடாது".

அதேநேரம் 1972, 1978 ஆகிய அரசியலமைப்புக்களில் சிங்களம் அரசகரும மொழியாகக் குறிப்பிடப்பட்ட போதும் பின்னர் இந்நிலமை 13ம் அரசியல் திருத்தத்தின் பின்னர், சிங்களமும் தமிழும் அரசகருமமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றமையால் சகல அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளும் சிங்களத்திலும் தமிழிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலை தோன்றியது. இந்த அத்தியாயத்தின் (IV) இன் ஏற்பாடுகளுக்கு அமைய அரசகரும மொழிகளை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தால் சில சட்ட ஏற்பாடுகள் மெற்கொள்ளப்பட்டன. இதற்கமைய தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு போன்றன செயற்படலாயின. தொடர்ந்து 19வது உறுப்புரையின் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் என்பன அரசகருமமொழிகளாக இருப்பதோடு தேசிய மொழிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டன. எனவே சர்வதேச பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய தேசிய நிறுவனங்களில் இந்த இருமொழிகளில் ஒருமொழியில் உரையாற்ற முடியும் என்ற நிலமை மக்களுக்கு காணப்பட்டது.

இவை அனைத்திற்கும் மேலாக 22வது உறுப்புரையின் கீழ் இலங்கை பூராகவும் சிங்களமும் தமிழும் நிருவாக மொழியாகும் என்ற சட்டம் முன்வைக்கப்பட்டது. அதாவது அரச நிறுவனங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பதிவேடுகளைப் பராமரித்தல் என்பன நிர்வாக மொழியிலே இடம்பெற வேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய இலங்கையின் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் நிர்வாக மொழிகளாக இருக்கும் பட்சத்தில் சகல நடவடிக்கைகளும் மொழிகளில் இடம்பெற வேண்டும் என்ற நிலை தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று உறுப்புரை 22(4) மாகாணசபைகளின் நடவடிக்கைகள், உறுப்புரை 22(5) சிங்களம் அல்லது தமிழ்மொழி பற்றிய விசேட அறிவு, உறுப்புரை(23) சட்டம் இயற்றும் மொழி போன்ற இன்னும் பல ஏற்பாடுகள் மூலம் தமிழ் மொழிக்கான உரிமைகள் வழங்கப்பட்ட போதும் அவை அனைத்தும் ஏட்டுச்சுரைக்காயென வெறும் எழுத்தளவில் மட்டுமே இருப்பதையும் நாம் அவதானிக்க முடியும்.

உண்மையில் தேசிய இனம் என்ற வகையில் மொழி என்பது எமது தேசிய கலாசாரத்தின் ஓர் அம்சமாகத் திகழ வேண்டும். இது இவ்வாறு இடம்பெற வேண்டுமானால் எமது மொழிப்பயன்பாடு, கல்வி, சட்டம், அரசியல் என்பவற்றில் இப்பண்புகள் வேரூன்றி அமைய வேண்டும். ஆனால் நடைமுறையை நாம் நோக்குமிடத்து இது தலைகீழான ஒன்றாகவே காணப்படுகின்றது. தமிழ் பேசும் ஒரே ஒரு காரணத்துக்காக இருமொழிப் பிரதேசங்களைக் கொண்ட பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் படும் அவலநிலை வார்த்தைகளால் கூறிவிட முடியாதவை.

ஆனால் இவ்வாறான பகுதிகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரு மொழிபெயர்ப்பாளர்களே செயற்பட்டு வருவதையும் காண முடிகிறது. அவர்களும் அற்ப மொழிபெயர்ப்புக்களுக்காக அளவு கடந்த பணத்தைப் பெற்றுக்கொள்வதனால் மக்கள் அவ்வாறான சேவைகளை நாடுவதையே நிறுத்திக் கொள்கின்றனர். இலங்கையின் இருமொழி பேசும் அநேகமான பிரதேசங்களில் பெரும்பான்மை சமூகத்தை மாத்திரம் கருத்திற் கொண்டே ஆவணங்கள், அறிக்கைகள் என்பன சிங்கள மொழியில் மாத்திரமே வெளியிடப்படுகின்றன.

இத்தகைய பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசக்கூடிய பெரும்பாலான மக்கள் சிங்களத்தைக் கதைக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பினும் அவற்றை எழுத்து வடிவில் எழுதக்கூடிய அல்லது அவற்றை வாசித்து அறியக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள் அல்லர். இத்தகையவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே குறிப்பாக கல்வி கற்று தொழில் புரியவர்கள் கூட சில சமயங்களில் சிங்களத்தில் எழுதவோ அல்லது வாசிக்கவோ தெரியாமல் இருப்பது கண்கூடு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்களம் எழுத வாசிக்கத் தெரியாத மக்கள் அதைத் தெரிந்த அலுவலர்களின் உதவியோடு தமது தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இந்த மொழிபெயர்ப்பும் குறித்த நபருக்கு எவ்வளவு தூரம் விசுவாசமாக அமையும் என்பதும் அடுத்தகட்ட பிரச்சினையாகும். இவ்வாறு தேவைகளை நாடிச்சென்ற பலர் மொழிபெயர்ப்புகளில் ஏற்பட்ட பிரச்சினைகள், தவறான விளக்கங்கள், தவறான விளங்கிக்கொள்ளல்கள் காரணமாக விபரீத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளமையும் நாம் நிதர்சனமாக காணமுடிகின்றது. இவ்வாறான சிக்கல்கள் சட்டம் மற்றும் வைத்தியத் துறைகளில் பரவலாக இடம்பெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

சாதாரணமாக சட்டவழக்காணைக்கு அழைப்பு விடுக்கும் கடிதங்கள் கூட சிங்கள மொழியில் மாத்திரமே அனுப்பப்படுவதனால் அதனை விளங்கி தவணைக்குச் சரியாக செல்லவே மக்கள் தவறிவிடுகின்றனர். இதனால் குறித்த தவணைக்குச் சமூகமளிக்காத காரணத்தினால் 500ரூபாவுடன் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டப்பணங்கள் 5000ரூபா வரையில் நீடிக்கும் நிலைக்கும் செல்கின்றமை கவலைக்குரிய விடயமே.

சிறுபான்மையினராகவும், தமிழ் பேசும் மக்களாகவும் பிறந்தமை மக்கள் செய்த குற்றமா? அரச ஊழியர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று சட்டங்கள் கூறிய போதும் அது எந்தளவுக்கு அமுல்படுத்தப்படுகின்றது என்பது வினாக்குறியே. அரசகருமமொழி ரீதியான பரீட்சைகளை பெரும் ஊழியர்கள் கூட தமிழில் ஒரு வார்த்தையேனும் எழுதவோ உரையாடவோ முடியாமல் இருப்பது எங்ஙனம் என்று தான் தெரியவில்லை. சாதாரணமாக மும்மொழித் தேர்ச்சி பெற்றவர்கள் என வரவேற்பு கருமபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் கூட சேவை நாடுனர்கள் தமிழ் பேசும் மக்கள் என அடையாளம் தெரிந்திருந்தும் தமிழில் ஒரு வார்த்தைதானும் கேளாமல் "ஔயாகே நம மொகத? ஔயாட மொனவத ஓனே?" என சிங்களத்தில் மட்டும் உரையாடும் மனப்பான்மையை கொண்டிருப்பது ஏனென்றும் தெரியவில்லை.

தங்களுக்குத்தான் சிங்களத்தைவிட்டு தமிழை கதைக்க முடியாது என்ற ஒரு மனநிலை காணப்படுகின்றது என்றால் அரச அலுவலர்களுக்கான தொழில்நிலை ஆட்சேர்ப்பு வீதத்திலாவது தமிழர்களது எண்ணிக்கையை சற்று அதிகரிக்கலாம் அல்லவா? இப் பிரதேசங்களிலுள்ள எந்தவொரு அரச அலுவலகங்களை நோக்குமிடத்தும் அங்கு தமிழ் பேசும் ஊழியர்களின் அளவு சொற்பளவிலேயே பதிவாகியுள்ளமையை நாம் அவதானிக்கலாம். அவற்றிலும் அநேகமாக அலுவலகங்களில் ஒரு தமிழ் ஊழியராவது செயற்படாமல் இருப்பது நிதர்சனமான உண்மையே. இவை அனைத்துக்கும் மேலாக தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அலுவல்களை ஏற்றுக்கொள்ளும் எம்தரப்பு ஊழியர்கள் கூட தாம் ஒரு தமிழ் பேசும் நபர் என்பதை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் தொழிற்படுவதும் தேவைகளின் இறுதியில் அவர்களின் பெயர் முத்திரை மற்றும் கையொப்பம் என்பன அவர் ஒரு தமிழ் பேசும் நபர் என்பதை அடையாளம் காட்டி நிற்பதும் கொடுமையிலும் கொடுமையே.

பெரும்பான்மை மக்களுக்கு மத்தியில் வாழும் சிறுபான்மை இன மக்கள் தபால் நிலையங்களில் பதிவுத்தபால் அனுப்புவதற்கு படும்பாடும் வங்கி பற்றுச்சீட்டு, வைப்புச்சீட்டுக்களை நிரப்பி தங்களுடைய பணத்தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் தவிக்கின்ற நிலைமையும், பஸ்தரிப்பிடங்களில் புகையிரத நிலையங்களில் கால அட்டவணைக்கு ஏற்ப செயற்பட முடியாமல் பரிதவிக்கும் நிலையும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாதவை. குறிப்பாக பிரதேச செயலகங்களில் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்கும் போதும், மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முற்படும் போதும் பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இப்பிரதேசங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான தாதியர் சேவைகள் கூட சிங்கள மொழியிலேயே வழங்கப்படுவதால் தமிழத் தாய்மார்களும் குழந்தைகளும் தகுந்த ஆரோக்கியமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் நிலவுகின்றன. சுகாதாரப்பிரிவு, பிரதேச செயலகம் போன்ற இன்னும் பல முக்கியமான துறைகளுக்கூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் சாதாரண கூட்டங்கள், விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் கூட சிங்கள மொழியில் நடைபெறுவதால் அக்கூட்டங்களின் யதார்த்த நிலையை தமிழ்மக்கள் உணர முடியாமல் போகின்றனர். இவ்வாறான பிரிவுகளிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் கூட சிங்கள மொழியில் மாத்திரமே வீட்டு விலாசங்களுக்கு அனுப்பப்படுவதால் அக்கடிதங்கள் இன்னும் பல வாசற்படிகள் கடந்தே மொழிபெயர்க்கப்பட்டு குறித்த நபரைச் சென்றடைகின்ற நிலைமையும் எடுத்துக் காட்டப்பட வேண்டியதாகும்.

மக்கள் பயன்படுத்தும் ஆவணங்கள், பெயர்ப்பலகைகள் கூட சிங்களத்தில் மாத்திரமே வழங்கப்படுதல் மக்களுக்கு மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. கல்வித்துறையில் தமிழ்பேசும் மாணவர்களும் ஆசிரியர்களும் சிங்களமொழியைக் கற்று பரீட்சியப்படிருப்பதால் ஓரளவு சுமூகமான நிலை காணப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும் ஆசிரியர் கைந்நூல், மாணவர் கருத்தரங்குகள், கல்விசார்விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் போன்றன சிங்கள மொழியில் மாத்திரமே இடம்பெறுகின்றமையும் குறிப்பாக தமிழ்மொழிமூல பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பிக்கக்கூடிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றமையும் நாம் அவதானிக்கலாம். மட்டுமல்லாது இப்பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மாணவர்கள் தங்களுடைய எதிர்கால தொழில்வாய்ப்புக்களைக் கருத்திற் கொண்டு சிங்கள மொழியிலேயே தங்கள் கற்றல் நடவடிக்கைகளைத் தொடருகின்ற ஒரு புதிய போக்கும் நிலவுகின்றமை கவலைக்குரிய ஒன்றாகும்.

இவ்வாறான மொழி மற்றும் மொழிபெயர்ப்பு சார்ந்த பிரச்சனைகள் மக்களுடைய செயற்பாடுகளில் பாரிய காலதாமதங்களை ஏற்படுத்துகின்றமையும் இதனால் பெரும்பாலான மக்கள் தங்கள் தேவைகளின் நிமித்தம் குறித்த அலுவலகங்களை நாடாமல் அப்படியே கைவிட்ட நிலையில் உள்ளமையும் குறித்த பிரதேசங்களில் நிதர்சனமாக காணமுடிகின்றது.

எனவே இந்நிலை மாற வேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க மொழி ஒரு தடையாக அமைந்து விடக்கூடாது. சிங்கள மக்களைப் போலவே தமிழ் பேசும் மக்களும் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள சம சந்தர்ப்பமும் சம உரிமையும் அரசாங்கத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். மொழி மற்றும் மொழிபெயர்ப்பு சார் பிரச்சனைகள் நிலவும் பிரதேசங்களை அடையாளம் கண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும். அடையாளங் காணப்பட்ட பிரதேசங்களில் தமிழ் மொழி பேசும் ஊழியர்களின் அளவை அதிகரிக்க வேண்டும். மொழிக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவந்து அதற்கூடாக இணக்கமான ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் மும்முரமான நடவடிக்கைகளை எடுத்தல் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

▲▲▲▲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Translation of poetry from Tamil To English**

## She is in my sense
## By:T.Gobini



Your sympathy and love
Spread and melt
Through out our village
As a good smell

You are younger
than me only
eight months
nevertheless
you had the feeling only
still you are young

we had been living like
we would not face death

you and I would
know that
our relationship
would be eternal
that kind of eternal bond
in our life…!

I feel that
You didn't leave me
It's understood
That you have been
My breath

Place you stood
Ground you walked
Threshold which is full of
your breath
flower plants
which were touched by
your hand and fingers
their flowers
buds
furthermore

your silk sarees
dresses
clothes
lingerie
glowing gold
all are untouched
and unheard by anybody

Furthermore
I had been melting
In the wind that
You passed in the
biggest sky and
in the light blue



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

colour in the
crimson colour of the
morning sun

you are omnipresent
when you told that
I'm your would be
husband
It's not you but
I became blushed

What else!
I have no doubt
You would be

Welcoming whole
heartedly
When I come in few days

I this emotional
Out burshed?
No No
It's mixed with
Some truth and
Some nonsense

Your sympathy and love
Spread and melt
Through out the village
As a good smell.

▲▲▲▲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Translation of poetry from Tamil To English**

# Two kinds of rain

**By:M.Tharshika**

**( Source Peom By: Nedunthivu Mukilan )**



**Rain1**

It rains torrentially
Children keep vassels to the
leaking water
From the roof
Electricity supply is cut
Lunch becomes dream as the wet
fire woods
Drenched dogs, cats and hens
Come into the house
Overflowed water from the well
Min with the drainage
Drainage odors
School books are kept on the
hearth
For safety
Sick of the sounds of
Falling trees and screaming frogs
Everyone decides to go to
A nearby temple for the night sleep

**Rain 2**

It rains torrentially
Ac is reduced because of the
cold
Hot coffee is prepared
hurriedly
On the electric oven
Children fin the paper boats
Windows re shut and curtained
against drizzle
Vehicles are park inside
Weather reports are watched on
TV
Sweet rainy day memories are
skyped with relatives
When gets sleepy slightly
Doors are shut tightly with the
warm blankets.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Challenges faced by interpreters

## By:N.Fathima Sasira

Judicial legal or court interpreting occurs in court of justice. Legal interpreting can be consecutive interpretation. Interpreting or interpretation is the facilitation of oral or sign language communication either simultaneously or consecutively.

A person who explains the theme from one language into another is called an interpreter. Because they are explaining what a person is saying to someone who does not understand,. Interpreters should have some important qualifications. Interpreters possess the following skills.

- Thorough knowledge of the general subject to be interpreted
- Intimate familiarity with both cultures
- Extensive vocabulary in both languages
- Ability to express through clearly and concisely in both languages
- Excellent note taking techniques for consecutive interpreting
- Extra ordinary listening abilities
- These are the most important requirements.

Court interpreters are called as mudaliyaar in Sri Lanka. The duty of the court interpreter is to serve as a conduit between linguistic minority speakers and officials in legal field. As they convert one language to another interpreters play a critical role in the administration of juristic and make it possible to ensure the rights due to process and participation in the court system for all those involved.

Court interpreters may face many challenges here I describe only language related challenges. Interpreters face many challenges.

**Dialect**

The Sri Lankan Tamil language has several dialects used in the modern country of Sri Lanka by Sri Lankan Tamil people. Sri Lankan Tamil dialect



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is divided in to many verieties. They are Jaffna dialect, Batticaloa dialect, Negembo dialect, Upcountry dialect and Muslims dialect. People who belong to these dialects migrated to Anuradhapura district for different purposes such as business. In this context while court proceedings interpreters should face some challenges on their dialects. So interpreters should have knowledge on different dialects

For example

எழுவான் east

படுவான் west

## Cultural words

Interpretation plays a vital role in court proceedings. While interpreting, interpreters should consider about the culture of the target language. Some cultural words have no proper words in target language. So the interpreter can not get the meaning from glossaries or dictionaries. If he/she wishes to get proper idea of those words it is possible for the interpreters only by getting familiar with the target language culture. Then only they can get the proper meaning of cultural words.

For example

පිරිත් - பௌத்த சுலோகங்களை உரத்த குரலில் சொல்லுதல்

බණ - சிங்கள மொழியில் பௌத்த சமய போதனை

It is very important to consider, here the word has no meaning on in but there are meaning in society. So the interpreter should know not only the dictionary meaning but also the cultural meaning. The knowledge of cultural glossary has to be gathered from the society.

## Equivalence

Some words have different meaning in different contexts. While interpreting interpreters should consider the meaning of this. If not, it will be a bigchallenge.

Example:

- ✓ කනවා - சாப்பிடுதல்
- ✓ ගුටි කනවා - அடிவாங்குதல்
- ✓ කාලය කනවා - நேரத்தை வீணாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✓ මගුල් කනවා - திருமண நிகழ்வை கொண்டாடுதல்
✓ පනුවෝ කනවා - பூச்சியினால் ஏற்படும் பாதிப்பு
✓ මලකඩ කනවා - துருப்பிடித்தல்
✓ ගම කනවා - ஊருக்கு அவப்பெயரை ஏற்படுத்துதல்
✓ වෙඩි කනවා - துப்பாக்கி சூடுபடுதல்
✓ දත්මිටි කනවා - பல் நெருமுதல்

**Idioms and proverbs**

Interpreting idioms is also a very big challenge. Interpreters should consider the meaning of idioms. Idioms are phrases that have a meaning of their own that cannot be understood from the meanings of its individual words. A proverb is a short popular saying that gives advice about how people should behave or express a belief that is generally thought to be true.

Some idioms are given below

✓ කටුස්සාගේ කරේ රත්තරං බැන්දා වාගේ
✓ කජු කනවා වාගේ
✓ නොඑන ගමන් යනවා
✓ බඩට ගහනවා
✓ ගස් නැති රටේ එඬරු ගහත් ගහක්ලු

Some idioms are in English

✓ Cat nap – short sleep
✓ Ants in one's pants – unable to sit still or remain calm or nervousness or excitement
✓ All ears – fully listening
✓ Bad egg – a person who is often in trouble
✓ At the drop of a hat – without needing any advance notice.

Some proverbs

✓ ගඟට ඉනි කපනවා
✓ ඔබේ සිටවු ඉන්න
✓ හද ඉල්ලා හැඬීම



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✓ ආදරයට බේරික් නැත ජීවිතයට රිවස් නැත

Some proverbs in English

✓ Rome was not built in a day
✓ a cat may look at aking
✓ empty vessels make the most sound
✓ you can't put the clock back
✓ practice makes perfect

**Tenses**

Tense is also one of the challenges in interpretation. In English there are 16 tenses but in Tamil there are three tenses so it is very difficult in interpreting. But we could interpret the 16 tenses into Tamil. The interpreters should get the proper meaning of English, thereafter they could interpret easily.

Between Sinhala and Tamil tense are same but in Sinhala we can not differentiate Sinhala present and future tense because both to tenses verbs are same.

Example

කනවා - சாப்பிடுதல்
නානවා - குளித்தல்
බොනවා - குடித்தல்
යනවා - போதல்

මම ඉස්කෝලෙට යනවා - நான் பாடசாலைக்கு போகிறேன்
මම හෙට ඉස්කෝලෙට යනවා - நான் நாளை பாடசாலைக்குப் போவேன்

**Case**

When interpreting from Sinhala to Tamil interpretation interpreters should concentrate about case. In Tamil language we can speak Tamil words with ஐ but in Sinhala we could not speak like that

Example

மாமா மரத்தை வெட்டினார்
මාමා ගස් කැපුවා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Superior and inferior class

In Sinhala to Tamil interpretation the interpreter should consider the difference between superior and inferior class. In Sinhala thisSuperior and inferior classes play a vital role. In Tamil Superior and inferior class variation, dog cat, cow are also using as inferior but in Sinhala it was taken superior because of the linguistic variation.

For example

- ✓ මිනිස්සු දෙන්නෙක් ඉන්නවා
- ✓ மனிதர்கள் இருவர் உள்ளனர்
- ✓ බල්ලෝ දෙන්නෙක් ඉන්නවා
- ✓ நாய்கள் இரண்டு உள்ளது.

## Sinhala Tamil pronunciation

When comparing Sinhala and Tamil alphabets there are two more different vowels in Sinhala. While interpreting interpreters should consider this differences and should consider its pronunciation.

For example

- ✓ අත - கை
- ✓ ඇත - உண்டு
- ✓ ඒ - அந்த
- ✓ ඇ - அவள்

## Nouns

Interpretation plays a vital role in multilingual area of Anuradhapura district. While interpreting to English in any from any language should consider some things. Like this nouns are also a big challenge for interpreters when interpret.

Milk means in Tamil தேங்காய்ப் பால். When we are interpreting as coconut milk it is totally wrong interpretation. It should be interpreted as milk of the coconut. Milk means in Tamil தாய்ப்பால் மிருகங்களின் பால் இளநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Meat giving meaning is இறைச்சி. he is working for meat and drink' when we interpret this sentence as அவன் தண்ணீருக்கும் இறைச்சிக்கும் வேலை செய்தான் it is wrong. It should be interpreted asஅவன் சாப்பாட்டிற்கும் தண்ணிருக்கும் வேலை செய்தான்.

meat mean உணவு சிரட்டைக்குள் இருக்கம் தேங்காய்மாம்பழம் முதலிய பழங்களிலுள்ள சதை

Bath mean குளித்தல் But in pont or sea it was bathe.

So while interpreting interpreters may face like this of challenges like this. So while interpreting interpreters should consider about this like of nouns.

Singular plural of nouns

And also singular plural of English language is also a big challenge. Because some words could not differentiate whether singular or plural

Example, sheep deer salmon trout

Some English words have no plural words

Ex Poetry, information, furniture, news

**Qualifying words -**

Interpreters also faced a challenge while interpreting qualifying words.

Example, hot

- There are hot words - இவை கடுஞ்சொற்கள்
- This is a hot curry - இது உறைப்பான கறி
- This is a hot weather - இது வெப்பமான காலநிலை
- She has a hot temper - அவள் ஒரு கோபக்காரி
- Young men are usually hot blooded - பொதுவாக வாலிபர்கள் துடிப்பானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Verbs**

Verbs also pose one of the challenges for interpreters. Normally 'be' verbs have many different meanings.

Example

- ✓ What do have you in mind? - உம்முடைய மனதில் என்ன இருக்கின்றது?
- ✓ I don't like such conduct. - இந்த மாதிரியான நடத்தை எனக்க விருப்பமில்லை.
- ✓ The news papers have it. - பத்திரிகைகள் சொல்லுகின்றன.
- ✓ Have you any idea where he lives - அவர் எங்கே இருக்கின்றார் என்று அறிவீரா?
- ✓ He has seven children - அவனுக்கு 7 பிள்ளைகள்.

According to the above example we could understood have/has in each sentences have different meanings

**Sentence structure**

In English there are four types of sentences

- ✓ Simple sentences
- ✓ Compound sentence
- ✓ Complex sentences
- ✓ Mixed sentences

But in Tamil there are only two sentence types

தனி வாக்கியம்

தொடர் வாக்கியம்

Sentence structure in Tamil is subject + object + verb

But in English it was subject + verb + object



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


This is also one of the challenges for interpreters. However interpretation is very important in multilingual society. Interpreters should ignore these types of challenges while interpreting. If not the interpreters will face some serious challenges. To handle these challenges one should improve his/her interpretation requirements.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருக்கூட்டி

**By: A.Sandika**



லட்சுமி பாடசாலையிலிருந்து வீடு திரும்பினாள். கட்ஜனா மரத்தினாலான அந்தக்கததவை அவள் சாத்தினாள். அது ஒரு சிறிய குடிசை மரத்தின் கீழ் அமைந்திருந்தது. அங்கே அதற்கருகில் வேறு குடிசைகளும் அமைந்திருந்தன.

அவள் தனது புத்தகப் பையினை மரப்பெட்டியினுள் வைத்தாள். அது அவளுடைய மேசையும் கூட. பின்பு நிலத்திலே விரித்திருந்த பாயிலே அமர்ந்தாள். வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் அவளைப் பாதுகாத்த அந்தக் குடில்தான் அவளது புகலிடம்.

லட்சுமி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினாள்.

எனது வகுப்புத்தோழிகளில் யாராவது "ஒருவர் உன் அம்மா என்ன செய்கிறார்" எனக் கேட்டால் அவள் ஒரு "தெருக்கூட்டி" என இப்போது நான் பெருமிதமாகச் சொல்வேன்.

முன்னர் அவர்கள் என் அம்மாவின் வேலையைப் பற்றிக் கேட்டபோது நான் மிகவும் வேதனையடைந்ததுடன் என்னால் திருப்பி பதிலளிக்க முடியவில்லை. நான் மிக வேதனையடைந்தது மட்டுமல்லாமல் உங்களுடைய அம்மா என்ன செய்கிறார் என்று திருப்பிக் கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த முகத்துடன் எனது அம்மா ஒரு கணக்காளர் அத்துடன் அவரிடம் எழுதுவினைஞர்கள் பலரும் வேலை செய்கிறார்கள் என்று கீதா மலர்ந்த முகத்துடன் கூறினாள். கீதா மீண்டும் அதே கேள்வியை என்னிடம் கேட்டாள். முதலில் நான் பதிலெதுவும் கூறவில்லை ஆனால் பின்னர் "ஏன் இதைப்பற்றி ஆவலாகக் கேட்கிறாய்" எனக் கேட்டேன்.

"லட்சுமி தயவு செய்து கதவைத் திற" அவளுடைய அம்மா பொன்னி மெதுவாகச் சொன்னாள்.

அம்மா கதவு பூட்டியில்லை

லட்சுமி நீ மதியம் சாப்பிட்டியா?

அவளை நான் பரிதாபமாகப் பார்த்தேன்.

அதிக உயரமுமில்லாமல் அதே நேரம் குள்ளமாகவும் இல்லாமல் அளவான நடுத்தர உயரமுடைய மலர்ந்த முகமுடைய என் அம்மாவின் கண்கள் மிகவும் பிரகாசமானவை ஆனால் சற்றுக் கிடங்கு விழுந்த கண்கள். நான் அவளை ஊசிகுத்தும் பார்வையால் உற்று நோக்கினேன். என் அம்மா என்னை நோக்கி மெதுவாக கதைக்க ஆரம்பித்தாள்.

எனதருமை மகளே நீ தீவிரமாக என்ன சிந்திக்கிறாய்

தீவிரமாக எதுவுமில்லை ஆனால் உனது வேலையைப்பற்றி மட்டுமே

நீ ஏன் தெருக்கூட்டியானாய்

உன்னால் அதை ஊகிக்க முடிகிறதா? எனது அப்பா நோய்வாய்ப் பட்டதும் நான் எனது படிப்பை கைவிடும் நிற்பந்தர்திற்கு ஆளானேன். இந்த வேலை செய்யும் வயதை அடையும் வரை நான் சில தொட்டாட்டு வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது.

லட்சுமி அதனுடன் நிறுத்திக் கொள்ளவில்லை

எனது வகுப்புத் தோழிகள் உனது வேவலையைப் பற்றி என்னைக் கேட்கும் போது நீ ஒரு தெருக்கூட்டி என என்னால் சொல்ல முடியவில்லை.

பொன்னி அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள். தனது புருவங்களை உயர்த்தி திருப்தியற்ற தன்மையை வெளிக்காட்டினாள்.

"நீ இப்படி சிந்திப்பாய் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை" பொன்னி முணுமுணுத்தாள்.

இல்லை அம்மா நான் உன்னை அவமானப்படுத்த எண்ணவில்லை. நீ செய்யும் இந்த வேலையில் கௌரவம் இருக்கிறதா? என்று மட்டுமே எண்ணுகிறேன்" லட்சுமி மன்றாடினாள்.

பொன்னி சற்றுக் குழம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் இதுவும் ஒரு வேலை. அவசியமான வேலை. வெள்ளவத்தை நகரத்தினுடைய ஆரோக்கியமான ஒரு நிலையைப் பற்றி மட்டுமே ஒருமுறை நினை. மாநகரசபை, அபான்ஸ் லிமிடெட் மற்றும் தெருக்கூட்டி இல்லையெனில் அது பாழாகிவிடும்.

அம்மா எப்படி உன்னால் இப்படி நன்றாகப் பதிலளிக்க முடிகிறது.

நாம் நமது நகரத்தை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணாவிடில் நீயும் உனது நண்பிகளும் சீருடை அணிய முடியுமா என நினைத்துப்பார். மேலும் துர்நாற்றம் தாங்க முடியாமல் நீ உனது மூக்கை கைகுட்டையால் மூடவேண்டிவரும். தூசிகள் எமது உடலின் சில பகுதிகளில் சென்றடைகின்றன என்பதில் சந்தேகமில்லை.

லட்சுமி குறுக்கிட்டாள்

அம்மா நீ எப்படி உனது வேலையை நேசிக்கின்றாய்? நீ எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறாய். ஆனால் விசுவாசமான உணர்வுள்ள பிரஜை போல் பேசுகிறாய்.

பொன்னியின் வார்த்தைகள் அவளது சிந்தனையைத் தூண்டின.

லட்சுமி சில நாட்களுக்கு முன்பு இடம்பெற்ற விபத்து ஒன்றை நினைத்துப் பார்த்தாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை நான் மரக்கறிகள் வாங்க சந்தைக்குப் போனேன். வீதியின் தொலைவில் எனது மச்சாள் ஒருத்தியை சந்தித்தேன். அத்துடன் நான் அவளுக்கு எனது பாடக்குறிப்பினை தருவேனா இல்லையா என அறிய விரும்பனாள். அந்த நேரத்தில் இரண்டு பழ வியாபாரிகளுக்கிடையில் இடம்பெற்ற உரையாடலைக் கேட்டேன்.

“அந்தப் பெண்மணியைப் பார் அவள் இந்தப் பகுததிக்குப் பொறுப்பானவள். அவள் ஒரு நேர்மையான தொழிலாளி. நீண்ட காலமாக அவள் இருப்பதனால் நாம் அதிகளவான வாடிக்கையாளரைக் கொண்டிருப்பதுடன் எங்களுக்கு எந்தப் பிரச்சனையுமில்லை.”

நான் சந்தோசமடைந்தேன். ஐம்பது மீற்றர் தூரத்தில் ஒரு பாட்டியை காணமுடிந்தது. நான் அவரை அழைக்க விரும்பினேன். அந்த நேரத்தில் மூன்று நான்கு இளைஞர்கள் அந்த வீதியைக் கடந்துகொண்டிருந்தார்கள். தற்செயலாக ஒரு பையனின் வெள்ளைக் காற்சட்டையில் சில அழுக்குகள் பட்டு சிறு பகுதி அழுக்காகிவிட்டது. அந்தப் பையன் கவலையடைந்தான். தனது காலை நீட்டி “நீங்கள் இதைத் துடைத்துவட வேண்டும்” என்றான். எனது அம்மா எந்தவித தயக்கமுமின்றி அதைச் செய்வது போல் பாசாங்காக அணுகினாள். அந்தப் பையன் ஆச்சரியமடைந்தான். அவனது கன்னங்கள் சிவப்பானதுடன் தனது காலைப் பின்னோக்கி நகர்த்தினான். பரவாயில்லை நீங்கள் துடைக்கத் தேவையில்லை எனக் கூறி அவன் சிரித்துகொண்டே அவ்விடத்தை விட்டு ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு சம்பவங்களும் பாடசாலையில் ஆசிரியர் கூறிய வார்த்தைகளும் என் மனக்கண் முன்னால் மீண்டும் மீண்டும் தோன்றியது.

நான் ஆச்சிக்கு அந்த உபதேசங்களைப் பற்றியும் தொழிலாளர் தினத்தைப் பற்றியும் கூறினேன். ஆச்சி அந்த உபதேசங்களை மீண்டும் கூறவேண்டும் என வற்புறுத்தினார். நான் அவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டு திருப்பிச் சொல்வதற்கு உடன்பட்டேன்.

“பிள்ளைகளே வீட்டிற்கு அடுத்தபடியாக உங்களை சாதி, நிறம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாமல் நம்பிக்கையுடனான நல்ல பிள்ளைகளாக உங்களை உருவாக்குவது பாடசாலைகளின் பொறுப்பு. இன்று தொழிலாளர் தினம் இது அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. நாங்கள் தொழிலாளர்களை கட்டாயம் மதிக்க வேண்டும் அத்துடன் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.”

“செய்யும் தொழிலே தெய்வம்”

நான் ஆச்சியுடன் சாகாசமாகக் கதைத்தேன்.

நான் உனது தொழிலை நினைத்து மிகவும் சந்தோசமடைகிறேன். நான் உன்னை வாழ்த்துகிறேன். நான் உன்னை நினைத்துப் பெருமையடைகிறேன். என்னுடைய அம்மா ஒரு “தெருக்கூட்டி” என எவ்வித தயக்கமுமின்றி எல்லோருக்கும் சொல்லுவேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Poetry**

## Stage Monster

**A.F. Musrath Nisha**



The crowd was a small number
I's okay I can handle it; I thought
I sat aside
Time went on and on
Something invisible was growing
beyond my head
I started to look over and
down and beside
I couldn't guess that what
I was shivering inside
But I didn't menifest   it out
Somehow I tend to bear it
At last the loud announcement
reached my ears,
Ohh! That was my name
Ohh! Now now
What should I do;
I was scared standing in the middle


I must go to the stage
No other options
Legs dragged myself there
I took the mike
My hands were troubling
My heart beat went up to top
Sweat drops rolled down the body
Words were sucked between throat
Voice disagreed to come out
I stammered hardly
I had to do what I told as I would,
But finally
The stage got its triumph
It ate me up
I could hear the insult laughing
from the crowd
Never again to the stage;
Whispered my heart.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பர மாயையும் மொழிபெயர்ப்பு இடர்பாடுகளும்

By: E.Bairavi




விளம்பரம் என்கின்ற மாபெரும் வணிகசக்தியின் பேராதிக்கத்தின்பால் நம் அன்றாட வாழ்க்கை ஒவ்வொரு கணமும் ஈர்க்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. வணிகப் போட்டிகளின் காரணமாக விளம்பரங்கள் என்பன கற்பனாவாத புனைவுகளாக அமைந்து மக்களை மாயவலைக்குள் வீழ்த்துகின்ற செயன்முறையாக உள்ளன. இருப்பினும் அந்த மாயக் கற்பனைகளில் மதிமயங்கிய நுகர்வோராகவே நாம் அன்றாடம் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம் என்பது மறுக்கமுடியாத உண்மை. தற்போது வெளிவருகின்ற விளம்பரங்கள் மிகைப்படுத்தப்பட்டவையாகவே இருந்தாலும் அதிலுள்ள உருவாக்கத்திறன் என்பது வியக்கத்தக்கது. எந்தவொரு விளம்பரத்திலும் அதன் பேசுபொருள் மற்றும் தொனி என்பவற்றோடு கையாளப்படுகின்ற மொழி என்பதும் முக்கியமானதாக இருக்கின்றது. நமக்கு தற்போது மொழிபெயர்க்கப்பட்ட விளம்பரங்கள் பலவற்றை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் காணக்கிடைக்கின்றது. இவ்வாறு மொழி மாற்றம் செய்யப்பட்டு அச்சிடப்படும் ஒலி, ஒளிபரப்புச் செய்யப்படும் விளம்பரங்களின் பின்னணி பற்றி சிறிதளவேனும் அறிய முனைவது நல்ல விடயமே.

மொழிபெயர்ப்பு அடிப்படையானதும் உலகளாவியதுமான உரிமையாகிவருகிறது. பொதுவாக எழுத்துவடித்திலோ அல்லது பேச்சுவடிவத்திலோ ஒருமொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றம் செய்யப்படுகின்றது. இன்று இதுவொரு பிரபலமான துறையாக உருவாகிவருவதுடன் வேறுபட்ட மொழியையும் கலாச்சாரத்தையும் கொண்டமக்கள் வாழ்கின்ற சமூகத்தில் ஒருபாலமாக பணியாற்றுகின்றது. மொழிபெயர்ப்பு தற்காலத்தில் இலக்கியம், மருத்துவம், ஊடகம், சட்டம், வணிகம், தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை, விளம்பரம், விளையாட்டு, உணவு என்று பல துறைகளுக்கு பயணிக்கின்றது. இவற்றில் விளம்பரங்கள் மிக முக்கியமானவை.

விளம்பரங்கள் சமூகத்தில் ஒரு பெரும் பங்குவகிக்கின்றன. ஒரு பொருளையோ, சேவையையோ நன்கு விளம்பரப்படுத்தாதுவிட்டால் நுகர்வோர் மத்தியில் பிரபல்யமாகாது. விளம்பரதாரர் அவரது வியாபாரத்தை, வணிகத்தை விருத்தி செய்யவும் தனது கருத்தை ஏனையோரிடம் பகிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும் நேரடியாக அல்லாமல் பணத்தை செலவுசெய்து விளம்பரத்தை மேற்கொள்கின்றார். விளம்பரமொழிபெயர்ப்புத் துறையானது வெகுவாக முன்னேறி வருகின்றது. கம்பனிகளிடையே அதிகரித்துவரும் போட்டித்தன்மையால் அவை தமது தயாரிப்புக்களைப் பல்வேறு இடங்களிலும் விஸ்தீரணப்படுத்த முயற்சிக்கின்றன. இச் சந்தர்ப்பத்தில் மொழிபெயர்ப்பாளர் பொறுப்பான பணியை எடுத்துக்கொள்வதுடன் பொருட்களினதும் சேவைகளினதும் விளம்பரங்களை இலக்கு வாசகர்களது சமூகத்திற்கு ஏற்றவண்ணம் மொழிபெயர்க்க வேண்டியுள்ளது. ஒரு வெற்றிகரமான விளம்பர மொழிபெயர்ப்பு என்பது இலக்குமொழியானது மூலமொழியின் அதே அம்சங்களையும் கொண்டிருப்பது ஆகும். விளம்பரமொழிபெயர்ப்பு ஏனைய மொழிபெயர்ப்புக்களை விடச் சவாலானதாக இருக்கின்றது. ஏனெனில் மொழிபெயர்ப்பாளர் இலக்குநுகர்வோரின் கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

அச்சுவிளம்பர மொழிபெயர்ப்புக்கள் பற்றிப் பல ஆய்வாளர்கள் ஏனைய வெளிநாடுகளில் பல ஆய்வுக்கட்டுரைகளை மேற்கொண்டுள்ளனர். வெளிநாடுகளில் விளம்பரம் பாரிய வணிகத்துறையாகக் காணப்படுகின்றது. அதனால் விளம்பரமொழிபெயர்ப்புப் பிரபல்யமான பணியாக விளங்குவதுடன் பல விளம்பரமொழிபெயர்ப்பு நிறுவனங்களும் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் விளம்பரத்துறை ஆய்வு வளர்ந்து வந்தாலும் விளம்பரமொழிபெயர்ப்பு வளர்ச்சியடையாமலேயே காணப்படுகின்றது. இலக்கிய மொழிபெயர்ப்பு வளர்ச்சியடைந்து வருவதைப் போல் வேறுமொழிபெயர்ப்புக்கள் வளர்ச்சியடையவில்லை என்றே கூறலாம்.

விளம்பரமொழிபெயர்ப்பில் நிகரன் முக்கியமான அம்சமாகும். மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடும் போது சொற்கள், வாக்கியம், இலக்கணம், கலாச்சாரம் என்பவற்றின் நிகரன்களை கவனிக்கவேண்டியுள்ளது. கூடியளவு விளம்பரமொழிபெயர்ப்பில் பொருத்தமான நிகரன்களைப் பயன்படுத்துவது மொழிபெயர்ப்பைத் தரமானதாக்கும்.

ஒரு வெற்றிகரமான விளம்பரமானது நுகர்வோரின் தேவைகள், விருப்பங்களை கவனத்திற்கொண்டு உருவாக்கப்படுகின்றது. விளம்பரத்தின் பிரதான நோக்கம் நுகர்வோரைக் கவர்வதாகும். இதனால் பல அழகியல் பணிகள் பயன்படுத்தப்படுவதுடன் விளம்பரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அதற்கென ஒருபாணி பேணப்படுகின்றது. இவ்விளம்பரங்களை மொழிபெயர்க்கும் போது மொழிபெயர்ப்பாளர் அவற்றை மாறுபடாமல் இலக்குமொழிக்கு கொண்டுசெல்லவேண்டும்.

விளம்பரமொழிபெயர்ப்புக்களில் ஒலிபெயர்ப்பு அதிகளவில் உபயோகப்படுத்தப்படுகின்றது. பொருட்கள் சேவைகளின் பெயர்கள், இடங்களின் பெயர்கள், நபர்களின் பெயர்கள், திட்டங்களின்(scheme) பெயர்கள் என்பவை ஒலிபெயர்க்கப்படுகின்றன. தற்காலத்தில் ஒலிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளரின் ஒரு உத்தியாகவுள்ளது. குறிப்பிட்ட சொற்கள் அதற்கென கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் ஒலிபெயர்ப்பையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துகின்றனர். ஏனெனில் மக்கள் மூலச்சொற்களை அவற்றின் கருத்துக்களைவிட அதிகளவில் அறிந்துள்ளனர்.

உள்ளூர்மயமாக்கலில் ஒரு விளம்பரம் விற்கப்படப்போகின்ற அல்லது பயன்படுத்தப்படப்போகின்ற இடத்தினது மொழியின் கலாச்சாரத்திற்கு ஏற்றபடி அமைக்கப்படுகிறது. பலதரப்பட்ட நாடுகளில் இருந்தும் பொருட்கள் சேவைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவற்றில் குறிப்பிட்ட நாடுகள் சமூகத்திற்கு ஏற்றவண்ணம் உள்ளூர்மயப்படுத்தப்படுகின்றது. இதில் ஒரு மொழிபெயர்ப்பாளன் நினைவில் கொள்ளவேண்டியது. இலங்கையில் மொழிபெயர்ப்பு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் விளம்பரமொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு ஊடகக்கற்கைகளில் அறிமுகப்படுத்தப்படுவது சிறந்தது. இதனால் எமது நாட்டில் எதிர்காலத்தில் தரமான விளம்பரமொழிபெயர்ப்புக்களும் தரமான மொழிபெயர்ப்பாளர்களும் உருவாகுவர்.

அச்சூடகத் துறைகளில் விளம்பரமொழிபெயர்ப்புக்கு தனியான பகுதி கொண்டுவரப்படவேண்டும். வெளிநாடுகளோடு ஒப்பிடும் போது எமது நாட்டில் விளம்பரமொழிபெயர்ப்பு உரியமுறையில் முன்னேறாமல் உள்ளது. ஒவ்வொரு பத்திரிகை நிறுவனங்களிலும் விளம்பரமொழிபெயர்ப்புக்குத் தனியானபகுதி கொண்டுவரப்பட்டால் விளம்பரமொழிபெயர்ப்பு ஏனைய நாடுகளைப் போல தரமானதாகவரும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை, தொழில்முறை மொழிபெயர்ப்பாளர்கள் அச்சூடகத் துறைக்கு தேவை. ஆங்கிலம், தமிழ் தெரிந்தவர்கள் மொழிபெயர்ப்பு செய்யும் போது விளம்பரமொழிபெயர்ப்பு தரமானதாக அமையாது. ஏனெனில் இருமொழிகளும் தெரிந்த ஒருவரால் சிறந்த மொழிபெயர்ப்பைக் கொடுக்கமுடியாது. அவர் மொழிபெயர்ப்பு நுட்பங்கள், பாணி, அறங்கள், யுக்திகள், முறைகள் தெரிந்தவராக இருக்கவேண்டும். எனவே முறைப்படி பயிற்றப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் அச்சூடகங்களில் இணைக்கப்படவேண்டும்.

விளம்பரங்கள், அச்சூடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் (வானொலி,தொலைக்காட்சி) இணையம் என்பவற்றில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாறு பல ஊடகங்கள் இருந்தபோதிலும் அச்சூடகங்கள் சாதாரண மக்களுடன் இலகுவாக தொடர்புபடுகின்றன. இதனால் அச்சுவிளம்பரங்கள் சமூகத்தில் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அச்சுவிளம்பர மொழிபெயர்ப்பில் பத்திரிகை, சஞ்சிகை, துண்டுபிரசுரங்கள், விளம்பரபலகைகள், சுவரொட்டிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மொழிபெயர்ப்பாளர் இவற்றை மொழிபெயர்ப்பது அவர்களது பொறுப்பான பணியாக உள்ளது.

விளம்பரமொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளர் பலயுக்திகளைக் கையாளுகின்றார். விளம்பரமொழிபெயர்ப்புக்கள் இலகுவாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும். அத்துடன் மொழிபெயர்ப்பின் போதுஅழகியல் அம்சத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். வேறுபட்டநாடுகள் அல்லது சமூகங்கள் வேறுபட்ட பண்பாடுகள், கலாசார பின்னணிகளைக் கொண்டிருக்கும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரமொழிபெயர்ப்பில் இலக்கு நுகர்வோரது கலாசாரத்தில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

இலங்கையில் மொழிபெயர்ப்புக்கற்கைகள் அண்மையிலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இதுவரையில் அதிகளவில் விளம்பரமொழிபெயர்ப்புக்கள் பற்றி எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாததுடன் விளம்பரமொழிபெயர்ப்புத் தொடர்பில் நூல்கள் கட்டுரைகள் போன்றனவும் காணப்படவில்லை.

அச்சூடகங்களில் விளம்பரமொழிபெயர்ப்புக்களுக்கென தனிப்பகுதி காணப்படவில்லை. விளம்பரங்களுக்கென தனிப்பகுதி ஒதுக்கப்பட்டு இருந்தாலும் அவர்களை விளம்பரமொழிபெயர்ப்பிற்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுத்ததாக தெரியவில்லை. இது எமது நாட்டில் முக்கிய பிரச்சனையாக உள்ளது.

அத்துடன் எமது நாட்டிலுள்ள பத்திரிகை நிறுவனங்களில் விளம்பரங்களுகென முறையான மொழிபெயர்ப்புக்கள் இல்லை. தமிழ் ஆங்கிலம் இரண்டுமொழிகளும் தெரிந்தவர்கள் விளம்பரங்களில் சொற்களை மாற்றி மொழிபெயர்ப்பினை மேற்கொள்கின்றனர். இதனடிப்படையில் தரமான மொழிபெயர்ப்பு வருவதற்கு வாய்ப்பில்லை

விளம்பர மொழிபெயர்ப்புக்கள் அதிகளவில் உபயோகப்படுத்தப் படுகின்றன. விளம்பரத்தின் பாணியைப் பேண ஒலிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டாலும் அதற்குரிய (இணையான) சொற்கள் காணப்படும் சந்தர்ப்பங்களிலும் அதிகளவில் ஒலிபெயர்ப்பைப் பயன்படுத்துவது மொழிபெயர்ப்பின் தரத்தைக் குறைக்கின்றது.இதனடிப்படையில் நோக்குகின்றபோது பெரும் வருமானத்தை ஈட்டுவதற்கு வழிவகுக்கின்ற விளம்பரம் என்னும் தொடர்பாடற் கருவியின் கருத்தாவாக விளங்குகின்ற மொழி என்னும் பாரிய விடயப்பரப்புப் பற்றியும் அந்த மொழியால் ஏற்படுகின்ற இடர்பாடுகளிற்கான தீர்வைகளை முன்மொழிவதில் மொழிபெயர்ப்பாளரின் இன்றியமையாமை பற்றியும் சிந்தித்தே ஆகவேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். அதுவே சிறந்த விளம்பரத் தொடர்பாடலுக்கும் வழிவகுக்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Translation of poetry from English To Tamil**

புலம்பல்

By.S.Tishika



விளக்கோரமாய் அமர்ந்திருந்த
அவள் நெஞ்சம்
மரித்த சகோதரிக்காய் உருகியது
அவள் கவனக்குறைவுகளுக்காய்
அவள் தவறுகளுக்காய்
அவளைக் கடிந்துகொள்ள எவருமில்லை
இப்போது
ஊடுருவும் பார்வையுடன் அளவளாவிய
ஆடவர்களெவருமில்லை அவளை
ஆராய்வதற்கு,
ஆடை அணிவிக்கவும் உணவூட்டவும்
எவருமில்லை
திரியைத் தணித்து
பாயில் கிடந்து
விம்மி அழுதாள்
இறந்த அவள் சகோதரிக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Translation of poetry from English To Tamil**

நச்சுமரம்

**By: R.Ronald**



என் நண்பனுடன் சினம் கொண்டேன்
என் சினத்திடம் கூறினேன்
என் வெஞ்சினம் அழிந்தது
என் எதிரியுடன் சினம் கொண்டேன்
அதை கூறாமல் மறைத்தேன்
என் வெஞ்சினம் வளர்ந்தது
அல்லும் பகலும்
என் விழிநீர் கொண்டும்
அச்சங்கள் கொண்டும்
அதற்கு நீரூற்றினேன்
மென்மையான வஞ்சமிகு தந்திரங்களாலும்
கள்ளச்சிரிப்பினாலும்
அதற்கு ஒளியூட்டினேன்
செழித்த பழமொன்று கனிந்துவரும் வரை
இரவும் பகலுமாய் இது வளர்ந்தது
இதன் செழிப்பை பார்த்திருந்த எதிரி
இது என்னுடையது என்பதை அறிந்திருந்தான்
துருவமதை இருள் மூடிக்கொள்ளும் வேளையிலே
திருடுவதற்காய் என் தோட்டம் புகுந்தவன்
மறுநாள் மரத்தடியில்
மாண்டு கிடப்பதைக்
கண்டு மகிழ்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Translation of poetry from English To Tamil**

முழு உலகமும் ஒருநாடக மேடை.

M.H.Farwin Hana

முழு உலகமும் ஒரு நாடகமேடை-
அதில்
ஆனைத்து ஆடவர்களும்
பெண்டிர்களும்
வெறும் நடிகர்கள்
தோன்றுவர்-மறைவர்
ஒருவருக்குப் பல பாகங்கள்
ஏழு வயதுக் கட்டங்கள்

முதற்கட்டம், சிசு
தாதியின் அணைப்பில்
சிணுங்கலும் வாந்தியும்

பின், புத்தகப் பையுடன் அழும்
பள்ளிப் பையன்,
மிளிரும் புலர் முகமும்
பள்ளிக்கான நத்தைநகர்வும்

அடுத்த கட்டம்,
உலைக்களம் போல்
கொதி ஏக்கத்துடன் காதலன்,
தலைவியின் புரவ நெகிழ்வால்
ஒருவருத்தம் தோய்ந்த நாட்டுப்புறப்
பாடல்
இசைத்தபடி

தொடர்ந்து,
வினோத பற்றுறுதிபூண்டு போர்வீரன்,
சிறுத்தைப்புலி தாடி
புகழில் அவா
சர்ச்சைக்கோர் அதிரடி வேகம்
பீரங்கி முனையிலும்
வீண் பெருமை தேடுபவன்

அடுத்தகட்ட வேடம்,
நீதிபதி
நன்கு விதைஅடித்த சேவல்
அடக்கமான வட்டத் தொப்பை
உக்கிரப் பார்வை
முறையாகக் கத்தரித்த தாடி
கூரிய அறி(வு)வாள்கள்
புதுக் கோரிக்கை பெற்றவர்

ஆறாம் கட்டக் காட்சியில்
காலணிகளுடன் நலிவடைந்த
பெண்டலூன்,
நாசி நுனியில் மூக்குக்கண்ணாடி
பக்கம் ஒரு சுருக்குப்பை
இளமையில் காத்த காலுறை
மிகப் பரந்த உலகம்
வலிமைகுன்றிய கால்கள்
தடித்த ஆண்மை தரித்த தொனி
மீண்டும் திரும்பிய
மும்மடங்கு
குழந்தைப்புத்தி
சீழ்கையொலியும்
சுங்கானும்

இறுதிக்காட்சியாக,
விசித்திர சரித்திரத்தின்
ஈற்றில்,
இரண்டாம் குழந்தைப்பருவம்
வெறுமனே மறதி மட்டும்
நினைவில்
பற்களிழந்து
காட்சியிழந்து
சுவையறிவற்று
அனைத்தும் தொலைத்த நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைத் துளிகள்

## By K.Vinopa



ரிப்! ரப்! ரிப்! ரப்!

என் ஜன்னலோரத்தில்

ஒவ்வொன்றாய் விழுகின்றன

சின்னஞ்சிறு மழைத்துளிகள்!

அன்பான சிறுமழைத்துளிகளே

என் ஜன்னலோரத்தில்

நீங்கள் ஒவ்வொன்றாய் விழுவதை

நான் யாசிக்கிறேன்

ஆனால் அன்பான மழைத்துளிகளே

இடிமின்னலுடன் எங்களை பயமுறுத்தும்

அடைமழையாக மாறவேண்டாம்

என் ஜன்னலோரத்தில் மட்டும்

விழுங்கள் ஒவ்வொன்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேயொரு நிலவு



நான் குழந்தையாக இருந்தபோது
புதுநிலவு தொட்டிலிலும்
முழுநிலவு பாட்டியின் வட்ட முகத்திலும்
புதுநிலவு வாழைப்பழமாகவும்
முழுநிலவு பெரிய கேக் போன்றதெனவும்
நான் நினைத்தேன்
நான் குழந்தையாக இருந்தபோது பார்த்தது
நிலவையல்ல
நான் பார்ப்பதற்கு தேவையானதை,
இன்று பார்க்கிறேன்
நிலவை,
இதுதான் நிலவு!
ஒரேயொரு நிலவு!
அதில் ஒன்றுமில்லை
ஆனால் நிலவு இதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையற்ற பொம்மை

**By: A.A.M.Askar**



நான் கொண்டிருப்பது
இரண்டு மட்டுமே- ஒன்று
பலவீனமான பழைய என்பு- மற்றையது
உடைந்த மரப்பலகையால்
உருவம் பெற்ற காலின் ஒரு பகுதி

நான் அவமானப்படுகிறேன்
கையுறையை நினைத்து.
என் பாதத்தின் ஒரு நுனி
சேற்றில் புதைந்திருக்கின்றது.

நான் அணிந்திருப்பது
தொழிலாளியின் பழைய உடையே
மேற்சட்டை, சட்டை மற்றும்
காற்சட்டையே

மழையையும் வெயிலையும்
பனியையும் சூரியனையும்
குன்றுபோல்
என் தலைமீது தாங்குகின்றேன்

என் பார்வைகளால்
யாருக்கும் உதவமுடியாது
என்ன வேடிக்கை இது
என் தொப்பி நிறைய வைக்கோல்

பழக்கமில்லாப் பறவைகளே
ஏன் எப்போதும்
நீங்கள் தொலைவில் பறக்கின்றீர்கள்?
நான்தானே உங்களின் கூடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Greetings From

## Green Banking

With the onset of a digital age, youngsters are constantly on the lookout for practical and simple solutions that are also environmental friendly.

People's Bank encourages all youth to experience paperless banking and invites everyone of them to benefit from our digital services designed especially for the aspiring youth in this digital era.

- Bank Statements via E-mail
- VISA Debit and Credit Cards
- Mobile and Internet Banking
- People's Voice Banking Service
- Express Banking
- Self Banking

## Be Empowered In a World of Endless Opportunities

Digital BANKING with yes

YOUNG EXECUTIVE SAVER

For the youth who say yes to success

Say "YES We Can" for a digital future. The youth today is courageous and ambitious, constantly working towards achieving their destiny in a dynamic world, endlessly striving for success. People's Bank introduced the YES Savings Account to further empower your passion to succeed. The YES Account is now fully digital simply because we are future-oriented just as you are.

For more details call us on our hotline 1961

PEOPLE'S BANK

www.peoplesbank.lk

peoplesbanksrilanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org